மாதுமை மழலைகள் கல்விப்பூங்கா

மாதுமை

இளமையில் கல்வி சிலையில் எழுத்து

சிறப்பு மலர்

2005



"மகுடம்"

(பரிசில் நாள் சிறப்பு மலர்)

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா

மட்டுவில் - சாவகச்சேரி.

2005

மலரின் பெயர்:- **மாதுமை**

உரிமை:- **மாதுமை மழலைகள் கல்வீப் பூங்கா,**
பாடசாலை அபிவிருத்திச் சபை,
மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

பதிப்பு:- 18 - 12 - 2005

பக்கங்கள்:- 106 + xvi

வடிவமைப்பு - திருக்கணித பதிப்பகம்,
114, டச்சு வீதி,
சாவகச்சேரி.

அட்டை:- **சுரபி பதிப்பகம்,**
யாழ்ப்பாணம்.

ஆசியுரை

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து 2005–ம் ஆண்டு பரிசில் நாள் நடைபெற இருப்பதையறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இந்த முன்னேற்றம் ஆசிரியையின் முயற்சியினால் தான் ஏற்பட்டது.

சாதாரணமாக பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பது சிரமமான காரியம். அதிலும் மழலைகளுக்கு கல்வியூட்டுகின்ற ஆசிரியை எவ்வளவோ சிரமப்பட்டே கல்வியைப் போதிக்கின்றார். அந்த வகையில் ஆசிரியையை நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

கல்விப் பூங்காவின் பரிசில் நாளை முன்னிட்டு வெளிவரும் "மாதுமை" எனும் சிறப்பு மலருக்கு ஆசி வழங்குவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வியின்றி எவரும் எந்த வகையிலும் வாழ்க்கையை வளமாக்குவது கஷ்டம். வாழ்க்கைக்கு கல்வி இன்றியமையாதது. மழலைகளுக்கு கல்வியைப் போதித்து வரும் பூங்காவை ஞாபகப்படுத்தும் வகையிலே வெளிவரும் "மாதுமை" என்னும் சிறப்பு மலர் அறிஞர்களின் ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்டு என்றும் வாடாமல் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும், மாதுமை கல்விப் பூங்கா மென்மேலும் வளர்ந்து புதிதாக வரும் மழலைகளுக்கெல்லாம் கல்வி புகட்டி முன்னேற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வழுத்தி ஆசீர்வதிக்கின்றேன்.

சி. சிதம்பரநாதக் குருக்கள்
திருக்கணித நிலையம்
மட்டுவில்

அருள் ஆசிச்செய்தி

அன்புள்ளவர்கட்கு,

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா பரிசளிப்பு விழாவில் 'மாதுமை என்னும் நூல் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். இன்றைய மழலைகளை மனித நேயத்தோடு வளர்த்தெடுக்கின்ற கல்வியை இளமையில் கொடுக்கின்ற முன்பள்ளிகள் நிறைவான பணிகளை ஆற்றி வருகின்றன. இப்பணிக்கு ஊக்கம் கொடுக்கும் வகையில் முன்பள்ளி ஆசிரியருக்கான அறிவு சார்ந்த ஆக்கங்களைத் தாங்கி மாதுமை என்னும் நூல் வெளிவருவது ஆசிரியருக்கு ஊக்கத்தை கொடுப்பது ஆகும். மட்டுவில் கிராமத்தின் பழமையையும், பெருமையையும் சிறப்பித்து கட்டுரைகளை அமைத்து இந்நூலை வெளியிடும் ஆசிரியரை வாழ்த்துகின்றோம். கல்விப் பூங்கா சிறப்பான பணியை ஆற்றி நிறைவான சமுதாயத்தை உருவாக்க இறைவன் ஆசீர்வதிப்பாராக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

வாழ்த்துரை

எங்கள் நாட்டுக் கல்விப் பாரம்பரியத்தில் தற்போது முன்பள்ளிகள் சிறப்பிடம் பெறுகின்றன. பிள்ளைகளின் வளர்ச்சியில் ஆரம்பக்கல்வி மிக முக்கியமானது. அத்துடன் ஆடலும், பாடலும், கதை சொல்லலும், நடித்தலும் முன்பள்ளிகளில் சிறப்பிடம் பெறவேண்டும். சிறுபிள்ளை களுக்கு ஆர்வம் ஊட்டும் கல்விதான் தேவை. அந்தக் கல்வியினால் பாடசாலைகளுக்கு அவர்கள் உற்சாகமாக அடியெடுத்து வைக்கமுடியும். எழுத்தையும் கணக்கையும் திணித்துவிட்டால் மழலைகளுக்கு ஆரம் பத்தில் ஒரு வெறுப்பை ஏற்படுத்திவிடும். இதனைக் கருத்தில் கொண்டு மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா இயங்கி வருவது மகிழ்ச்சிக்குரியது. மேலும் மேலும் இந்த நிறுவனம் ஓங்கி உயர வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.

வாழ்த்துரை

அள்ள அள்ள குறையாத செல்வம் கல்விச் செல்வம். ஏழேழு பிறப்பினும் கரையாத செல்வம் இச் செல்வம். பொருட் செல்வத்தைக் காட்டினும் இச் செல்வம் மேலானது. ஆகவே "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற முதுமொழிக்கமைய இச் செல்வத்தை ஈட்ட அயராது உழைப்பது எம் கடமை. இச் செல்வத்தை அள்ளி அள்ளி ஊட்டுபவர்கள் தெய்வீகப் பிறவிகள். இவர்கள் பாடசாலைகள், கல்லூரிகளில் மட்டுமன்றி முன்பள்ளிகளிலும் ஆற்றிவரும் பணி அளவிடக்கரியது.

இப் பணியில் மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா வகித்திடும் பங்கு அளப்பரியது. மேற்படி பூங்கா 1996 – ம் ஆண்டு முதல் யாழ் மாவட்டத்தில் இச் சேவையிற் தன்னிகரற்றுத் திகழ்கின்றது. மேலும், 2005 – ம் ஆண்டின் பரிசில் நாளில் "மாதுமை" எனும் பெயரிற் சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட்டு வைப்பதன் மூலம் பெருமையடைகின்றது. பூங்காவில் பூத்திடும் இப் புதுமலர் மணம் பரப்பிட உமையொருபாகன் அருள்பாதம் பணிந்து இறைஞ்சுகின்றேன். வாழ்க பூங்கா! வளர்க மழலைப் பூக்களின் அறிவும் ஆற்றலும்!

செல்லமுத்து ஸ்ரீநிவாஸன்
பிரதேச செயலர்
தென்மராட்சி,

வாழ்த்துரை

"மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா" 2005–ம் ஆண்டில் வெளியிடவுள்ள "மாதுமை" எனும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இம்மலர் முன்பள்ளி பற்றிய பல்வேறு பரிமாணங்களை வீளக்குகின்ற ஆக்கங்களை தன்னகத்தே கொண்டு வெளிவருவது சிறப்புக்குரியதாகும்.

ஒரு நாட்டின் கல்வி மேம்பாடு அடையவேண்டுமாயின் முன்பள்ளிக் கல்வி கட்டுக் கோப்புடன், தரமானதாக அமைய வேண்டும். கல்வியில் முன்னேறிய நாடுகள் யாவும் தமது முன்பள்ளிக் கல்வியை சிறப்பாக வடிவமைத்துக் கொண்டவையே ஆகும். கனடா நாட்டிலே பாலர் கல்வி (முனைநச பயசனநல) பாடசாலைக் கட்டமைப்புக்குள்ளேயே சேர்க்கப் பட்டிருப்பது சிறப்பான அம்சமாகும்.

அந்த வகையில் எமது நாட்டிலும் கல்விச் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்ட காலங்களில் கல்வி அறிக்கைகளில் முன்பள்ளிக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் அவை நடைமுறைக்கு கொண்டு வரப்படாமை பெரும் குறைபாடே எனலாம். 1997 பொதுக் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுவதற்கான முன்மொழிவுகள் காணப்பட்டன. அதற்கிணங்க எமது பிரதேச முன்பள்ளிகள் வலயக் கல்வித் திணைக்களத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வை, ஆலோசனை, வழிகாட்டலின் கீழ் செயற்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இருந்தும் முன்பள்ளிகள் பெரும்பாலும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் உதவியுடனேயே இயங்குகின்றன.

முன்பள்ளிகள் சிறப்பாக இயங்க வேண்டுமாயின் கலின் நிலையான பொருத்தமான கட்டிடம், பொதுவான பாடவிதானம், தேர்ச்சியுள்ள ஆசிரியர், பொருளாதார வளம் என்பன அவசியமானவையாகும். இந்த வகையில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா பரீசில் நாளில் தம் மழலைகளை ஊக்கப்படுத்துவதோடு முன்பள்ளி, மழலைகள், மற்றும் கல்வி சார்ந்த அரிய கருத்துக்களை சமூகத்தில் விதைக்கும் வகையில் துறை சார்ந்த அறிஞர்களின் ஆக்கங்களை தொகுத்து இம்மலரை வெளியிடுவது போற்றுதற்குரிய சாதனையாகும். அதில் பங்கு கொண்ட அனைவரையும் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி.

திருமதி சி. வேதநாயகம்
கல்விப் பணிப்பாளர் கல்வி வலயம்
தென்மராட்சி.

வாழ்த்துரை

மழலைகள் கல்வியில் பிள்ளையின் இயல்பும், அவர்களின் விருத்தியும் முக்கிய அம்சங்களாகும். பிள்ளைக்கு வெற்றுரைகள் மூலம் அனுபவங்களை பெற்றுக் கொடுக்க முடியாது. உண்மைப் பொருட்கள் மூலம் பிள்ளைகள் தொட்டு, உணர்ந்து, முகர்ந்து ஐம்புலன்களினூடாக அனுபவங்களை பெறுவதன் மூலம் திறன்களை வெளிக் கொணரக் கூடியதாக இருக்கும்.

இந்த வகையில் மாதுமை மழலைகள் பூங்கா என்னும் முன்பள்ளி கடந்த ஒன்பது ஆண்டுகளாக இப்பிரதேச பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகப் பெருந்தொண்டாற்றி வருகின்றது. நவீன கல்வியுலகில் முன்பள்ளிக் கல்வி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிக முக்கியமானதாகவுள்ளது.

இதனால் எமது பிரதேச மக்களும் சிறார்களின் கல்வியில் மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் காட்டி வருகின்றனர்.

"மாதுமை" என்னும் சஞ்சிகை முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் சிறார்களின் கல்விக்குத் தேவையான அனுபவங்களைக் கொடுக்கக் கூடிய கட்டுரைகளை தாங்கியுள்ளது. இச்சஞ்சிகையின் ஆசிரியர் சி. சிவகாந்தன் பல்வேறு கல்வி அறிஞர்களிடம் பெற்றுக் கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தேவையான அனுபவங்களை தொகுந்து "மாதுமை" சஞ்சிகையினை வெளியிட்டுள்ளார். இது பெரும் போற்றுவதற்கும் பாராட்டுதலுக்குமுரிய கல்வி செயற்பாடாகும்.

"மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா" தொடர்ந்து வரும் காலங்களிலும் தமது கல்விச் சேவையை இப்பிரதேச மக்களுக்கு வழங்கு வருவதுடன், அதற்கு பெற்றோர்களின் ஆதரவும், இருக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

எஸ். கே. யோகநாதன்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
மேலதிக பீடாதிபதி

வாழ்த்துரை

மழலைச் சொத்துகளின் கைகளில் தான் எமது சமூகத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது எனும் உண்மையை உணர்ந்து அயராத முயற்சியினால் திரு. சி. சிவகாந்தன் அவர்கள் முதன் முயற்சியாக வெளிவரும் "மாதுமை" எனும் சிறப்புமலர்த் தொகுப்பிற்கு வாழ்த்துரை வழங்கும் பாக்கியம் கிட்டியதையிட்டு பெருமிதம் அடைகின்றேன்.

முன்பள்ளி ஆசிரியர்கள் கல்லூரிக் காலத்தில் வெறுமனே புத்தகப் படிப்புடன் நின்று விடாமல் இத்தகைய நூல் வெளியீட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் அவர்கள் ஆளுமையையும் அறிவையும் பண்புகளையும் வளர்த்துக் கொள்ளலாம் என நம்புகின்றேன்.

"மனிதனாகப் பிறந்த நீ வாழ்ந்து மறைந்ததற்குச் சான்றாக உன் பின்னால் அழியாத எதையாவது விட்டுச் செல்" என்ற விவேகானந்தரின் சுற்றுக்கிணங்க சிவகாந்தன் அவர்கள் முன்பள்ளி தொடர்பாக பல ஆராய்ச்சி செய்கின்றார். அவற்றின் ஒரு கட்டமாகவே "மாதுமை" எனும் நூல் வெளியீடும் அமைந்துள்ளது.

போட்டி போட்டுக் கொண்டு ஓடுகிற இன்றைய உலகில் படிக்கவோ, இரசிக்கவோ, கேட்கவோ, பொறுமை உள்ளவர்களை பொறுக்கி எடுப்பது கடினமான காரியம் இங்கு பல வழிகாட்டலை இரத்தினச் சுருக்கமாக முதன்முதலாக "மாதுமை" முன்பள்ளி தனது பெயரில் இப்புத்தகத்தை வெளியீடுவதையிட்டும், பாராட்டுகின்றேன்.

கடுகு சிறிது காரம் பெரிது என்பார்கள். அதற்கு அமைய வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் – யாழ் மாவட்ட – தென்மராட்சி வலய – சாவகச்சேரி பிரதேச – மாதுமை முன்பள்ளி மேலும் மேலும் வளர பல ஆக்கங்கள்வெளிவர வேண்டும், என்பதை கூறி இவ்வெளியீட்டு விழா சிறப்புற நடைபெற வேண்டுமென எனது நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

திருமதி சி. சந்திராதேவி
பிரதேச இணைப்பாளர், சாவகச்சேரி,
முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம்.

அகம் மகிழ்ந்து வாழ்த்தும் பாராளுமன்ற உறுப்பினர்.....

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்வீப் பூங்காவின் 2005ம் ஆண்டு பரிசில் நாளை முன்னிட்டு வெளிவரும் "மாதுமை" என்னும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை இட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

உலகமே இன்று கணணி மயமாகி தனது உயர்வுப் பாதையில் உயர்கின்ற வேளையில்... மட்டுவில் மாதுமை முன்பள்ளியும் தனது உயர்வுப் பாதையில் முன்னேறி வருகின்றது. இப் பாடசாலையுடன் எனக்கு மிக நெருக்கமான தொடர்புண்டு. இதனுடைய வளர்ச்சியை நான் கண்டு வருகின்றேன். அந்த வகையில் பூங்காவில் பூத்திடும் இப் புதுமலர் நறுமணம் வீசிட வாழ்த்துகின்றேன்.

மாதுமை என்னும் இச் சிறப்பு மலர் பல துறைசார்ந்த அறிஞர்களின் ஆக்கங்களை தன்னகத்தே கொண்டு கனமான காத்திரமான ஒரு நூலாக வெளிவருகின்றது. இம் மலர் எனது பிரதேசத்தில் முதன்முதல் வெளிவருவதை இட்டு அகம் மகிழ்கின்றேன். இம் மலரை ஆக்கிய மலராசிரியர் திரு. சி. சிவகாந்தனுக்கு எனது பாராட்டுக்கள். இவருடைய பணி தொடர இறைவனை வேண்டுகின்றேன். இம் மலர் சிறப்பாக வெளிவர வாழ்த்துக்கள் கூறி அமைகின்றேன்.

நன்றி

என்றும் மக்கள் சேவையில்
நடராசா இரவிராஜ்
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ். மாவட்டம்.

வாழ்த்துச் செய்தி

மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவை நடாத்தி வருபவர்கள் வெறுமனே கல்விக்கான பௌதீக வசதிகளை மட்டும் ஏற்படுத்திக் கொடுப்பவர்கள் அல்லர். கல்வியை முழுமையாக புரிந்து கொள்ளலூடாகவே நடத்த முற்படு கின்றார்கள். கல்வி பற்றிய, கல்வியின் பல்வேறு பரிமாணங்கள் பற்றிய தேடலோடு கல்வித்துறை சார்ந்த புத்திஜீவிகளின் ஆய்வுகளுக்கு தூண்டுதல் அளித்து அவற்றை ஆவணப்படுத்தி நூலாகவும் வெளியிட முன்வந்திருக்கின்றார்கள்.

கல்வியின் அடி அத்திவாரமாக அமைவது முன்பள்ளிக் கல்வி. ஆனால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட துறையாக விளங்குவதும் இதுவே. இந்நிலையில் இக்கல்வியை முறையாக மழலைகளிற்கு வழங்கவேண்டும். என்ற பேரவாவினால் இவ்அமைப்பினர் இம்முயற்சியில் இறங்கியிருக்கின்றார்கள். இம்முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கது.

இந்நூல் ஆசிரியர்களிற்கும், ஆசிரியக் கல்வியை மேலும் மேம்படுத்த விழையும் கல்விசார் அலுவலர்களுக்கும், ஆய்வுகளில் ஈடுபடும் கல்வித்துறை மாணவர்களுக்கும் மிகவும் பயனுடையதாக அமையும். இவ் அமைப்பினரை கல்விச் சமூகம் மேலும் உற்சாகப் படுத்த வேண்டும் என்பது எனது ஆசை. இவர்கள் பணி மேலும் தொடர எனது ஆசிகள் உரித்தாகுக.

பத்மினி சிதம்பரநாதன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ் மாவட்டம்.

சிரேஷ்ட ஆசிரியை திருமதி ஞா. காந்திகுமார் அவர்களின் உள்ளத்திலிருந்து.....

தென்மராட்சியின் இதயம் போன்று விளங்கும் நன்னகராம் சாவகச்சேரியில் எழில் கொஞ்சும் மட்டுவில் கிராமத்திலே இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தாபிக்கப்பட்ட "மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா" தனது கல்விப் பயணங்களிலே இன்று ஒன்பது ஆண்டுகளைக் கடந்திருப்பது போற்றுதலுக்கும் மகிழ்ச்சிக்குமுரிய விடயமாகும். உண்மையிலேயே ஒரு குழந்தையானது குடும்பத்திலிருந்து முதன்முதலில் பலரும் வாழ்கின்ற சமூகத்தில் இணையும் இடமாக விளங்குவது முன்பள்ளியே ஆகும். தாயின் அரவணைப்பிலிருந்து வருகின்ற மழலைகளை கனிவோடு அணைத்து கல்வியூட்டுவது என்பது சாதாரணமானதோ இலகுவானதோ அன்று. அத்தகையதோர் சீரிய சேவையினை ஆற்றி வருகின்ற அமைப்பு இந்த முன்பள்ளிகளே என்றால் மிகையாகாது.

பள்ளிப் பாலகர் முதல் பல்கலைக்கழக மாணவர் வரை அனைவருக்கும் அகரம் தொட்டு சகல விடயங்களையும் அறிவதற்கு அத்திவாரமிடுவது முன்பள்ளிகளே ஆகும். அந்த வகையிலே "மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா" ஆனது மட்டுவில் வாழ் மழலைகளுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகின்றது. 2000–ம் ஆண்டில் ஏற்பட்ட பாரிய இடப் பெயர்வு காரணமாக எவ்வளவோ இழப்புகளுக்கு முகங்கொடுத்த போதிலும் தொடர்ந்தும் ''முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்'' என்னும் முது மொழிக்கிணங்க முன்பள்ளிகளிடையே தாரகை நடுவே தண்மதியென விளங்குகின்ற இக் கல்விப் பூங்காவானது தனது கன்னி முயற்சியாக ''மாதுமை'' என்னும் இம் மலரை வெளியிட்டிருப்பது மிகவும் பாராட்டுதலுக்குரிய ஒன்றாகும்.

இக் கல்விப் பூங்காவின் சிரேஷ்ட ஆசிரியர் என்ற வகையில் இம் மலர் வெளியீட்டிற்கு எனது நல்வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். மேலும் இந் நிறுவனத்தின் கல்விப் பயணமானது சிறப்புடன் இன்னும் பல்லாண்டு காலம் தொடர வேண்டுமென இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றேன்.

திருமதி ஞானகௌரி காந்திகுமார்,
சிரேஷ்ட ஆசிரியர்,
மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா,
மட்டுவில்.

இயக்குநர் சிந்தையிலிருந்து.....

பெருமை மிகு பதியாம் மட்டுவில் கிராமத்தில் 1996-ம் ஆண்டு யூன் மாதம் முதலாம் திகதி புதுப்பொலிவுடன் ஆரம்பமாகிய எமது பூங்கா இன்று ஒன்பது ஆண்டுகளை நிறைவு செய்கின்றது. இந்நிலையில் இவ்வருட பரிசில் நாளில் "மாதுமை" எனும் பெயரில் வெளிவரும் இச்சிறப்பு மலருக்கு இதழாசிரியராக இருக்கக் கிட்டிய பாக்கியத்தை எண்ணி மனம் மகிழ்கின்றேன்.

இச்சிறப்பு மலர் முன்பள்ளி சார்பான சிறப்பு ஆக்கங்களை துறைசார்ந்த பெரியவர்களினால் ஆக்கப் பெற்று வெளிவருகின்றது. அத்துடன் எமது கிராமம் சார்ந்த சிறப்புக் கட்டுரைகளும் இப் புதுமலருக்கும் அணிகலன்களாக திகழ்கின்றன. இவ்வாறான சிறப்பு ஆக்கங்களை எமது சிறு பூங்காவின் சிறு மலருக்கு தங்களின் சிந்தனைகளையும், ஆக்கங்களையும் தந்துதவிய அனைத்து பெரியவர் களுக்கும் எனது மனநிறைவான நன்றிகள். எமது பூங்காவில் பூத்திடும் இப் புதுமலருக்கு வாழ்த்தும் ஆசியும் தந்துதவிய பெரியார்களுக்கும் எனது மனம் நிறைவான நன்றிகள்.

இம்மலரில் எமது பூங்காவின் நினைவுச் சுவடுகளை உரிய முறையில் வடிவமைத்த "கவி போட்டோ அன் வீடியோ" உரிமையாளர் நண்பன் கவிறாஜ் அவர்களுக்கும் எனது நன்றிகள். இம்மலரை உரிய முறையில் உரிய காலத்தில் அச்சு வாகனமேற்றிய திருக்கணித பதிப்பகத்தார்க்கும் எமது மன நிறைவான நன்றிகள். மலருக்கான அட்டையினை உரிய முறையில் அச்சேத்தித்தத்த யாழ்ப்பாணம் சுரபி பதிப்பகத்தார்க்கும் எனது நன்றிகள். மீண்டும் யாவர்க்கும் எனது நன்றிகள் பல உரித்தாகட்டும்.

இம்மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் பற்றிய அனைத்து கருத் துக்களும் கட்டுரையாளர்களுடைய சிந்தனையாகும். இக்கட்டுரைகளை தொகுத்து வெளியிட்ட பணியே எனது பணியாகும். சிறியேனால் தொகுத்து பூங்காவின் பரிசில் நாளில் வெளியிடும் இம்மலரே அனைத்து பெரியவர்களும் வாங்கி வாசித்து பயனடைவதோடு எமக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவும் வண்ணம் வேண்டி அமைகின்றேன்.

"சிறியோர் செய்யும் தவறுகளை பெரியோர் பொறுப்பது கடன்"

இயக்குநர் - இதழாசிரியர்
சி. சிவகாந்தன்.

பாடசாலைக் கீதம்

பல்லவி

மாதுமை மழலைகள் பூங்கா - வாழ்க
மாதுமை மழலைகள் பூங்கா
மருதடி சூழலில் மட்டுவில் கிழக்கினில்
மலர்ந்து மணம் வீசும் பூங்கா

(மாதுமை...)

சரணம்

இலங்கையர் கணேசன் இலவசமாக
வழங்கிய வளம் மிகு காணியில்
பத்தொன்பது நூற்று தொண்ணூற்றாதில்
மலர்ந்தது மழலைகள் கல்விப் பூங்கா

(மாதுமை...)

ஆடலுடன் பாடல் விளையாட்டுக்களும்
பயிற்றிடும் எங்கள் பூங்கா - சிவ
காந்தன் ஐயா கட்டிடம் நிறுவி
இயக்கி வைத்த எங்கள் கல்விப் பூங்கா

(மாதுமை...)

பாலகர்கள் எங்களைப் பண்புடன் அன்புடன்
பயிற்றிடும் ஆசான்கள் வாழ்க
பாலர்கள் நாங்களும் வாழ்க - எங்களின்
மழலைகள் பூங்கா வாழ்க.

(மாதுமை...)

பொன். ஸ்ரீ. வாமதேவன்

பொருளடக்கம்

☞ பாடசாலைக் கீதம்

☞ ஆசியுரைகள்

☞ வாழ்த்துரைகள்

☞ மருதடியிலிருந்து... 1- 5

☞ மட்டுவில் பெற்ற மாமணி 6- 8

☞ பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை புகழ்மாலை 9- 11

☞ சரித்திரம் படைத்திடல் வேண்டும் 12-13

☞ இன்பத் தமிழினிலே காதல் கொண்டேன் 14

☞ தமிழ் மொழியின் சிறப்பு 15-16

☞ யாழ்ப்பாணச் சைவக் கல்விப் பாரம்பரியம் 17-20

☞ கற்றல் கோட்பாடுகளும் தகவல் நிரலிய அணுகுமுறையும் 21-28

☞ மாணவ மனங்களை வென்று செல்லும் ஆசிரிய செல்வாக்கு 29-33

☞ அடிப்படை மொழித்திறன்கள் பின்னடைவுகள் பின்புலங்கள் 34-38

☞ மழலைச் செல்வமும் முன்பள்ளியும் 39-42

☞ முன்பள்ளிக் கல்வி 43-47

☞ முன்பள்ளிகளின் வெற்றிகரமான முகாமையும் முன்பள்ளிகளின் தரமேம்பாடும் 48- 50

☞ குழந்தைக் கல்வியில் பெண்களின் பங்கு 51- 53

☞ முன் பிள்ளைப் பருவ உளநலமும் குடும்பமும் 54- 56

☞ சிறார்களின் விருத்தியில் உடற்கல்வி 57- 60

☞ குழந்தை உளவியலும் கற்பித்தல் நுட்பங்களும் 61- 64

☞ பிள்ளைப் பருவக் கல்வியில் - ஆடலும் பாடலும் 65- 66

☞ முன்பள்ளிக் கல்வியில் விழுமியக் கல்வியின் அவசியம் 67- 69

☞ சிறுவர் உரிமை 70- 72

☞ முன்பள்ளி பெற்றோர் பொறுப்புக்களும் கடமைகளும் 73- 74

☞ யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலய வரலாறு 75- 76

☞ ஆரம்பக் கல்வியில் கற்பித்தல் உத்திகள் 77- 79

☞ நற்சிந்தனை 80

☞ யா/மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலய வரலாறு 81- 85

☞ குழந்தை உளவியலும் சமயக் கல்வியும் 86- 90

☞ முன் பிள்ளைப்பருவ உளநலமும் குடும்பமும் 91- 93

☞ கிராமியத்தில் வாழ்ந்த காலம் 94- 96

☞ பிஞ்சுமனம் 97-103

☞ மரங்கொத்தியும் பச்சைக் கிளியும் 104-106

மருதடியிலிருந்து...

மட்டுவில் ஆ. நடராசா

கோயில் இல்லா ஊரிற் குடி யிருத்தலாகாதென்பது முதுமொழி. இந்த முதுமொழிக்கிணங்க, கோயி லில்லா ஊருக்குச் சென்று குடியிருப் போரும் தாமிருக்கும் இடங்களில் ஆலயங்களை அமைத்து வழிபட்டு வருகிறார்கள். அவர்களைப் போல மட்டுவிற்கிராம மக்களுக்குப் புதிதாக ஆலயம் அமைக்கவேண்டிய தேவை ஏற்படவில்லை.

திருவருள் விளக்கத்தோடு கூடிய இக்கிராமந் தோன்றும் போதே ஆலயமுந் தோன்றியது. மட்டுவில் வடக்குப் புராணக்கேணி மருதடித் தான்தோன்றி விநாயகர் ஆலயமே அவ்வாலயமாகும்.

தமிழ் நாட்டவரும் யாழ்ப் பாணத்தவரும் இனத்தால் மதத்தால் மொழியால் ஒன்றுபட்டவர்கள். அவர் கள் தமிழ்மொழியை வளர்ப்பதற்கும் சைவசமயத்தை வளர்ப்பதற்கும் ஒன்று பட்டு நின்று செயற்பட்டனர்.

ஆயிரமாண்டுகளுக்கு முன் பிருந்தே யாழ்ப்பாணத்திற் கந்தபுராணம் படிக்கப்பட்டு வந்தது. அதனால் மக்களது மனங்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் முளைத்துக் கொண் டிருந்தன. சைவசித்தாந்தமென்னும் பல்கலைக்கழகத்துக்கு புகுமுக வகுப்புப் போன்றது கந்தபுராணப் படிப்பு.

அக்கலத்திற் கடவுச் சீட்டுப் பெற்றுக் கொண்டு கடல் கடந்து இந்தியாவுக்குச் செல்ல வேண்டிய தேவை இருக்கவில்லை. எம்மூர் மக்கள் எவ்வித தடையுமின்றித் தென்னிந்திய திருத்தலங்களுக்கு யாத்திரை செய் தனர். கோயில் எனப்படும் சிதம்பரத்தை அவர்கள் தமது சொந்தக் கோயி லாகவே கருதினர்.

யாழ்ப்பாண இராட்சியத்தைப் பறங்கியர் கைப்பற்றினர். அந்நாட்களில் ஒருநாள் பறங்கியின் உணவுக்காகப் பசு மாட்டைக் கொடுக்கவேண்டிய தனது முறை வந்தபோது அதைத் தவிர்ப்பதற்காக நல்லூர் ஞானப் பிரகாசர் இரவோடிரவாக இந்தியா வுக்குச் சென்றார். அங்கிருக்கும்போது அவர் சிதம்பரத்தில் ஒரு குளத்தை வெட்டினாரென்பதும் சிவஞானசித்தி யாருக்கு உரை எழுதினார் என்பதும் உலகறிந்த செய்திகள்.

அக்காலத்தில் மட்டுவில், மறவன்புலோ, மாதகல், அராலி, கோப்பாய் முதலிய இடங்களில் வசித்த மக்கள் சிதம்பர தலயாத்திரை செய்யுங் காலங்களிற் தங்கியிருப் பதற்காக சிதம்பரத்தில் ஒரு மடத்தை அமைத்தனர். அதை நிருவகிப்பதற் காகத் தம்மூரிலுள்ள தமது காணிகளிற் சிலவற்றையும் அம்மடத்துக்குத் தரும சாதனஞ் செய்தனர். அம்மடம் சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோயிற் செவ்வாய்க்கிழமை மடமெனவும் அம் மடச் சொத்துக்களைப் பராமரித்த சபை

சிதம்பரம் அம்பலவாண சுவாமி கோயிற் செவ்வாய்க்கிழமை மடத் தரும பரிபாலன சபையெனவும் அழைக்கப்பட்டன.

இவ்வாறு சைவம் செழிப்புற்ற காலத்தில், நல்லூரைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர் அங்கிருந்த சைவா லயங்களை இடித்தழிக்கத் தொடங் கினர். இதையறிந்த நல்லூர்க் கைலாயநாதர் ஆலயக்குருக்கள் சிவலிங்கப்பெருமானை இரவோடிர வாக மட்டுவிலுக்குக் கொண்டுவந்து மறைத்து வைத்தார். சில காலத்தின் பின் சிவலிங்கப்பெருமான் தன் மறைவிடத்தை வன்னியசிங்க முதலி யார் என்ற சிவபத்தனுக்குணர்த் தினார். திருவருட்குறிப்பின்படி வன்னிய சிங்க முதலியார் சிவலிங்கப் பெருமானுக்கு திருக் கோயிலமைத்து எம்பெருமானுக்குச் சந்திரமௌலீசர் என்னுந் திருநாமத்தையுஞ் சூட்டினார். இதுபற்றிய மேலதிக விபரங்களைச் சந்திரமௌலீசர் ஆலய வரலாற்றிற் காண்க.

இவ்வாறு சிவநெறி சிறப்புற் றோங்கிய காலத்திற்றான் 1884ல் மட்டுவில் வடக்கு சைவப் பிரகாச வித்தியாலை ஆரம்பிக்கப்பட்டது. அதன் ஆரம்பகாலத் தலைமையாசிரி யராயிருந்தவர் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்கள். அக் காலத்திற் பாடசாலையிற் சந்தானாசாரியர் குரு பூசைகள் நடைபெற்றன, இலக்கண இலக்கியங்கள் சைவ சித்தாந்த சாத்திரங்களும் போதிக்கப்பட்டன, சைவப்பிரசங்கள் நிகழ்ந்தன. வரணி, மீசாலை, சாவகச்சேரி, கல்வயல் முதலிய இடங்களிலிருந்து அந்நிகழ்ச்சிகளிற் பங்குபற்றியோர் பலர்.

ஏறக்குறைய பத்து அல்லது பன்னிரண்டு வருடகாலம் சைவப் பிரகாச வித்தியாசாலைத் தலைமை யாசிரியராயிருந்த ம. க. வே. அவர்கள் சிதம்பரம் நாவலர் பாடசாலைக்குத் தலைமையாசிரி யராகச் சென்றார்.

யார் செய்த தவக்குறைவோ நான் அறியேன். மிஷனரிமார் பாடசாலைக் கட்டிடத்தை அதன் சொந்தக்காரரிடமிருந்து குத்தகைக்குப் பெற்று அதில் தமது பாடசாலையை நடத்தி வந்தனர்.

இவ்வாறான சூழ்நிலை யிலும் மருதடி விநாயர் ஆலயச் சூழலிலும் கலுவத்துச் சிவன் கோயிற் சூழலிலும் இந்த இரண்டு ஆலயங்களுக்கு இடைப்பட்ட பிரதேசத்திலும் வாழ்ந்த மக்கள் எவரும் மதம் மாறியதில்லை.

விநாயகர், வயிரவர், சுப்பிர மணியர் முதலிய சிவ மூர்த்தங்களும் சந்திரசேகரர், உமாமகேசுவரர், இட பாரூடர், சபாபதி, கல்யாண சுந்தரர், பிச்சாடனர், காமாரி, காலாரி, திரி புராரி, சலந்தராரி, மாதங்காரி, வீர பத்திரர், அரியர்த்தர், அர்த்தநாரீ சுவரர், கிராதர், கங்காளார், சண்டே சாநுக்கிரகர், நீலகண்டர், சக்ரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவர் முதலிய மகேசுர வடிவங்களுமே சைவசமயிகளின் வழிபாட்டுக்குரியனவாகும்.

இதை நன்கறிந்த மக்கள் வாழ்ந்த வாழுகின்ற சூழலில் அன்றி லிருந்து இன்றுவரை கண்ணகி வழி

பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக் கப்படுகின்றது. இதற்குரிய காரணத் தை கண்டறிவது எனது அறிவாற்ற லுக்கும் அப்பாற்பட்டது.

சைவப்பிரகாச வித்தியாசாலை யின் நிருவாகம் கிறிஸ்தவர்களின் நிருவாகத்திலிருப்பதை விரும்பாத திரு. நா. செல்லப்பா (லோச்செல்லப்பா) அதை மீட்டெடுப்பதற்கான காலத்தை எதிர்பார்த்திருந்தார். 1923 மார்கழியில் சைவவித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் நடைமுறையிலிருந்து சட்டப்படி உதவி நன்கொடை பெறும் பாடசாலை யொன்றைத் தொடர்ச்சியாக மூன்று மாத காலத்துக்கு நடத்தாவிட்டால் அதை நடத்துவதற்கு வழங்கப்பட்ட அனுமதி மீளப் பெறப்பட்டுவிடும். இவ் விதியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தக் கருதிய செல்லப்பா ஊர் மக்களின் உதவியோடு மாணவர்களை மிஷன் பாடசாலைக்குச் செல்ல விடாது தடுத்தார்.

அந்த மாணவர்களுக்கு, பன்றித்தலைச்சி அம்மை கோயிலுக் குத் தென் கிழக்கிலிருந்த மடத்திலும் கொக்குவிலார் மடத்திலும் வகுப்புக் கள் நடைபெற்றன. மிஷனரிமாரால் பாடசாலையை நடத்த முடியவில்லை. அவர்களுக்குப் பாடசாலையை நடத்துவதற்கு வழங்கப்பட்ட அனுமதி மீளப்பெறப்பட்டது.

பாடசாலைக் கட்டிடச் சொந் தக்காரரின் அனுமதியையும் பெற்று, மிஷனரிமாரின் நிருவாகத் திலிருந்த பாடசாலையை, சந்திர மௌலீச வித்தியசாலை என்ற பெயரில் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடமொப் படைத்தார் செல்லப்பா.

சில காலம் அப்பாடசாலையை வளர்த்தெடுத்த செல்லப்பா ஏறக் குறைய ஐந்தாண்டுகளின் பின் அதன் நிருவாகப் பொறுப்பிலிருந்து வில கினார். சந்திரமௌலீச வித்தியாசாலை யில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் காவிய வகுப்பு நடத்தியதும் சு. சிவபாதசுந்தரம் முதலிய சைவப் பெரியார்களும் சேர். பொன்னம்பலம் இராமநாதன், அரசாங்க சபைத் தலை வராயிருந்த சேர். வைத்தியலிங்கம் துரைச்சாமி முதலிய அரசியல்வாதி களும் சந்திரமௌலீச வித்தியாசாலை யில் நடந்த விழாவுக்கு வருகை தந்ததும் திரும்பிப் பார்க்க வேண்டிய இனிய நிகழ்வுகள்.

இருபதாம் நூற்றாண்டில் முற் பகுதியில் எமது பிரதேசத்தில் மிக அரிதாகவே சைவப் பாடசாலைகள் காணப்பட்டன. அப்பாடசாலைகளிற் கற்பிப்பதற்குத் தேவையான சைவாசிரி யர்களைப் பயிற்றுவிப்பதற்குரிய சைவாசிரியர் கலாசாலைகள் இருக்க வில்லை. ஆரம்பத்தில் ஆசிரியப் பயிற்சிபெற்ற சில ஆசிரியர்களும் கிறிஸ்தவ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி களிற் பயிற்சி பெற்றவர்கள். பயிற்சிக் காலத்தில் அவர்களை மதம் மாற்று வதற்குரிய எல்லா முயற்சிகளையும் மிஷனரிகள் செய்தனர். அது காரண மாக மதம் மாறியோர் பலர், மதம் மாறாது சிவநெறியை உறுதியாகப் பற்றி நின்றோர் சிலர். இந்தச் சிலரில் மட்டுவிலைச் சேர்ந்தவர்கள் இருவர். அவர்களில் ஒருவர் திரு. வே. சுப்பை யா, மற்றவர் திரு. வ. நமசிவாயம் என்பதையும் இவ்விடத்திற் குறிப்பிட வேண்டும்.

சைவப்பிரகாச வித்தியாசாலை யின் நிருவாகம் மிசனரிகளிடமிருந்த போதிலும் அப்பாடசாலையின் ஆசிரிய ராயிருந்து சைவத்தைப் போதித்தவர் திரு. ம. க. வே. திருஞானசம்பந்தர்.

உரையாசிரியரைத் தொடர்ந்து அவருடைய புதல்வர்களான திருஞான சம்பந்தரும் மகாலிங்கசிவமும் புராண படனஞ்செய்து வந்தனர். அவர்களைத் தொடர்ந்து புராணபடன மரபைப் பேணியவர் சோமசுந்தரக்குருக்கள் என அனைவராலும் அன்பாக அழைக்கப் பட்ட சைவக்குருக்கள் சென்ற நூற் றாண்டின் நடுப்பகுதியில் திரு. சி. சங்கரப்பிள்ளையும் திரு. வே. ஆறுமுக மும் புராணபடனம் செய்யும் ஆற்றலு டையவர்களாயிருந்தனர்.

பன்றித்தலைச்சி அம்மை ஆலயத்தின் வடகிழக்கிலிருந்த மடத்தில் புராணபடனஞ் செய்யப்பட்ட தென்பதும் அங்கே மகாலிங்கசிவம் உரைசொல்லும் நாட்களில் சனக் கூட் டம் அலைமோதியதென்பதும் நான் கேட்டறிந்த செய்திகள். அக் காலத்தில் அந்த மடம் அகாலவேளையில் அந் தரித்து வந்தோருக்குத் தங்குவதற்கிட மளித்ததென்பதும் பசித்தோருக்குப் பசிதீர உணவளித்ததென்பதும் நான் கேள்விப்பட்ட வரலாற்றுண்மைகள்.

அக்காலத்திற் கிளித்தட்டு விளையாடுதல், வாரோடுதல், புள்ளடித் தல் முதலிய கிராமிய விளையாட்டு கள் பிரபலம்பெற்று விளங்கின. வைகாசி விசாகப் பொங்கற் காலத்தில் பன்றித்தலைச்சிக் கண்ணகி அம்மை ஆலயத்தில் வசந்தன் அடிப்பதற்கு நீர்வேலிப் பகுதியிலிருந்து மக்கள் திரண்டுவந்தனரெனக் கூறப்படுகின்றது. வருடப் பிறப்புக் காலத்திற் போர்த் தேங்காய் அடிப்பதற்கு ஆலயங் களிலும் பாடசாலைகளிலும் மக்கள் திரண்டனர்.

மக்கள் விடிய விடிய விழித் திருந்து காத்தவராயன் கூத்தைக் கண்டு களித்ததுண்டு. முத்துமாரி அம்மன் கோயிலுக்குப் பூசை செய்து வந்த ஆறுமுகத்தின் மகன் நமசிவாய மென்பவர் சிறந்த அண்ணாவியாக விளங்கினார். கோவலன் கதையை உடுக்கடித்துப் பாடும் வழக்கமுமிருந் தது. அயற்கிராமமாகிய வாதரவத் தையைச் சேர்ந்தவர்கள் மட்டுவிலுக்கு வந்து பப்பரபாகன் கூத்தை ஆடிக் காட்டி மகிழ்வித்தார்கள். இந் நிகழ்வு கள் கனவாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டன.

1984-ல் இலங்கையும் சுதந் திரம் பெற்றது. அதன்பின் கடவுச்சீட்டுப் பெற்றே இலங்கையிலிருந்து இந்தியா வுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட் டது. பணப் பரிமாற்றஞ் செய்வதற்கும் புதிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியதாயிற்று. அதனால் மட்டு விலுக்கு சிதம்பரத்துக்குமுள்ள தொடர்பை முன்பு போல வைத்திருக்க முடியவில்லை.

இறுதியாக, சிதம்பரம் அம்பல வாணசுவாமி கோயிற் செவ்வாய்க் கிழமை மடத்தருமபரிபாலன சபைத் தலைவராக இருந்தவர் மாதகலைச் சேர்ந்த இலகுப்பிள்ளை இராமலிங்கம் அவர்கள். அச்சபையின் உறுப்பினராக விருந்து தென்மராட்சிப் பகுதியிலிருந்து மேற்படி மடத்துக்குரிய வருவாயைச் சேர்த்துக் கொடுத்தவர் எனது பெரிய தந்தையார் நா. செல்லப்பா. அவர்

1949-ல் காலமானார். அவரது மறைவுக்குப்பின் இரண்டாண்டு காலம் அப்பணியை எனது தந்தையார் நா. ஆறுமுகம் செய்து வந்தார். அதன்பின் அந்தத் தருமச் சொத்துக்கு என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது.

இவ்வாறான சூழ்நிலையில் 1965-ம் ஆண்டளவில் திரு. பொ. தாமோதரம் பிள்ளையவர்கள் இப்போது முத்துமாரியம்பாள் ஆலயமிருக்குமிடத்தில் ஒரு சிவாலயத்தைக் கட்டினாலென்னவெனச் சிந்தித்து அதற்குரிய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார். அவரது மறைவோடு அவ்வாசை நிராசையாய்ப் போனது. அதற்குரிய காரணத்தை எம்மூர் வரலாற்றுப் பின்னணியோடு தொடர்புபடுத்திப் பார்த்தறியலாம்.

இலங்கைத் தழிழரசுக்கட்சி தென்மராட்சிப் பகுதியில் மட்டுவிலிற்றான் தனது முதலடியை எடுத்து வைத்ததென்ற செய்தியும் நினைவு கூறப்பட வேண்டியதொன்றாகும்.

இதுவரை மருதடியிலிருந்து கலுவம்வரை வெவ்வேறு கோணங்களிற் சென்றுவந்த எனது சிந்தனையை இவ்வளவில் நிறுத்தலாமென்றால், அது கமலாசனி வரை செல்லாமலிருக்க மறுக்கிறது. நான் எனது பதினான்காவது வயதில் கமலாசனி வித்தியாசாலையிலிருந்து 1942-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சைக்குத் (S.S.C) தோற்றிச் சித்தியடைந்தேன். என்னுடன் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்த சிலரில் ஒருவர் இ. கந்தையா. அவர் வாதரவத்தையிலிருந்து வந்து கமலாசனியிற் கல்வி கற்றுப் பிற்காலத்தில் ஆசிரியத் தொழில் புரிந்தவர்.

நான் இப்பாடசாலையிற் கல்வி கற்ற காலத்தில் பாடசாலைத் தலைமையாசிரியராக இருந்தவர் ஆசிரிய மணி வே. சுப்பையா. அவர் பாடசாலையுந் தானுமென்றில்லாமல் பாடசாலையையும் சமூகத்தையும் ஒன்றாக வளர்த்தெடுத்தவர்.

1940-ம் ஆண்டிலோ 41-ம் ஆண்டிலோ (இப்பொழுது என்னால் சரியாக ஞாபகப்படுத்த முடியவில்லை) அகில இலங்கை ரீதியாகப் பாடசாலைகளுக்கிடையே சுகாதாரப் போட்டியொன்று நடைபெற்றது. அப்போட்டியில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு, பாடசாலையின் உள்ளேயும் வெளியேயும் செய்யும் சுகாதார சம்பந்தமான செயற்பாடுகள் கவனத்துக்கெடுக்கப்பட்டன. புறச் செயற்பாடுகளை திறம்படச் செய்வதற்குப் பாடசாலையில் சாரணர் இயக்கம் இருக்க வேண்டிய தன் அவசியம் உணரப்பட்டது. அதனால் 1940-ம் ஆண்டிலேயே இப் பாடசாலையில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆசிரியர்களின் விடாமுயற்சி சாரணரின் சிறந்த தொழிற்பாடு ஊர் மக்களின் ஒத்துழைப்பு முதலியவற்றால் பாடசாலைச் சூழல் சுத்தம் பேணும் சிறந்த மாதிரிக் கிராமமாகத் திகழ்ந்தது. மேற்படி போட்டியில் கமலாசனி வித்தியாசாலை வடமாகாணத்தில் முதலாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டது. சுகாதாரப் பகுதியினர் கமலாசனி வித்தியாசாலையிற் பெரிய தொரு கூட்டத்தைக் கூட்டி அதில் வெற்றிக் கேடயத்தை ஆசிரியமணியிடம் கையளித்தனர். அதைக்கண்ட ஒவ்வொருவரும் தாமே விருது பெற்றாற்போல விம்மிதமடைந்தனர். இந்த இனிய நினைவோடு இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன். இக் கட்டுரை பாட்டி சொன்ன கதை போன்றதா? வரலாற்றுக் குறிப்பா? என்பதை வாசகர்கள் தீர்மானிப்பார்களாக.

மட்டுவில் பெற்ற மாமணி

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.க. பற்றிய ஒரு குறிப்புரை

திரு ச. லலீசன் B.A. (Hons.)
ஆசிரியர், ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி

மட்டுவில் அன்னை ஈன்றெடுத்த தமிழ்ப் புதல்வர்களின் பட்டியல் நீண்டது. அவர்களுள் முதன்மை பெறுபவர் 'பண்டிதமணி சி.க.' என எல்லோராலும் போற்றப்படும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையே ஆவார்.

மட்டுவில் தருமர் என அன்போடு அழைக்கப்பெற்ற சின்னத்தம்பி அவர்களும் தனங்களப்பு முருகர் மகளான வள்ளியம்மையாரும் நடாத்திய இல்லறத்தின் நன்கலமாக பண்டித மணி 27.04.1899 இல் பிறந்தார். பிள்ளையில்லாப் பெருங்குறையால் வாடிய தம்பதியர், தம் குலதெய்வமாகிய விநாயகப் பெருமானின் பெருங் கருணையாற் பெற்றெடுத்த மகவுக்குக் கணபதிப்பிள்ளை என நாமகரணஞ் சூட்டி அழகு பார்த்தனர்.

தற்போது மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகையம்மன் கோவிலுக்கு அண்மையில் இருக்கின்ற சந்திரமௌலீச வித்தியாலயம் அந் நாளில் மட்டுவில் அமெரிக்க மிஷன் பாடசாலை என வழங்கப்பட்டது. இப் பாடசாலையே பண்டிதமணியின் ஆழ்ந்த புலமைக்கு அகரமிட்டது. தனது ஆரம்பக் கல்வியை இப்பாட சாலையிலேயே பண்டிதமணி பெற்றார்.

மூன்று வயதிலேயே தாயை இழந்த சோகத்திற்குள்ளாகிய பண்டித மணி, இளமை வாழ்விற் பல சோதனைகளை எதிர்கொண்டார். பதின்மூன்றாவது வயதில் தந்தையாருடன் தனங்களப்புக்குச் சென்றுவாழும் சூழல் ஏற்பட்டது.

தமிழ்த்தாயின் நற்கருணை, ஒரு தவப்புதல்வனின் எழுச்சிக்கு வித்திட்டது. ஆன்றமைந்த ஆசான்கள் கல்விக் கடலை நீந்திக் கடக்கத் சி.க. விற்குத் தெப்பமாய் உதவினர். அறிஞர்களான சாவகச்சேரி பொன்னையா உபாத்தியாயர், சாவகச்சேரி பொன்னம்பலப்புலவர், சாவகச்சேரி பொன்னப்பா பிள்ளை ஆகியோரிடத்தில் பாடங்கேட்ட பண்டித மணி 1917 இல் நாவலர் காவிய பாடசாலையில் சேர்ந்து கொண்டார். அங்கு சுன்னாகம் ஸ்ரீமத் அ. குமாரசுாமிப் புலவர், வித்தகம் ச. கந்தையாபிள்ளை, வித்துவான் ச. சுப்பையாபிள்ளை போன்ற பேரறிஞர்களிடம் பாடங் கேட்கும் பேற்றினை எய்தினார்.

நாவலர் காவிய பாடசாலையில் இவரோடு சேர்ந்து கற்றவர்களில் மட்டக்களப்புப் புலவர்மணி ஏ. பெரிய தம்பிப்பிள்ளை, வட்டுக்கோட்டை சிவஸ்ரீ குருமூர்த்தி ஐயர் போன்றவர்கள் முக்கியமானவர்கள்.

தற்போது யாழ்ப்பாணத்தில் மரபு வழிப்பண்டிதர்களை உருவாக்கும் நிறுவனமாக யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் திகழ்கிறது. இது 1921ஆம் ஆண்டில்

நிறுவப்பட்டது. பண்டிதமணியின் காலத்தில் மதுரைப் பண்டிதர் தேர்வில் சித்தி பெறுவதே பெருமையாகக் கொள்ளப் பட்டது. அவ்வகையில் 1926 இல் பண்டிதமணி மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்விற் சிறப்பாகச் சித்தி பெற்றுப் பண்டிதரானார். நாவலர் காவிய பாட சாலையில் தங்கப் பதக்கம் சூட்டிப் பண்டிதமணியைக் கௌரவித்தனர். அப் பரீட்சையில் மிகவும் சிறப்பாகச் சித்தி பெற்றமைக்காக மட்டுவிலில் பெரும் விழா ஒன்று இடம் பெற்றதாகக் குறிப்பு கள் உண்டு. இவ்விழாவை மட்டுவில் 'லோச் செல்லப்பா' என்ற தமிழறிஞர் ஏற்பாடு செய்திருந்தார். மட்டுவில் மண்ணின் மைந்தனுக்கு மக்கள் தங்கச் சங்கிலியைப் பரிசாக அளித்து மகிழ்ந் தனர். லோச் செல்லப்பாவின் தூண்டு தலால் மட்டுவில் சந்திரமௌலீச வித்தி யாலயத்தில் காவிய வகுப்புகளைப் பண்டிதமணி நடத்த ஆரம்பித்ததாகவும் அறியப்படுகிறது.

கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்ற பண்டிதமணியை 1929 இல் திருநெல்வேலி சைவாசிரிய கலா சாலைப் (இன்றைய முத்துத்தம்பி ம.வி. அமைந்துள்ள கட்டடம்) பதவி நாடி வந்தது. தமிழ்த்துறையை அலங்கரித்த கோப்பாய், திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைகளில், மட்டுவில் அன்னை யின் மைந்தர்களே தமிழ்த் தாகம் தீர்த்தனர். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் விரிவுரையாளராகப் பண்டிதமணி திகழ்ந்திருக்க கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் தமிழ்த் துறை விரிவுரையாளராக மட்டுவில் அன்னையின் மற்றோர் மைந்தனாகிய பண்டிதர் குருகவி மகாலிங்கசிவம் விளங்கினார். தமிழ்ப்பால் பருகத் துடித்த மாணவர் எங்கு கற்பது? என அங்கலாய்த்து நின்றனர்.

திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் பொற்காலம் அது. மும்மணிகள் வீற்றிருந்து விருந் தளித்தனர். அதிபர் மயிலிட்டி சி. சுவாமிநாதன், மௌனதவமுனிவர் எனப் புகழப்படும் உபஅதிபர் திரு பொ. கைலாசபதி இவர்களுடன் பண்டிதமணி. தமிழ் - சைவ எழுச்சிக் குப் பல இதயங்களைத் தயார்படுத் திய பெருமை இவர்களுக்கு உண்டு.

1951 இல் யாழ்ப்பாணம் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி யில் (தற்போதைய யாழ் பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடம்) இடம் பெற்ற தமிழ்விழாவில் பண்டிதமணி 'தமிழ்' என்ற பொருளில் ஆற்றிய உரை தமிழக அறிஞர்கள் உள்ளிட்ட பலராலும் விதந்து பாராட்டப்பட்டது. அந்த உரையே அவருக்குப் பண்டித மணி என்ற பட்டத்தையும் பெற்றுக் கொடுத்தது.

நாவலர் பெருமான் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர் பண்டித மணி. அவரது எழுத்துக்களை எழுத் தெண்ணிக் கற்றவர். இதனால் நாவல ரோடு சம்பந்தப்பட்ட கட்டுரைகள் பல வற்றை அழகு தமிழில் எழுதினார். அத்துடன் சிதம்பரம் கும்பாபிஷேக மலரில் சுவாமி ஞானப்பிரகாசர் குறித் தும் கலைமகள் மலரில் பஞ்ச கன்னி கைகள் குறித்தும் பண்டிதமணி எழுதிய ஆக்கங்கள் அவருக்கு மிகுந்த புகழைக் கொடுத்தன.

சைவ - தமிழ் உலகிற்காகப் பண்டிதமணி ஆக்கியளித்த நூல்கள் காலத்தால் அழியாத சொத்துக்களாகப் போற்றப்படுகின்றன. கண்ணகி தோத்திரம், கதிர்காம வேலவன் பவனி வருகிறான், இலக்கிய வழி, சைவ நற் சிந்தனைகள், பாரத நவமணிகள், கந்த புராண கலாசாரம், கந்த புராண போதனை, சிவராத்திரியில் சிந்திக்கத் தக்கவைகள், இருவர் யாத்திரிகர், சமயக் கட்டுரைகள், இலக்கிய வழி, கம்பராமாயணக் காட்சிகள், கந்த புராணம் தக்ஷிகாண்டம் உரை, நாவலர், சிந்தனைச் செல்வம், நாவலரும் கோயிலும், சிந்தனைக் களஞ்சியம், கோயில், ஆறுமுகநாவலர், அன்பினைந்திணை, அத்வைத சிந்தனை, செந்தமிழ்க் களஞ்சியம் ஆகிய நூல்கள் இறவாத புகழை அவருக்குக் கொடுத்தன.

கந்தபுராண கலாசாரத்தை சமய வழியில் மாத்திரமன்றி வாழ்க்கை வழியில் வளர்த்தெடுத்தவர்களுள் பண்டிதமணியும் ஒருவர். இவரது மாணவர் பரம்பரை அறிவாற்றல் மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்பும் பாரிய வலையமைப்பைப் பெற்றுச் செயற்பட்டது. இன்றும் பரம்பரை உதயம் காண்கிறது.

பண்டிதமணியின் தமிழ்த் தொண்டிற்கு மகுடஞ் சூட்டும் வகையில் இலங்கைப் பல்கலைக்கழகம் 1978 மே 31 ஆம் திகதி பண்டிதமணி அவர்களுக்கு இலக்கிய கலாநிதி என்ற கௌரவப்பட்டத்த வழங்கிக் கௌரவித்தது. அவ்வேளையில் உடல்நலக் குறைவு காரணமாகப் பண்டிதமணி கொழும்புக்குச் சென்று பட்டத்தைப் பெறமுடியவில்லை. பண்டிதமணியைக் கௌரவிக்கும் விழாவொன்றை யாழ் பல்கலைக் கழகத்தில் 1978 ஆகஸ்ட் 14 இல் ஏற்பாடு செய்து துணைவேந்தர் சு. வித்தியானந்தன் தலைமையில் இலக்கிய கலாநிதிப் பட்டம் பண்டித மணிக்குச் சூட்டப்பட்டது.

தமிழ் உரைநடை வரலாற்றில் பண்டிதமணியவர்களுக்குத் தனியானவோர் இடமுண்டு. வாசகனின் உள்ளத்தில் ஒருவகைத் தாக்கத்தை உண்டு பண்ணுவதாக இவரது வசன நடை அமைந்தது. எளிய சொற்களைக் கையாண்டு குறுகிய வசனங்களை ஆக்கித் தமது வசன நடையைக் கையாண்டார். வசனநடை வாசிப்பதற்குரியதேயன்றிக் கேட்பதற்குரியதல்ல என்ற உண்மையை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார். பொருளுக்கே முக்கியத்துவம் கொடுத்தார். இயல்பான நகைச்சுவையுணர்வையும் தமது வசன நடையில் இடையிடையே வெளிப்படுத்தினார். சிந்தனையைத் தூண்டினார்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் இறவாத புகழைப்பெற்ற பண்டிதமணியவர்கள் 13.03.1986 இல் திருநெல்வேலியில் அமரத்துவ மடைந்தார்.

மட்டுவில் கிராமத்தின் பெருமைக்கு வித்திட்ட பெருமகனாரின் நினைவாகப் பண்டிதமணி மணி மண்டபம் (கண்ணகை அம்பாள் சனசமூக நிலையம்) அமைக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் இது பண்டிதமணிக்குரிய தனித்துவமான அமைப்பாக இன்று செயற்படவில்லை. பண்டிதமணியை நினைவு கூர்ந்து 1999 இல் மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் நூற்றாண்டு விழா எடுத்தமையையும் இச்சந்தர்ப்பத்தில் மனங்கொள்ளல் பொருத்தமானது.

மட்டுவிற் பதியின் பெருமைக்கு வித்திட்ட பெரியார்களின் உருவச் சிலைகள் இப்பதியிலுள்ள கல்விக் கூடங்களில் அமைக்கப்படுதல் சாலச் சிறந்தது. நம் இளஞ்சந்ததியினரின் மனங்களில் ஊக்கமும் உயர்வும் கிடைக்க இம்முயற்சிகள் அடித்தளமாகலாம்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

புகழ் மாலை

மட்டுவில் நா. நல்லதம்பி

காப்பு

மருதடி விநாயகன் மலரடி பரவிய
பெருமகன் பண்டித மணிபுகழ் பாடவே
விரும்பினின் அருளினை வேண்டுதல் செய்தேன்
ஒரு தனி முதல்வனே உறுதுணை புரிவையே.

புகழ்மாலை

1. செந்தமிழுஞ் சிவநெறியும்இருவிழியாகக் கொண்டோன்
சிறீலசிறி ஆறுமுக நாவலர்க்குப் பின்னோன்
முந்துதமிழ் இலக்கணமும் இலக்கியமுங் கற்றோன்
முனிவனென மட்டுவிலில் வந்துதித்த நல்லோன்
கந்தபுரா ணப்படனம் கச்சிதமாய்ச் செய்தோன்
கம்பரா மாயணத்தின் கருத்தாழங் கண்டோன்
இந்தவுல கெங்குமுள பண்டிதர்க்கு மூத்தோன்
இன்தமிழின் காவலன் இலக்கியக லாநிதியே.

2. மட்டுவில்வேற் பிள்ளைமகா லிங்கசிவ மேதையிடம்
முறையாக வண்டமிழை இலக்கியமாய்க் கற்றோன்
இட்டமுடன் இலக்கணந்தொல் காப்பியமும் நிகண்டும்
இளமையிலே ஐயமறக் கற்றுணர்ந்த ஆசான்
மட்டுவார்கு ழற்சாந்த நாயகிச மேதசந்ர
மௌலீசர் தாளைமற வாச்சிந்தை யுடையான்
பொட்டெனவே பேசுமவன் பேச்சைநுகர் வதற்காய்ப்
பொம்மையென அமர்ந்திருக்கும் பண்டிதர்கு ழாங்கள்.

3. ஒருமாதைத் தான்கூடி உவக்காது பொதுவாழ்வில்
உலகுய்யச் செந்தமிழுஞ் சைவமுமென் றீழமதில்
இருமாதைப் புணர்ந்தகண பதிப்பிள்ளைப் பண்டிதனார்
இளமையிலே தான்தனிய னாயிடினும் கலங்காது
குருகுலத்தை நாடி, அவர் வழிநின்று கற்றாலுங்
கங்கையொடு பிறைசூடும் சந்ரபுரப் பதிமேவும்
பெருமானை மறவாத பெற்றியன் மட்டுவிலின்
பெருமகனாம் பண்டிதனைப் பண்டிதமா மணியென்போம்.

4. தமிழகத்துப் பேரறிஞர் தம்மோ டொப்பத்
தமிழன்னை திறமுரைத்த தமிழாசான் இலக்கியத்தின்
அமிழ்தமென ஆற்றுமுரை அவையோர்க்கு விருந்தாகும்
அசையாது மகலாதும் அவருரையில் ஆழ்ந்து, அவர்
குமிழ்சிரிப்பில் உதிர்ந்துவரு சொல்லழகும் நடையழகும்
குன்றுதொறும் ஆடிவருங் குமரனவன் உகந்த தீந்
தமிழ்மொழியை அவராளுந் தனியழகுஞ், சிங்கநோக்குத்
தாங்கிவரு பொருளழகும் தமைமறந்து செவிமடுப்பர்.

5. வள்ளுவரை விளக்குமவன் வள்ளுவனே யாய்விடுவான்
வான்மீகி கம்பனுமாய் வாதுகளும் புரிந்திடுவான்
தெள்ளுதமிழ்க் காப்பியமாஞ் சிலம்புகதை செப்புவதில்
தீந்தமிழில் முத்தமிழ்செய் இளங்கோவை ஒத்திடுவான்
உள்ளமதில் தெளிவுடனே ஆரியமோ திராவிடமோ
உலகார்ந்த புலமையினான் ஒப்புமையில் பண்டிதனாம்
கள்ளமதாய் கற்பனையாய்ப் புகழ்பாடப் பொறுக் காதான்
கலைஞானி கணபதிப்பிள் ளைப்பண்டி தமணியே.

6. ஆறுமுக நாவலரின் அழகான தமிழென்றால்
அண்ணாவின் தமிழதுவோ அடுக்குமொழித் தமிழாகும்;
கூறுகரு ணாநிதியின் கன்னல்மொழித் தமிழென்றால்
கவிதைபோ லினிக்குஞ்சே துப்பிள்ளை செந்தமிழே;
வீறுநடை போடுமது பாரதியார் பழகுதமிழ்
வியத்தகுதீந் தமிழ்விளங்கு யாழ்க்குடா நாடதிலே
வேறுநடை பண்டிதர்க்கு மணிநடையும் குறள்நெறியும்
விளங்குதமிழ் இலக்கியத்தேன் சுமக்கும்பண் டிதர்தமிழே.

7. வான்மீகி உரைத்தவையும் வையத்தார் எண்ணமதில்
வளர்ந்தவையுஞ் செய்திகளும் கற்றுணர்ந்து
தான்வேறு வகை பாடித் தமிழினத்தின் பண்பாட்டைத்
தனித்துவத்தை உலகறியச் செய்தவா ற்றால்
தேன்போலும் இன்தமிழில் இராமகதை புனைந்தகம்பன்
தேரின்ஒரு வம்பன்எனச் சொன்ன செம்மல்
வான்மேவி வாழுமுயர் பண்டிதமா மணியேநீ
வானவர்க்கும் வண்தமிழை வழங்குவாயே.

8. முன்னர்ச் சிறீலசிறி ஆறுமுக நாவலரால்
மூட்டுபணி தொடர்ந்தசிவ பாதனார்,
பொன்னப்ப பிள்ளையார், பொன்னைய பிள்ளையார்,
புவிதனில் நீபயின்ற மற்றைச்
சுன்னைப் புலவரொடு சோமசுந் தரனாரும்
சுவர்க்கத்தில் உன்னோ டிருக்கக்
கன்னற் தமிழ்மொழி ககனத்து மொழியாகும்
கைலாச பதியுவந்த கணபதியே.

9. ஆரியமுஞ் செந்தமிழும் அப்பனுமாய்
அம்மையுமாய் ஆனதென்று
சீரியநம் பண்டிதனார் சொன்னதுவும்
சிந்தையினில் வந்தவாறே
பாரினைவிட் டவர்தந்தை தாய்மறையத்
தனியராய்ப் போன ஞான்று
ஆரியமுஞ் செந்தமிழும் ஆதரவாய்
ஆங்கவர்க்கு அமைந்தவாறு.

10. வண்டிவா கனமில்லா அந்தநாள் மிகமுயன்று
வடமா நிலத்துள் எங்கணும் நடந்துஇம்
மண்பெறு மகனாங் கணபதிப் பிள்ளையர்
மாண்புள அறிஞர்கள் பண்டிதர் எனப்பல
தண்டமிழ்ப் பெரியோர்கள் திண்ணைப் பள்ளியில்
தமிழொடு இலக்கிய நூல்பல கற்றார்
எண்டிசை யும்புகழ் பண்டிதர் ஆனார்
இன்றுள இளைஞர்க்கு நூல்பல செய்தார்.

சரித்திரம் படைத்திடல் வேண்டும்

திரு. செல்வராஜா சுதாகரன்
முகாமைத்துவ உதவியாளர்,
பிரதேச செயலகம், தென்மராட்சி.

கள்ளமில்லா வெள்ளையுள்ளம் களித்திடல் வேண்டும்
காசினியில் துயரின்றி வாழ்ந்திடல் வேண்டும்
அள்ளியென்றும் கல்விதனைப் பருகிடல் வேண்டும்
ஆண்டவனின் நாமமதை உரைத்திடல் வேண்டும்.

அன்னைதந்தை வார்த்தைதனை மதித்திடல் வேண்டும்
ஆசானைத் தினம்பணிந்து துதித்திடல் வேண்டும்
என்றுமுயர் மெய்பேசி இருந்திடல் வேண்டும்
ஏதமில்லா செயலதனை இயற்றிடல் வேண்டும்

மூத்தோர் சொல்வார்த்தை தனை மதித்திடல் வேண்டும்
முனைப்புடனே செயலாற்றி உயர்ந்திடல் வேண்டும்
ஏத்தியென்றும் இறைநாமம் இசைத்திடல் வேண்டும்
எளியாரை மதித்தென்றும் காத்திடல் வேண்டும்

தமிழ் நாமம் தனையுயர்த்த முயன்றிடல் வேண்டும்
தாய் நாட்டைக் காத்திடவே திரண்டிடல் வேண்டும்
தமிழ்ப்புலவர் சொன்னநெறி நடந்திடல் வேண்டும்
தரணியெங்கும் புகழ்பரப்பி வாழ்ந்திடல் வேண்டும்

உயிர்கொல்லா உணவுண்ணப் பழகிடல் வேண்டும்
ஊரேத்தும் உத்தமராய் வாழ்ந்திடல் வேண்டும்
பயிர்வளர்த்துப் பசிபோக்கப் பழகிடல் வேண்டும்
பாரிலுன் நாமமதைப் பதித்திடல் வேண்டும்

மாற்றான் பொருள் மனங்கொள்ள மறந்திடல் வேண்டும்
மதியூகத் தாலென்றும் மலர்ந்திடல் வேண்டும்
ஏற்றமுடன் உழைத்து உயர்ந்திடல் வேண்டும்
ஏதிலியார் வாழ்வை உயர்த்திடல் வேண்டும்

ஆளுக்கொரு திறமையுண்டு அதைவளர்த்திடல் வேண்டும்
அருங்கலைகள் தனைப்பயில முயன்றிடல் வேண்டும்
நாளும் இறைநாமம் நவின்றிடல் வேண்டும்
நல்லவரோடு எந்நாளும் நட்புறல் வேண்டும்

இயன்றதையே எந்நாளும் இயற்றிடல் வேண்டும்
ஈகையிலே சிறந்தென்றும் விளங்கிடல் வேண்டும்
முயன்றுநிதம் முன்னேற எண்ணிடல் வேண்டும்
மூர்க்கரோடு இணங்காது நடந்திடல் வேண்டும்

நல்வார்த்தை எந்நாளும் பேசிடல் வேண்டும்
நாவினில் மெய்யொன்றே நடைபயில வேண்டும்
எல்லோரும் சமமெனவே எண்ணிடல் வேண்டும்
எந்நாளும் ஒற்றுமையாய் இருந்திடல் வேண்டும்

வாசித்துப் பயன்பெறவே முயன்றிடல் வேண்டும்
வாழ்க்கையிலே முன்னேறும் வழிகாணவேண்டும்
பேசிநிதம் பிரச்சினையைத் தீர்த்திடல் வேண்டும்
பெறும்பேறு யாவும் பெற்றிடல் வேண்டும்

வஞ்சகமே எண்ணாது வாழ்ந்திடல் வேண்டும்
வாயார இறைநாமம் வாழ்த்திடல் வேண்டும்
சஞ்சலமே கொள்ளாது வாழ்ந்திடல் வேண்டும்
சரித்திரமே படைத்திட எண்ணிடல் வேண்டும்

தாய்நாட்டைக் காத்திடத் துணிந்திடல் வேண்டும்
தரணியதைத் தமிழாழ வைத்திடல் வேண்டும்
ஓய்வின்றி எந்நாளும் உழைத்திடல் வேண்டும்
ஒற்றுமையே பலமென எண்ணிடல் வேண்டும்

ஆன்றோர்கள் சொன்னவழி நடந்திடல் வேண்டும்
அன்புடனே அரவணைத்துச் சென்றிடல் வேண்டும்
சான்றோனாய் உயர்ந்திடவே முயன்றிடல் வேண்டும்
சந்ததமும் இதையே சிந்தைகொளல் வேண்டும்

பள்ளிசெல்லும் பிள்ளையிதைப் படித்திடல் வேண்டும்
பாரெங்கும் இதைப்பரப்பி மகிழ்ந்திடல் வேண்டும்
துள்ளிவிளையாடி நிதம் துயரகற்றல் வேண்டும்
தூய்மை அன்புகொண்டு துளிர்த்திடல் வேண்டும்

இந்தவெந்தன் அறிவுரைகள் ஏற்றிடல் வேண்டும்
இயன்றவரை பின்பற்றி வளர்ந்திடல் வேண்டும்
வந்தனைகள் செய்துநிதம்வளர்ந்திடல் வேண்டும்
வாழ்விலுயர் பேறுதனைப் பெற்றிடல் வேண்டும்

இன்பத் தமிழினிலே காதல் கொண்டேன்

மட்டுவில் நா. நல்லதம்பி

தமிழ்மொழியா ளவள்வந்து தன்கதையைக் கேளுமென்றாள்
அமிழ்தமெனும் அவளினிய குரல்கேட்டு அங்குநின்றேன்
குமிழ்சிரிப்பால் இவ்வுலகைக் கவர்ந்துவிட்ட தமிழணங்கே
அமிழ்தமெனிற் கசப்பாமோ உன்கதையைக் கூறும்என்றேன்.

பொதிகையிலே பிறந்ததென்று பெருமையோடு சொல்லிப் பின்னும்
மதுரையிலே வளர்ந்ததென்று மகிமைதருஞ் செய்தி சொன்னாள்
மதிவாணர் மனங்களிலே நடைபயின்று வந்ததென்றாள்
புதுமையுள பைந்தமிழைப் பெருமையொடு பார்த்து நின்றேன்.

கற்புநிலை சிறந்ததென்றாள் கனலிடையேநின்றதென்றாள்
கற்றறிந்த புலவர்நெஞ்சில் களித்துநடஞ் செய்ததென்றாள்
நற்றமிழாய் நானிலத்தில் முந்துமொழி நானே என்றாள்
உற்றதுணை என்றவளை உள்ளமதில் கொண்டுவிட்டேன்

சிலம்பணிந்த பாதம், அவள் சிற்றிடையில் மேகலைதான்
அலங்கரிக்கும் வளைகள், அவள் அங்கையின தழகை அம்மா!
நிலம்பதியா தவள்நடக்கக் குண்டலங்கள் ஆடிடுமே!
குலஞ்சிந்தா மணியாரங் குலப்பெருமை காட்டிடுமே!

குறட்பாவின் முப்பானூல் அணுவாற்றல் கொண்டதனால்
அறவாழ்வுக் கணையாலிவ் வையகத்தை ஆளுகின்றாள்
திறமிகுந்த இராமகதை பாரதப்போர் கீதைதந்தாள்
பெறலரிய பேறாமின்பத் தமிழினிலே காதல்கொண்டேன்

ஆயகலை அத்தனையும் அணிந்தஎழில் மிக்கவளை
நேயமொடு புதியகலை பயின்றுவளர் பைந்தமிழை
தூயநெறி இலக்கியத்தின் தொன்மையுள தீந்தமிழை
தாய்த்தமிழைச் செந்தமிழை எழுபிறப்புந் தொடர்வேனே.

தமிழ்மொழியின் சிறப்பு

செல்வி பேரின்பகௌரி நவரத்தினம்
ஆசிரியர்,
யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்

முத்தமிழே! மூத்தமிழே! முது தமிழே! மூவுலகில் ஒளிதந்து முத்தி பெறும் தத்துவங்களை உணர வைக்கும் அத்தமிழின் இனிமையினை இணையாக்கி எம் மொழியில் உரைப் பது? தலைசிறந்த எம் மொழியின் தனிச் சிறப்பை தாளில் அடக்கிட முடியுமா? தாம், தம் உணர்ந்திடாது விடுவதும் எவ்வாறு? தமிழ்மொழி எம் தாய்மொழி. எம்மைப் பெற்றெடுத்த எம் தாய் சீராட்டி பாராட்டி தாலாட்டி யதும் தமிழ் மொழியிலே தான். எம்முடன் உறவாடியதும் இம் மொழி யிலே தான். நாம் தமிழ் மொழி யிலேயே சிந்திக்கின்றோம். தமிழ் மொழியிலேயே பேசுகின்றோம், எனவே தமிழ்மொழியைப் பற்றி நன்கு அறிய வேண்டியது, ஆராய்வது, சிறப்புறச் செய்வது எம் தலையாய பொறுப்பாகும்.

உலகத்திலே வழங்கி வரும் ஆயிரக்கணக்கான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்றாகும். மூவேந்தர் மடிதனிலே தவழ்ந்ததும் இத் தழிழே. தமிழ்மொழி தொன்மையும் பெருமை யும் வாய்ந்தது. வளமான இலக்கண இலக்கியங்கள் நிரம்பப்பெற்றது. சொல்வளம் மிக்கது. தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. இதனால் தமிழ் மொழியை முத்தமிழ் என்பர்.

தமிழிற்கு இனிமை என்றொரு பொருளுண்டு. இதை மகாகவி சுப்பிர மணிய பாரதியார் ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடியுள்ளமையும் கல்தோன்றி முள் தோன்றமுன் தோன்றிய மூத்ததமிழ் சகல வல்லமையும் கொண்டதும், அனைவரும் விரும்புவது, இறைவனும் வேண்டுவது என்பதால் ''இறைவன் என்னைப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'' என்றும் வித்தையுடன் விளைந்த, வீரமுடன் எழுந்த அந்த வீரத் தமிழிற்கு புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் கூட "தமிழிற்கு அமுதென்று பேர். அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பொற்தமிழை பொருள் விளங்க, பொங்கு தமிழில் பாடியுள்ளமை யாவரும் அறிந்த உண்மை என்றால் பொய்யாகாது.

தமிழில் உள்ள இலக்கியங் களுள் மிகப் பழமை வாய்ந்தவை சங்க இலக்கியங்கள். இவ்விலக்கியங் கள் தோன்றிய காலம் சங்க காலம் எனப்படும். இக் காலத்தில் வாழ்ந்த புலவர்களால் பாடப்பட்ட செய்யுள் களில் பெரும்பாலானவை காலகதியில் செல்லாலும் சிதலாலும் சிதைந்து போக எஞ்சியவை எட்டுத் தொகை

பத்துப்பாட்டு என வகுக்கப்பட்டன. இவை காலந்தோறும் தேவைக்கும் சூழ் நிலைக்கும் நாட்டு நடப்பிற்கும் ஏற்ப பல்கிப் பெருகி பல்வகை இலக்கண இலக்கியங்கள் மலர்ந்தன. அவை தமிழ் மக்களது விழுமியங்கள் நிறைந்த வாழ்க்கை முறைகளை படம் பிடித்து காட்டுகின்றன என்றால் மிகையாகாது.

தமிழ்மொழி பல்வேறு சமயத்த வர்களாலும் அரவணைக்கப்பட்ட மொழியாகும். இம்மொழியானது சில மொழிகளைப் போல வழக்கொழிய வில்லை. இலக்கியங்களைத் தோற்று வித்த சில மொழிகள் இன்று எவரும் புரிந்து கொள்ளாத நிலையில் கைவிடப்பட்டிருக்கக் காண்கின்றோம். இன்னும் சில மொழிகள் சமயக் கருத் துக்களை வெளியிடுவதற்கு வாய்ப் பான மொழிகளாக அன்று சிறந்து விளங்கின. ஆனால் இன்றோ அவை பேச்சுவழக்கற்று வெறுமனே சமய ஆரா தனை மொழிகளாக இருப்பது புலனா கிறது. தனித்துவமிக்க தமிழ்மொழியோ அத்தகைய நிலைமையை எய்த வில்லை. ஈராயிரம் ஆண்டுகளிற்கு முன்னர் எவ்வாறு சிறந்து விளங் கியதோ அவ்வாறே இன்றும் சிறப்புற்று விளங்குகின்றது என்றால் மிகை யாகாது.

எல்லா நாடுகளும் நமதே, எல்லோரும், நம் உடன் பிறப்புக்களே, என்று கூறும் அளவிற்கு பண்டைய தமிழ் இலக் கியம் சிறந் து விளங்குகின்றது.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்பதைத் தாரகமந்திரமாகக் கொண்டதனால் தமிழ் மொழியானது கதித் தமிழே! கலைத் தமிழே! விழித் தமிழே! என்று புகழ்பெற்றுத் திகழ் கின்றது. எண்ணற்ற காப்பியங் களையும் பிரபந்த வகைகளையும் தன்னகத்தே கொண்டு சிறந்து விளங்குகின்றது. பண்டைய தமிழின் மொழி நடையை இன்றைய தமிழின் மொழிநடையுடன் ஒப்பிட்டுப் படிக்கக் கூடிய முறையில் அமைந்திருக்கும் சிறப்பைப் பெற்றது.

தமிழ்மொழி தமது வாழ்க் கையின் சகல நிலைகளிலும் கலந்துள்ளது. இசைத் தமிழாய் இராவணற்கு இராகம் தந்தது. வசை பாடிய காளமேகம் கவியிலும் நின்றது. கம்பனின் நாவில் ஏறிநின்று காவியம் படைத்தது. நாவலர் நாவிலே நற்ற மிழாய் நவின்றது. பகைகளைப் போக்கிட பாதை செய்வது, பக்தியுடன் இறைவனிற்கு பாமாலை பாட பாகமாய் நிற்பது, மதி போல மகுடம் பெற மாண்புடனே விளங்கும் இன்னோரன்ன இத் தமிழை பிழையறப் பேசவும் பிழையற எழுதவும் நாம் முயல வேண்டும். தமிழிலே உள்ள நூல்களை விரும்பிக் கற்க வேண்டும். கற்றதன் படி ஒழுக வேண்டும். இத் தமிழிற்கு நிகர் எதுவுமில்லை. இந்தப் பார் போற்றும் பொற்றமிழிற்கு பங்கம் ஏதும் ஏற்படாமல் காத்து சாதனைகள் பல படைத்து வளர, புகழ் ஓங்க யாவரும் கை கோர்த்து உறுதிகள் பூணுவோம்.

"வாழ்க தமிழ்மொழி
வளர்க தமிழினம்
ஓங்குக வையகமே"

யாழ்ப்பாணச் சைவக் கல்விப் பாரம்பரியம்

சைவப்புலவர் கந்த சத்தியதாசன்
ஆசிரிய ஆலோசகர்,
வலிகாமம் கல்வி வலயம்

யாழ்ப்பாணச் சமூகம் பண்டு தொட்டு சைவத்தமிழர்களே வாழ்ந்து வந்த பூமியாகும். மிகப்புராண காலத் திலிருந்தே கற்றறிந்த பல அறிஞர்கள் வாழ்ந்த பூமியாகும். புராண காலத் தில் இருந்தே எமது பண்பாட்டில் குருகுலக் கல்விமுறை இருந்து வந் துள்ளது. இக்கல்வி முறையை பிரா மணியக் கல்வி முறை என்றும் அழைப்பர். பிற்காலத்தில் இக்கல்வி மரபு திண்ணைக் கல்வி மரபு என அழைக்கப்பட்டது. அதாவது குருவி னுடைய வீட்டில் உள்ள உயர்ந்த நிலப்பரப்பே திண்ணை என அழைக் கப்பட்டது. இன்றும் சில பழைய ஓலை மண் வீடுகளில் திண்ணை யைக் காணலாம். இத்திண்ணையில் இருந்து குரு போதித்தலும் மாணவர் சப்பாணி கொட்டி இருந்து குரு கூறு கின்ற விடயங்களைக் கேட்டு மனனம் செய்யும் கல்வி முறையாகும். குரு கூறுகின்ற விடயத்தை அப்படியே கேட்டு மாணவர்கள் மீண்டும் மீண்டும் சொல்லி வருவதால் தவளைக் கல்வி முறை என்றும் அழைக்கப்பட்டது.

இக்கல்வியின் பிரதான நோக் கம் சமூகம் சார்பாகக் காணப் பட்டது. அதாவது

1. சமூகத்தோடு இசைவுபட்டு வாழ்தல்
2. சமூக ஆசார ஒழுக்கங்களைப் பின்பற்றுதும் திறன்
3. பயிர்ச் செய்கை மேலான பாவம் தராத தொழிலாக மேற்கொள்ளல்.
4. செய்யும் தொழிலே தெய்வம் எனப்பேணல்

இக்கல்வி முறையில் மிக முக்கியமாக ஒழுக்கக் கல்வி போதிக் கப்பட்டது. அதாவது இப்பிறப்பில் நல்வினை செய்பவன் அடுத்த பிறப் பிலே துன்பங்களை அனுபவிக்க மாட்டான். மறுதலையாக முற்பிறப்பில் நல்ல காரியங்களைச் செய்து ஒழுக்க மாக வாழ்ந்தவனே இப்பிறப்பில் சுக போகங்களோடு மகிழ்ச்சியான இல் வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார் கள். எனக் கன்மம் மறுபிறப்புக் கோட் பாட்டை பல புராண இதிகாசங்கள் வாயிலாக எடுத்துப் போதித்து எல் லோரும் ஒற்றுமையாக வேண்டும். என்ற உலக சகோதரத்துவம் வலியுறுத்தப் பட்டது. இக்கோட்பாடு தமக்குத் தாமே உளச்சாந்தியை ஏற்படுத்துவதற்கும் உதவியாகின்றது. அதாவது வலிமை மிக்க சீர்மியக் கருத்தியலாகவும் இக்கல்வி முறை அமைந்தது எனலாம்.

இவற்றை விட தமிழ் இலக் கணம் இலக்கியம் சிறப்பாக போதிக் கப்பட்டது. தாய்மொழியைச் சிறப் பாகக் கற்க வேண்டும். என்ற சிந்தனை யில் நன்னூல், தொல்காப்பியம் தர்க்க சங்கிரகம் தண்டியலங்காரம் யாப்பருங் கலக்காரிகை போன்ற நூல்கள் முழுமையாக போதிக்கப்பட்டது. மேலும் சைவசமய இலக்கியங்கள் மட்டுமன்றி சைவசித்தாந்த தத்துவ நூல்கள் வானசாஸ்திரம், சோதிடம் சித்தமருத்துவம் என்பவையும் போதிக் கப்பட்டு வாழ்வியலில் அவற்றின் பயன்பாட்டையும் செழுமைப்படுத்தியது.

வாழ்க்கையில் நூற் கல்வியை எல்லோரும் பெற வேண்டும் என்ற சிந்தனை இருந்தது மட்டுமன்றி கற்றோர்க்கு சிறந்த மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்பட்டது. கல்வி கற்றவர்களை நிறைகுடம் என்றும் இவர்கள் பயனுடையார் என்பதால் காய்க்கும் மரம் என்றும் இலக்கியங்களில் சித்த மழகியார், அழகியமாந்தர் என்றும் அழைக்கப்பெற்றனர். மேலும் வல்லவர் வல்லவராயர், மாப்பாணர், சைவப் புலவர், புலவர், வித்துவான், பண்டிதர், நூலாசிரியர், ஞானியர், வாணர் போன்ற பல அடைமொழிகள் நூற் கல்வி கற்றோருக்கு வழங்கப்பட்டது. எத்தகைய சமூக ஒன்று கூடலிலும் கற்றவர்களுக்கு முக்கியம் கொடுக்கப் பட்டது கற்றவர்கள் சமூக விளக்கு களாகவும் சமூக ஒழுக்கத்தைப் பேணுபவரும் பாதுகாப்பவராகவும் முரண்பாடுகளைத் தீர்ப்போராகவும் நடுவர்களாகவும் காணப்பட்டனர். "அக்கத்துக்கும் பக்கத்துக்கும் மல்லிகைப் பூ நடுவில் ஓர் ஏட்டுடையார்" என்ற தொடர் இதற்கு சான்று பகர்கின்றது.

கற்றோர்கள் நல்ல பேச்சுடையவர்களாக காணப்பட்டனர். சிந்தித்துப் பேசுதல், நிதானமாகப் பேசுதல், தளம்பலின்றி பேசுதல், மேற்கோள் காட்டி பேசுதல், அமைதியாக பேசுதல் கற்றோர்களுக்குரிய பண்புகளாக காணப்பட்டது. உரத்த தொனியில் சிரித்தல், வைதல், பிழைபடப்பேசுதல் அடக்கமின்றி பேசுதல் முரண்படப் பேசுதல் கற்றோரால் தவிர்க்கப்பட்டது.

குழந்தைகளைத் தாலாட்டும் போது கூட கல்வி பற்றிய சிந்தனை ஊட்டப்பட்டது.

"பாட்டன் படித்த ஓலை பாலனுக்குத் துணையாகும்
அப்பன் படித்த ஓலை அரசனுக்கு துணையாகும்
பூட்டன் எடுத்துரைத்த பொன் கூர் எழுத்தாணி
ஏட்டுக்குள் இருக்குதையா என்மணியே கண்வளராய்"

குழந்தைகள் கற்கத் தொடங்கும் அட்சர அப்பியாசம் என்னும் வித்தியாரம்பம் ஆழ்ந்த அறிவுடையோரால் நல்ல முகூர்த்தத்தில் பிள்ளையார் வணக்கத்தோடு ஆரம்பிக்கப் பட்டது. பசு கட்டி வளர்த்த பனையின் ஓலையில் ஏடுகள் எழுதினர். ஏடு பதனிடுவதற்கும் எழுதுவதற்கும் வளர் பிறை நாட்கள் தெரிவு செய்யப் பட்டது. ஏடு தொடக்கும் நாளில் சிவன் அடிமுடி தேடிய வரலாறு கூறப்படும். அதாவது கரையிலது என்பதை உணர்த்தினர். ஏடு தொடக்க முன் வாயிலில் தேன் அல்லது கற்கண்டு கொடுக்கப்பட்டது கல்வி இனிமை யானது என்பதைக் குறிப்பதாகும்.

கல்வி போதித்தலில் கண்டு பிடித்தல், பாவணை பண்ணல், இசையோடு பாடுதல், உரை கூறுதல் என்பன காணப்பட்டது. குறிப்பாக புராணப் பாடல்களைப் பாட அதற்கு எல்லோரும் விளங்கக் கூடியவகையில் பொருளை உரைநடையில் இசையோடு கூறப்பட்டது. இதுவே புராண படன முறையாகும். யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரம் என மட்டுவிலூர் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை நூல் எழுதுமளவிற்கு திண்ணைக்கல்வி முறை எமது பாரம் பரியத்தில் வளர்ந்ததொன்றாக இருந்தது.

திண்ணைப் பள்ளிகளில் ஆண் கள் படித்ததைப் போன்று பெண்களும் கல்வி கற்றிருக்கிறார்கள். "கல்லாள் - கல்லாள்" அதாவது படிக்காதவள் கல்லுப் போன்றவள் என்றும் "படியாள் - படியாள்" அதாவது படிக்காதவள் கல்லால் கட்டிய படிபோன்று பலரி னாலும் மிதிக்கப்படுவாள் என்றும் கூறப்பட்டதிலிருந்து பெண்களுக்கு கற்க வேண்டும் என்ற விருப்பம் ஏற்படுத்தப்பட்டது.

பெண்கள் கல்வி பெற வேண் டும் என்பதை தாலாட்டுப் பாடலி லிருந்தே ஊட்டப்பட்ட மரபை சில தாலாட்டுப் பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றது.

"நாய்க்கு படிப்பில்லை நரிக்கு
படிப்பில்லை
நான் பெத்த பெண்ணுக்குப் படிப்புவா
படிப்புவா"

"தோள் வீசம்மா தோள் வீசு சுந்தக்
கிளியே தோள் வீசு
வானே பூவே தோள் வீசு வாக்குப்
பொலியத் தோள் வீசு"

பெண்கள் சொல் சார்ந்தஅறிவு மட்டுமன்றி சமூக இசைவாக்கம், சமை யற்கலை, இசைக்கலை, பெட்டியிழைத் தல், தையல், பூமாலை கட்டல், வீடு மெழுகுதல் எனப் பலவகையான கைப்பணி வேலைகள் கற்றிருந்தனர்.

பெண்கள் ஆலயங்களில் திரு முறைகளைப் பண்ணோடு பாடினர். இசைக் கருவிகள் வாசித்தனர். குறிப் பாக பேரி யாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ், நாரதயாழ், அம்புரியாழ் எனப் பல வகை யாழ்கள் இருந்தாலும் மருத்துவயாழ், துரும்பு யாழ், செங்கோட்டியாழ் முதலிய வற்றை பெண்களே வாசித்தனர். ஆண்களை யாழ்பாடி என்பதைப் போன்று பெண்கள் யாழிகள் என அழைக்கப்பட்டனர்.

மேலும் யாழ்ப்பாணக் கூத்துப் பாரம்பரியத்தில் ஆண்கள் ஆடும் மல்லுக்கூத்து என்பதைப் போல் பெண் கள் பண்டக் கூத்து ஆடினர். பண்டங் களைக் கையில் அல்லது தலையில் தாங்கியவாறு ஆடுவதாகும். பாற்செம்பு, கரகம், கூடை, வைக்கோற்கட்டு வேறு தானியக் கதிர்க்கட்டு, பூசணிக்காய், சுரக்காய் முதலியவற்றைக் கையில் ஏந்தி ஆடுவார். இன்றும் காவடி யாட்டத்தோடு பெண்கள் பாற்செம்பு, கரகம் ஆடுவதைக் காணலாம். பிற் காலத்தில் பரதநாட்டியம் பயின்ற பெண்களே சின்னமேளம் என்ற பெய ரில் நடனங்கள் ஆடியமையையும் அறியலாம்.

பெண்களிடத்தில் அக்காலம் அழகுக் கலையும் நன்கு விளங்கி யுள்ளது. மாக்கோலம் போடுதல், மண் சுவர்களில் சுண்ணாம்பினால் பூக்கள் வரைதல், சாணியால் மெழுகுதல், பனை ஓலைகளில் வண்ணப் பெட்டி கள், வண்ணப்பாய், கொட்டப்பெட்டி கிலுகிலுப்பை, பன்னாங்கிழைத்தல், பூமாலை கட்டல், சடைநாகம் பின்னு தல் எனப்பல கைவினைக் கலை களையும் கற்றுக் கொண்டனர்.

இவற்றைவிட அயலில் வாழும் அறிவறிந்த பெண்ணிடம் சென்று சிறுமிகள் பல விடயங்களைக் கேட்டுக் கற்பார்கள். மரநிழல்களில் இருந்து பலகதைகளையும் வாழ்வியல் பண்பு களையும் அற ஒழுக்கங்களையும் கேட்டுக் கொள்வதோடு எழுத்துக்களை கைவிரலைப் பிடித்து மண்ணிலே எழுதியும் பழகுவார்கள். நாவலர் பெருமான் நூல்களை அச்சிட்டு வழங்க முதலில் ஏட்டுச்சுவடியிலேயே பல நூல் கள் காணப்பட்டதும் இங்கு குறிப் பிடத்தக்கது.

இவ்வாறு இருந்த சைவக் கல்விப் பாரம்பரியம் போர்த்துக்கீசர் இலங்கைக்கு வந்த காலம் முதல் மறையத் தொடங்கியது எனலாம். 19-ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் பாடசாலைகள் என்ற நிறுவனங்களை அமைத்து கல்வி போதிக்கத் தொடங் கிய காலம் நம்மவர்களும் நிறுவன அமைப்பில் பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும் என விரும்பினார்கள். இதன் பிரகாரம் முதன்முதலில் இலவசக்கல்வி வழங்க முதல் சைவத் தமிழ் பாடசா லையை 1948 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் வண்ணார் பண் ணையில் சைவப்பிரகாச வித்தியா சாலை எனும் பெயரில் அமைத்தார். பின்னர் சைவப்பிரமுகர்களுடைய உதவியோடு கோப்பாய், கந்தர்மடம், வேலணை, மூளாய், தெல்லிப்பளை, புலோலி ஆகிய இடங்களிலும் சைவப் பிரகாச வித்தியாசாலைகள் ஆரம்பிக் கப்பட்டது. சேர். பொன் இராமநாதன், இந்துபோர்ட் சு. இராசரத்தினம் போன்ற பலரது முயற்சியால் ஆங்காங்கே பல சைவப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு சைவக்கல்வி வளரலானது.

இவ்வாறு சைவர்கள் உணர்வு பூர்வமாக எமது சமயம், எமது சமூகம் பாரம்பரிய் கல்வியறிவைப் பெற வேண்டும் என்ற சிந்தனை 1962இல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப் பேற்றதோடு சற்று வீழ்ச்சி நிலை யடைந்ததென்றே குறிப்பிடலாம். இன்று பாடசாலைகள் கல்வியை வளர்த் தாலும் கூட எமது பாரம்பரியமான கல்விக்கு அவை எவ்வளவு முக்கியத் துவம் கொடுக்கின்றது?, ஒழுக்கத்துடன் கூடிய கல்வி ஊட்டப்படுகின்றதா? எனப் பல அறிஞர்கள் தலையில் கை வைக்கின்றார்கள். சுருங்கக் கூறின் மூளை வளர்ச்சிக்கு கல்வி வழங்கப் படுகின்றதேயன்றி மனவளர்ச்சிக்கு நல்ல மனப்பாங்கிற்கு சமூக விழுமியங் களை ஏற்கக் கூடிய வகையில் கல்வி வழங்கப்படவில்லை என்பதே வெள் ளிடைமலை. எமது நாடும் சமூகமும் நல்ல அமைதியான மகிழ்ச்சியான வாழ்வை வாழ வேண்டுமானால் ஒழுக் கத்துடன் கூடிய கல்வி, நல்ல மனப் பாங்கை வளர்க்கக் கூடிய கல்வி வழங்க வேண்டியதும் இளம் சிறார் களின் நல்ல மனதில் நல்ல சிந்தனை களை வளர்க்க வேண்டியதும் எம் இன மத கலாசாரத்தை கட்டிக்க உதவும் என நம்புகின்றேன்.

கற்றல் கோட்பாடுகளும் தகவல் நிரலிய அணுகுமுறையும்

(Learning Theories and Information Processing Approach)

பேராசிரியர் சபா. ஜெயராசா

தகவல் நிரலிய அணுகு முறைக்கு முன்னோடியாக பல ஆய்வு கள் கல்வி உளவியலிலே இடம்பெற்ற மையை முதற்கண் சுட்டிக்காட்ட வேண் டியுள்ளது. முன்னைய அனுபவங்கள் பின்னைய எழுச்சிக்குக் காரணமாக அமையும் செயற்பாடு "அறிகைத்தள மிடுகை" எனப்படும். அறிவின் வளர்ச்சி மூன்று பரிமாணங்களைக் கொண்டது. முதலாவது பரிமாணம் மெய்யியலுடன் தொடர்புடையது. இரண்டாவது பரி மாணம் விஞ்ஞானத்துடன் தொடர்புடை யது. மூன்றாவது பரிமாணம் பிரச்சினை விடுவிக்கும் அழகியற் கற்பனைகளு டன் தொடர்புடையது. இந்த மூன்றா வது பரிமாணம் பொதுவாக எமது கல்விச் செயற்பாடுகளின் கவன ஈர்ப்புக்குள் இடம்பெறாமையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கற்றல் என்பது பன்முகப் பரி மாணங்களைக் கொண்ட செயற்பாடு, அறிவைத் திரட்டுதல், அனுபவங் களைத் திரட்டுதல், கிரகித்தலின் வழி யாக நிகழும் மேம்பாடு, மீயாற்றல் பெறல், (Mastery) பிரயோக வலுக் களைத் திரட்டுதல், நடத்தைகளில் ஓரளவு நிரந்தர மாற்றங்களை ஏற்படுத் துதல், மீளவலியுறுத்தல்களை உள் வாங்கித் தொழிற்பாடுகளை மேம் படுத்துதல், முரண்பாடுகளின் இயக் கங்களை விளங்குதல், தெறித்தல், துலங்குதல், இசைவாக்கம் செய்தல் என்றவாறு கற்றல் எண்ணக்கரு விரிந்த பொருள் தருவதாக அமைகின்றது.

பண்டைய மெய்யியலாளர்கள் அறிவாய்வியலில் (Epistemology) ஆழ்ந்த கவனம் செலுத்தினர். அறிவு என்பது யாது? அதன் இயல்புகள் யாவை? அதன் வரையறைகள் யாவை? என எழுப்பப்பட்ட வினாக்கள் கற்றல் பற்றிய எண்ணக்கருவை விளக் குவதற்கும் விசாலிப்பதற்கும் துணை நின்றன. அனைத்து அறிவும் புலன்சார் அனுபவங்களை அடியொற்றி நிகழ்தல் அரிஸ்ரோட்டினால் (கி.மு. 383 - 322) விளக்கப்பட்டது. இந்த விளக்கத்தை அடியொற்றிப் புலனறிவாதம் (Empiricism) வளர்ச்சியுறலாயிற்று.

தோமஸ்றீட் (1710 - 1796) என்பவரால் உருவாக்கப்பெற்ற துறை சார் உளவியல் (Faculty Psychology) வளர்ச்சி கற்றலை விளக்குவதற்கு ஆரம்ப நிலைகளில் உதவிய ஒரு கோட்பாடு ஆயிற்று. மனித மூளை இயல்பாகவே பல்வேறு துறைகளைக் கொண்டு தொழிற்படுகின்றது என்றும் அந்தத் துறைகள் ஒவ்வொன்றையும் தழுவியதாகக் கற்றல் நிகழ்கின்றது என்றும் அந்தக் கோட்பாடு விளக்

கியது. ஆயினும் இந்தக் கோட்பாடு விஞ்ஞான பூர்வமாக உருவாக்கப் பெறவில்லை.

கற்றலை விளக்குவதற்கு மேலெழுந்த பழைய கோட்பாடுகளுள் அடுத்து முக்கியத்துவம் பெறுவது இயற்கோப்புவாதம் (Voluntarism) ஆகும். சித்த உறுதியுடன் நிகழும் உறுகவனமும் (Apperception) சித்த உறுதியுடன் நிகழும் நனவு உணர்வுகளின் ஒழுங்கமைப்பும் பற்றிய மூளையின் தொழிற்பாடுகளை வூண்ட் (1832 - 1920) விளக்கலானார். கற்றற் தொழிற்பாட்டிலே சித்த வலுவின் முக்கியத்துவத்தை விளக்கிய இலட்சியப் பாங்கானதாக அக் கோட்பாடு அமைந்தது. இதனோடு தொடர்புடையதாக வளர்ச்சி பெற்ற கட்டமைப்புக் கோட்பாடு (Structuralism) கற்றல் என்ற தொழிற்பாட்டினை விளக்குவதற்குரிய தொடர்ச்சியான உளவியல் நடவடிக்கைகளுள் ஒரு பிரதான படிகல் ஆயிற்று. ரிரெச்னர் (1867 - 1927) என்பவரால் உருவாக்கப் பெற்ற இக் கோட்பாடு அகநோக்கல் ஆய்வு முறையைச் சிறப்பாகக் கொண்டிருந்தது. சிந்தனையின் அடிப்படையான கூறுகளைக் கண்டறிதலும் அக் கூறுகள் இணைப்பு விதிகளால் எவ்வாறு ஒன்று திரட்டப்பட்டு வளர்ச்சி பெறுகின்றன என்பதைக் கண்டறிதலும் கட்டமைப்புக் கோட்பாட்டில் விளக்கப்பெற்றன.

கட்டமைப்புக் கோட்பாட்டைத் தொடர்ந்து தொழிற்பாட்டு வாதம் (Functionalism) வளர்ச்சியடையலாயிற்று. இதனை உருவாக்கிய முன்னோடியாக வில்லியம்ஸ் ஜேம்ஸ் (1842 - 1910) விளங்குகின்றார். உயிரிகள் சூழலோடு தழுவும் செயல்முறையை விளக்கிய டார்வினுடைய சிந்தனைகள் தொழிற்பாட்டு வாதத்தை உருவாக்குவதிலே செல்வாக்குச் செலுத்தின. சூழலுக்கு ஏற்றவாறு தழுவிக் கொள்வதில் உளச் செயல்முறைகளும் நடத்தைச் செயல்முறைகளும் எவ்வாறு இணைப்புக் கொள்கின்றன என்பது தொழிற்பாட்டு வாதத்தின் மையப் பொருளாக அமைந்தது. மனித உணர்வுகளை தனிமைப்பட்ட ஒரு பொருளாகக் கருதாது, சூழல் இயக்கத்துடன் தொடர்புபட்ட பொருளாகக் கருதியமை கற்றல் உளவியலுக்கு இவர்கள் வழங்கிய முக்கிய பங்களிப்பு எனலாம்.

வாட்சன் (1878 - 1958) முன்னெடுத்த நடத்தைவாதம் (Behaviorism) கற்றல் உளவியலிலே ஒரு சிறப்பார்ந்த திருப்பத்தை ஏற்படுத்தியது. உணர்வுகள் என்ற அருவமான பொருட் பரப்பிலிருந்து நடத்தைகள் என்ற காட்சி நிலையான அளவீடுகளை நோக்கிய திருப்பத்தை நடத்தை வாதிகள் ஏற்படுத்தினர். விளைவுகளைத் திட்டவட்டமாக அளவீடு செய்யக்கூடிய பரிசோதனை முறையே இவர்கள் அறிமுகம் செய்தனர்.

இவற்றின் பின்னணியிலே கற்றற் கோட்பாட்டினை உருவாக்குவதற்கு எட்வேட் லீ தொண்டைக் வழங்கிய பங்களிப்பு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 1930-ம் ஆண்டுக்கு முந்திய ஆய்வுகள் 1930-ம் ஆண்டுக்

குப் பிந்திய ஆய்வுகள் என இவரது ஆய்வுகள் வகைப்படுத்தப்படுகின்றன. 1930-ம் ஆண்டுக்கு முந்திய ஆய்வு களில், ஆயத்த விதி, பயிற்சி விதி, விளைவு விதி ஆகியவற்றைக் கற்ற லில் இவர் வலியுறுத்தினார். 1930-ம் ஆண்டுக்குப் பின்னர் பல நிலைத் துலங்கல் (Multiple Response) தற் காலிக மனோபாவ ஆக்கம் அல்லது தொடை (Attitude or Set) சூழல் மாறத் துலங்கலும் மாற்றமடையும் தனிமங்களின் முன்னெழுவது (Pre-potency of Elements) முதலியவற்றை வலியுறுத்தினார்.

ஒரு துலங்கலால் பிரச்சனை விடுவிக்கப்படாதிருக்கும் நிலையில், குறிப்பிட்ட பிரச்சனை தீர்க்கப்படும் வரை பலவகையான துலங்கல்களை உயிரி தோற்றுவித்தல் பலநிலைத் துலங்கல் எனப்படும். ஒரு தொழிற் பாட்டின்போது கிடைக்கப்பெறும் மகிழ்ச்சியான அனுபவத்தை அல்லது கசப்பான அனுபவத்தை அந்த நிகழ்ச் சியுடன் தொடர்புபடுத்தல் மனோபாவ ஆக்கம் அல்லது நிகழ்ச்சித் தொடை எனப்படும்.

1930-ம் ஆண்டுக்குப் பின்னர் விளைவு விதி தொடர்பான தமது கருத்தில் தொண்டைக் மாற்றங்களை ஏற்படுத்தினார். மீளமீளச் செய்வதால் ஒரு தொழிற்பாட்டுக்கும் துலங்கலுக்கு முள்ள தொடர்பு வலுப்பெறும் என்ற கருத்திலே சிறிய மாற்றத்தை ஏற் படுத்தி தண்டனைகளால் அந்தத் தொடர்பு வலிமை பெறாது எனக் குறிப்பிட்டார். இதனுடன் தொடர்பு டைய விளைவின் பரவல் (Spred of Effect) என்ற கருத்தையும் அவர் முன் வைத்தார். மீளவலியுறுத்தலால் துலங் கல் வலுப்பெறுதல் மட்டுமன்றி அத னோடு இணைந்துள்ள துலங்கல்களை யும் வலுப்படுத்தும் என விளக்கினார். முயன்று தவறிக் கற்றலைத் தெரிவு செய்தலும், அணைத்தலுமாகிய தோற் றப்பாடு என (Selecting and connect-ing Phenomenon) தொண்டைக் ஆரம்பத்தில் விளக்கினார்.

ஸ்கின்னருடைய கற்றற் கோட் பாடு தூண்டியல் வெளிப்படும் நடத்தை மற்றும் தொழிலி நடத்தை ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு களைக் காணமுயன்றது. தூண்டியால் முகிழ்க்கும் நடத்தை தூண் விசையால் அருட்டிவிடப்படுகின்றது. தொல்சீர் நிபந் தனைப்பாட்டில் இதுவே சிறப்பிடம் பெற்றது. இவ்வகை நடத்தை 'S' வகை நிபந்தனைப்பாடு என்றும், துலங் கலால் அருட்டிவிடப்படும் நடத்தை 'R' வகை நடத்தை என்றும் விளக்கப்படும். 'R' வகை அதாவது துலங்கல் வகை நடத்தையைக் குவியப்படுத்தி ஸ்கின்னர் தமது ஆய்வுகளை முன்னெடுத்தார்.

தூண்டியை மீள வலியுறுத்து கின்ற எந்த நடத்தையும் மீண்டும் மீண்டும் செய்யப்படுவதற்கு வாய்ப்பாக அமையும் தொழிலித் துலங்கலின் விகிதத்தை அதிகரிக்கச் செய்யும் எந்தத் தொழிற்பாடு மீளவலியுறுத்தும் தூண்டியாக அமையும். மீளவலியுறுத் தும் தூண்டியை உருவாக்கும் வகை யிலே ஓர் உயிரி தொழிற்படுதலை

தொழிலி நிபந்தனைப்பாடு விளக்கு கின்றது. நேர்மீள வலியுறுத்தலை நிகழ்த்துவதால் துலங்கலை அதி கரிக்கச் செய்யலாம். ஆனால் எதிர் மீளவலியுறுத்தலை அகற்றுவதனால் துலங்கலை அதிகரிக்கச் செய்யலாம்.

ஒரு செயலின் விளைவுகளின் சிறப்புப் பண்புகளையும் அனுகூலங் களையும் செய்பவர் அறிந்துகொள்ளும் போது ஊக்கல் மேலோங்குகின்றது. அந்தச் செயலை மீண்டும் செய்ய வேண்டும் என்ற உறுதி தோன்று கின்றது. இந்த ஊக்கலை ஏற்படுத்தும் செயல்முறையியே பின்னூட்டலா கின்றது.

ஸ்கின்னர் மீள வலியுறுத்த லின் அளவுத்திட்டங்கள் அல்லது பட்டி யல்கள் பற்றியும் ஆராய்ந்தார். இந்த வகையில் மாறாத கால இடைவெளிப் பட்டியல், மாறும்கால இடைவெளிப் பட்டியல், மாறாத விகிதப் பட்டியல், மாறும் விகிதப் பட்டியல் என்பவற்றை ஸ்கின்னர் இனங்காட்டினார். நிர்ணயிக் கப்பட்ட நேர இடைவெளியில் வெகு மதியை வழங்குதல் மாறாத கால இடைவெளிக்குரிய பட்டியலாகும். மாறுபடும் நேர இடைவெளியில் வெகு மதியை வழங்குதல் ஒப்பீட்டளவில் கூடிய தொழிற்பாட்டை உருவாக்க வல்லது.

விகிதப் பட்டியலில் நேரம் கருத்திற் கொள்ளப்படாது துலங்களின் எண்ணிக்கையே கருத்திற் கொள் ளப்படும். இங்கும் மாறும் இடை வெளியில் வெகுமதியை வழங்குதல் கூடிய தொழிற்பாட்டை உருவாக்கும்.

மீள வலியுறுத்தல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட டேவிட் பிறிமாக் என்பவர் மீளவலியுறுத்தலின் சார்புநிலைகள் (Relativity of Reinforcement) மீது கவனம் செலுத்தினார். இத்துறையில் வில்லியம் ரிம்பர்லேக் (Timberlake, 1980) மேலும் ஆய்வு களை மேற்கொண்டார். மறியான் பெய்லி ஆய்வுகளிலே மீள வலியுறுத் தல் வழியான நடத்தை உருவாக்கத் தின் மீது இயல்பூக்கம் வழியான பெயர்ச்சி ஏற்படுவதைச் சுட்டிக் காட்டினார். உயிரிகளின் நடத்தை ஒழுங்கு மாறுபடல் (Misbehavior of Organisms) பற்றி விளக்குவதற்கு இந்த ஆய்வுகள் மேலும் வழிவகுத்தன. சில சமயங்களில் தன்னியக்கமாக நடத்தைகளை ஒழுங்கமைத்தலும் (Auto shaping) கண்டறியப்பட்டுள்ளது.

இத்துறையில் அதிக செல் வாக்கை ஏற்படுத்திய இன்னொரு நிகழ்ச்சி அறிகை உளவியலின் வளர்ச்சியாகும். சிறப்பாக பியாசேயின் அணுகுமுறைகள் ஆழ்ந்த செல்வாக்கு களை ஏற்படுத்தின. சூழலோடு இடை வினை கொண்டு உயிரி அறிகைத் திட்டை (Schema) ஏற்படுத்தும் செயல் முறை தகவல்களை உள்வாங்குதல், ஒழுங்கமைத்தல், எளிமையாக மீட்டெ டுக்கக் கூடியவாறு தொகுத்தல், கிடைக் கப்பெறும் புதிய தகவல்களை உள் வாங்கி அறிகைக் கட்டுமானத்தை மேலும் விரிவுபடுத்துதல் என்றவாறு பியாசே விளக்கிய கருத்துக்கள் தகவல் நிரிலியக் கற்றலை வடி வமைப்பதற்கு மேலும் துணை நின்றன.

நோர்பேட் வின்னர் (1894-1964) உருவாக்கிய செழுமைஇயல் (Cybernetics) இத்துறையில் மேலும் பங்க

ளிப்பை வழங்கியது. தகவல் நிரற் படுத்தும் தொகுதியின் அமைப்பையும், தொழிற்பாட்டையும் கற்கும் இயலே செழுமை இயலாகும். சூழலில் இருந்து கிடைக்கப்பெறும் தகவல் களை ஒப்பீடு செய்து குறிப்பிட்ட சூழமைவுக்குப் பொருந்தக் கூடிய வகையிலே உச்சநிலைப் பயன்பாடு டையதை இனங்காணும் செயலைத் தன்னியக்கமாகவே மூளை மேற்கொள் ளுகின்றது. இது தன்னியக்கத் தருகைத் தொழிற்பாடு (Servo Mechanism) எனப்படும்.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து இடம்பெற்ற பொறிமை இயல் (Robotology) தகவற்கோட்பாடு (Information Theory) கணனிகளின் ஆக்கம் முதலியனவும் தகவல் நிரலிய அணுகு முறையிலே செல்வாக்கை ஏற்படுத் தின. மனித ஆற்றுகையினைப் பொறி கள் வாயிலாக முன்னெடுத்தல் பற்றிய கற்கையை பொறிமைஇயல் விளக்கும். தகவற்கோட்பாடு, தகவலைத் தெரிந்து கோடல் செய்தல் (Encoding) தக வலைத் தாங்கிச் செல்கின்ற கால்வாய் களை அமைத்தல் தகவல்பேறுவோன் கிடைக்கப் பெறும் செய்தியை தனது இயல்புக்கு ஏற்றவாறு கோடற் குலைப்பை (Decoding) மேற்கொள் ளல் முதலியற்றை விளக்குகின்றது. மனிதனுக்கும் கணினிகளுக்கும் வன்கலமும் (Hardware) மென்கலமும் (Software) இருத்தல் விளக்கப்பட் டுள்ளது. Loftus, G.R., and Loftus, E.F. (1976) Human Memory, Hillsdale, Erlbaum, p.6) கணினியின் நுட்பவியல் சார்ந்த ஆற்றுகையால் செயற்கை நுண்மதி (Artificial intelligence) உருவாக்கப்பட்டுகின்றது.

தரவல் நிரலிய அணுகுமுறை புலனர் சார் நினைவு (Sensory Memory), குறுங்கால நினைவு (Short Term Memory) நெடுங்கால நினைவு (Long Term Memory) சூழலில் உள்ள தூண்டிகள் புலன்சார்ந்த பெறுபொருள் களை (Receptors) அடைந்ததும் தூண்டியில் உள்ளடங்கிய தகவல்கள் மிகக் குறுகிய செக்கன் அளவுக்குள் தாங்கிவைத்திருக்கும் நிலை புலன்சார் நினைவு எனப்படும். புலன்சார் களஞ் சியப்படுத்தல் என்றும் இது கூறப்படும். இது தகவல் நிரலிகையின் முதலாவது படிநிலை எனப்படும். சிக்கலான உளத் தொழிற்பாடுகளுக்கு இதுவே தளமாக அமைகின்றது.

கட்புலனும், செவிப்புலனுமே அறிவை உள்வாங்குவதிலே ஒப்பீட்டள விற் கூடிய பங்கு வகிக்கின்றன. மிகக் குறைந்த கணப்பொழுது அளவிலே தான் இவற்றிலே தகவல் களஞ்சியப் படுத்தி வைக்கப்படுகின்றது. கட்புலன் சார்ந்த இக்களஞ்சியப்படுத்தல் (Iconic Store) எனப்படும். செவிப்புலன் சார்ந்த கணநேரக் களஞ்சியப்படுத்தல் ஒலி நிலைக் களஞ்சியப்படுத்தல் (Echoic Store) எனப்படும்.

அறியும் உள்ளடக்கப்படுத் தலை அடிப்படையாகக் கொண்டே குறுங்கால நினைவு உருவாக்கப்படு

கின்றது. நீண்டகால பிரயோகத்துக்குப் பயன்படாதவை குறுங்கால நினைவு கள் வைக்கப்பட்டுவிடும்.

நெடுங்கால நினைவில் அதிகம் பிரயோகிக்கப்படும் பொருள்கள், கருத்துக்கள், சம்பவங்கள் முதலி யவை தேக்கி வைக்கப்படும். ஆழ்ந்த உளப்பாதிப்பை ஏற்படுத்திய நிகழ்ச்சி களும் நெடுங்கால நினைவில் அழுத் தப் பட்டிருக்கும் அனுபவங்களின் கால அளவோடும் நெடுங்கால நினைவு தொடர்புபட்டிருக்கும். கூடிய காலப் பகுதியை உள்ளடக்கிய அனுபவங் கள் நெடுங்கால நினைவில் உள்ளடக் கப்பட்டுவிடும்.

இந்த வளர்ச்சிகளை எல்லாம் உள்வாங்கிய டொனால்ட் எ. நோர்மன் என்பார். கற்றல் பற்றிய வரைவிலக் கணத்தையும் விதிகளையும் விளக்க லானார். கற்றல் என்பது ஒரு பணி யைத் திறம்பட ஆற்றுகை செய்தலு டன் இணைந்த தொழிற்பாடு (It involves the ability to perform a task with skill) அது இலக்கு நோக்கிய ஞாபகத் திறனையும், திறன்மிக்க ஆற்றுகை யினையும் உள்ளடக்கியது என விபரித்தார். (Norman, D.A., 1982 Learning and Memory, New York, Freeman) கற்றல் தொடர்பான பின் வரும் விதிகள் அவரால் விளக்கப் பட்டன.

1. ஓர் உயிரி குறித்த தொழிற் பாட்டுக்கும், அதன் வெளிப்பாட் டுக்குமிடையேயுள்ள தொடர்பு களைக் கற்றுக் கொள்வதற்கு அவை இரண்டுக்குமிடையே அமைய இணைப்பு (Casual relat ion ship)இருத்தல் வேண்டும். இது அமையத் தொடர்பு விதி எனப் படும். (Law of casual relationship)

2. அமையக் கற்றல் தொடர்பான விதி (The Law of casual learning) இரு பகுதிகளைக் கொண்டது. ஒன்று - ஒரு குறிப்பிட்ட வெளிப்பாட்டைக் காட்டுவதற்கு அதனோடிணைந்த அமையத் தொடர்பு கொண்ட செயலை உயிரி மீளச் செய்யும். இரண்டு - விருப்பமற்ற ஒரு வெளிப் பாட்டைக் காட்டுவதற்கு அதனோடி ணைந்த அமையத் தொடர்பு கொண்ட செயலைத் தவிர்த்துக் கொள்ளும்.

3. அடுத்ததாக விளக்கப்படுவது தக வல் பின்னூட்டல் விதி (The law of Information Feed back) ஒரு நிகழ்ச்சியின் விளைவு அந்த நிகழ்ச்சி பற்றிய தகவல்களை வழங்கும்.

நினைவுத் திறனுக்கும் ஆற் றுகைக்கும் நேரடியான இணைப்பு உண்டு. தகவல் எவ்வாறு தேக்கி வைக்கப்பட்டுள்ளது என்பதும் பயன் படுத்தப்படுகிறது. என்பதும் ஞாபகத் தைப் பற்றிக் கற்கும்பொழுது வெளிப் படும். தகவல் எவ்வாறு பயன் படுத்தப்பட்டுள்ளது என்பது ஆற்றுகை கையைக் கற்கும்பொழுது வெளிப்படும். கற்றலைப் பற்றிக் கற்கும்பொழுது, புதிய தகவல்கள் எவ்வாறு வேண்டப் படுகின்றன என்பது வெளிப்படும்.

திறன்மிக்கோரது ஆற்றுகைக் கும் திறனற்ற செயற்பாடுகளைப் புரி வோரது நடத்தைகளுக்குமிடையே வேறுபாடுகளை நோர்மன் இனங் காட்டுகின்றார். அவையாவன:

1. இதப்பண்பு (Smoothners) திறன் மிக்க வாண்மையாளர்கள் தமது வேலையை இடறலின்றி இதமாகச் செய்வார்கள்.

2. தன்னியக்கப்பண்பு (Automatic ity) திறன்மிக்கவர்கள் தமது தொழிற்பாடுகளைத் தன்னியக்க மாகப் புரிந்த வண்ணமிருப்பர்.

3. உளமுயற்சி (Mental effort) திறன் அதிகரிக்க உள்ளத்தின் முயற்சி வீழ்ச்சியடைகின்றது. தமது உடலாலே சிக்கலான பணிகளைப் புரியும் பொழுது, அவரது செயற்பாடுகள் அதிக முயற்சிப் பிரயோகங்களின்றி இலாவகமாக நிகழும்.

4. நெருக்கீடு (Stress) கடினமான வேலையை ஆற்றல்மிக்கோர் உள நெருக்கீடுகள் இன்றி ஆற்றுகை செய்வர். ஆற்றல் குன்றியோர் குறிப்பிட்ட கடினமான பணியைச் செய்யும்பொழுது நெருக்கீடு களுக்கு ஆளாக நேரிடும்.

5. நோக்கற்புள்ளி (Point of view) ஆற்றல்மிக்கவர் ஒரு பொறியை இயக்கும்பொழுது இயக்கப்படி முறைகளை இலாவகமாகவும் தன்னியக்கமாகவும் மேற்கொள் வார். மற்றவர்கள் ஒவ்வொரு படி முறைகளையும், நிதானித்துக் கிர கித்துத் தொழிற்படுவர்.

நோர்மனுடைய கண்ணோட் டத்திலே கற்றல் இயல்புகள் பின் வருமாறு அமையும்:

1. உளப்படுத்தல் (Accretion) ஏற் கனவே உருவாக்கப்பட்டுள்ள அறிகைத் திரட்டுக்கு அமைய புதிய தகவல்கள் உள்வாங்கிக் கேடல் செய்தல் உளப்படுத்தல் எனப்படும்.

2. வடிவமைப்பாக்கல் (Structuring) ஏற் கனவே உள்ள அறிகைத் திரட் டுடன் இணைய முடியாத புதிய தகவல்கள் உள்வாங்கப்படும் பொழுது புதியவற்றை உள்ளடக் கியவடிவமைப்பாக்கம் மேற்கொள் ளப்படுகின்றது.

3. செயற்கூர்மை (Tuning) ஒரு வகை ஆற்றல் மிக்குடையவராக மாற்றி யமைப்பதற்கு செயற்கூர்மை வேண் டப்படுகின்றது. உளப்பகுப்படுத்தல் மற்றும் வடிவமைப்பாக்கள் ஆகிய இரண்டு செயற்பாடுகளும் இங்கு இடம்பெறும்.

4. சார்பியக் கற்றல் (Learning by Anal ogy) ஏற்கனவே உள்ள அறிகைத் திரட்டின் சார்புநிலைக்கேற்றவாறே

புதிய அறிகைத் திரட்டு கற்றுக் கொள்ளப்படும். சிக்கலான கற்றல் நிலமைகளில் இது ஏற்படுகின்றது. இச்சந்தர்ப்பங்களில் புதிய கற்றல் ஏற்பாடுகளின் பகுதிகளே விளக்கங் கொள்ளப்படுகின்றன.

ஏற்கனவே அறிகைக் கட்ட மைப்பைப் பயன்படுத்தி புதிய தகவல்கள் விளங்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு, வியாக்கியானம் செய் யப்பட்டு கற்றுக் கொள்ளப்படுகின்றன அல்லது கற்காது விடப்படுகின்றன.

முக்கியமான கற்றற் பரப்புக்கள் சார்பியக்க கற்றல் அடிப் படையாகவே நிகழ்கின்றன.

அறிகை உளவியலில் நாம் மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து முன்மொழியப்படும் ஒரு பிரதான எண்ணக்கரு "உடைவுப் புள்ளி" (Break Point) ஆகும். ஒரு புதிய விடயத்தை அல்லது அனுபவத்தைக் கற்றுக் கொண்டிருக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட மட்டம் அல்லது புள்ளிக்கு மேல் அவற்றை உள்வாங்க முடியா திருக்கம் அந்தப் புள்ளியே உடைவுப் புள்ளி எனப்படும். எப்போது உடைவுப் புள்ளி ஏற்படுகின்றது என்பதை அறிந்து கொள்ளுதல் கற்றல் நடவடிக்கையை எளிதாக்கிவிடும்.

References

1. Athey, I.J., and Ruba deau, D.O. (EDS) (1970) Educational Im plications of Piaget's Theory, Waltham MA: Ginn Blaisdle.

2. Bower, G.H., and Hil gard, E.R., (1981) Theo ries of Learning, Engle wood Cliffs IV J: Pren tice Hall.

3. Flanagan, O.,(1991) The Science of mind, cam bridge, MA: MIT Press.

4. Loftus, G.R. and Loft us, E.F. (1976), Human Memory, Hillsdale, NJ: Erlbaum.

5. Norman, D.A. (1982) Learning and Memory, New york: Freeman

6. Robinson, D.N. (1986) An Intellectual History of Psychology, Univer sity of Wisconsin Press.

மாணவ மனங்களை வென்று செல்லும் ஆசிரிய செல்வாக்கு

செல்வி கி. வீரசிங்கம்
பிரதிக்கல்விப் பணிப்பாளர் திட்டமிடல்,
தென்மராட்சி கல்வி வலயம், சாவகச்சேரி.

மனப்பாங்குகளை உய்த்தறிந்து மாணவ மனங்களை வென்றெடுத்து, மண் மீது அவர்களை மனிதர்களாக உருவாக்கும் பணி ஆசிரியப் பணியாகும். இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத் தலைவர்கள். பிள்ளைகளின் கல்வி முன்பள்ளியில் ஆரம்பமாகின்றது.

ஒவ்வொரு பிள்ளையின் வளர்ச்சியிலும் கல்விக்கான அடித்தளத்தை எடுத்துக் கொடுப்பது ஆரம்பக் கல்வியே. ஆரம்பக்கல்விக்கு அடிஅத்திவாரமாக பாடசாலைக்கு முந்திய முன்பள்ளிக் கல்வி அமைகின்றது. இக்கல்வியின் பெறுமானம் இதனை வழங்கும் ஆசிரியரால் உணரப்படுதல் வேண்டும். இத் துறையில் ஆசிரியர் தன்னை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அர்ப்பணிப்புடன் பணிபுரியும் ஆசிரியர் என்றும் மாணவ மனங்களில் இடம் பெற்றவராகின்றார்.

சிறுவர்கள் வீட்டிலிருந்து பள்ளி செல்லத் தொடங்கிய காலம் முதல் அவர்களின் பகல் பொழுதின் கணிசமான பகுதி ஆசிரியருடனேயே கழிகிறது. எனவே பிள்ளைகளை அவதானிப்பதிலும், வழிப்படுத்துவதிலும் அவர்களது திறன்களை வளர்த்தெடுப்பதிலும் - கல்வி சார்ந்த அறிவுத் தேவைக்கும் அப்பால் - அன்பு, அரவணைப்பு, ஆதரவு போன்ற உளம் சார்ந்த தேவைகளை நிறைவு செய்வதிலும் ஆசிரியரின் செல்வாக்கு தங்கியுள்ளது.

பச்சை மண்ணை நாம் விரும்பிய வடிவில் உருவமைப்பது இலகுவான காரியமாகும். குழந்தைகளும் பச்சை மண் போல வளைந்து வரக் கூடிய இயல்புடையவர்கள். சிறுவர்கள் ஆசிரியர்கள் மீது பற்றும் நம்பிக்கையும் உடையவர்கள். ஆசிரியரின் சொல், செயல் ஆகியவற்றைப் பின்பற்ற முனைபவர்கள். ஆகவே இலகுவாக ஆசிரியர்கள் பிள்ளைகள் மீது செல்வாக்குச் செலுத்தி தம்வசப் படுத்திக் கொள்ள முடியும்.

இத்தகைய செல்வாக்குடைய ஆசிரியரின் பணியும் பங்கும் பாரியது. நமது நாட்டின் வருங்காலமே நம் வகுப்பறைகளில் தான் தங்கியுள்ளது.

வீடு கட்டுவதற்கு அத்திவாரம் பொருத்தமாக உறுதியாக இடப்பட வேண்டும். மாணவ வாழ்க்கையின் அத்திவாரம் ஆரம்ப, முன் ஆரம்பக் கல்வியுடன் அடியிடப்படுகின்றது. சிறுவர்களின் முழு வளர்ச்சியும், எதிர் காலமும் இவ் அத்திவாரத்தில் தங்கியிருப்பதால், இவ் ஆரம்பப் பருவத்தை கையாளும் ஆசிரியர், துறைசார் நிபுணத்துவம் பெற்றிருத்தல் வேண்டும். உளவியல், பின்னணிகள் அணுகு

முறைகள் பற்றி போதிய விளக்கம், அனுபவம், புரிந்துணர்வு பெற்றிருக்க வேண்டும்.

- மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு ஏற்ற இடமாகப் பாட சாலையை மாற்றுதல்.
- மாணவர்களது உடல், உளச் சுமையைப் போசிக்கும் இடமாகப் பாடசாலையை மேம்படுத்துதல்.
- பாடசாலைச் செயற்பாடுகளில் பெற்றோரின் பங்கேற்றலை ஊக்கப் படுத்தல்.
- வகுப்பறையை செயலூக்கம் மிக்கதாக, கற்றலுக்குரிய கவி நிலை உடையதாக்கல்.
- பிள்ளைகளின் வளர்ச்சியிலும், விருத்தியிலும் ஏற்படுகின்ற பின் னடைவுகளை அறிந்து கொண்டும், அவர்களது தேவைகள் பற்றி தெரிந்து கொண்டும் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற் கொள்ளுதல்.
- வகுப்பறை, பாடசாலை என்ற சூழலைக் கடந்து பிள்ளையின் குடும்பம், வீடு, சமுதாயம், சூழல் பற்றி தெரிந்து வைத்திருத்தல், தேவைப்பட்ட இடங்களில் எல்லாம் வழிகாட்டல் வழங்கல்.
- பிள்ளையின் சமூகச் சுகவாழ்வு பற்றி அறிந்து இருக்க வேண்டும். அன்பு செலுத்துதல், அன்பைப் பெறல், புரிந்துணர்வு, பிறரை மதித் தல், மனிதத் தன்மையைப் புரிய வைத்தல்.
- மனச்சுகவாழ்வு பற்றி அக்கறை செலுத்த வேண்டும். மகிழ்ச்சி, தீர்மானம் எடுக்கும் திறன், தளம் பாதிருக்கும் தன்மை, சமநிலை ஆளுமை, பொறுப்புணர்ச்சி, பொறுமை, தன்னம்பிக்கை, அழகு ணர்வு, படைப்பாற்றல் விரிவாக்க மடைதல்.
- உடற்சுகம் பற்றிய அவதானிப்புச் செலுத்துதல் வேண்டும். சுத்தம், சுகாதாரம், நோயற்ற வாழ்வு, உட்ல் அபிவிருத்தி, போஷாக்குக் குறைவு பற்றிய அவதானிப்புக்கள்.
- விளையாட்டு, ஓய்வு, பொழுது போக்கு ஆகியவற்றின் தேவையும் பயன்பாடும்.
- உளப்பிரச்சனை உடையவர்களில் விஷேட கவனஞ் செலுத்துதல் வேண்டும். பதகளிப்பு மெய்ப்பாடு, மனச்சோர்வு, நெருக்கீடு உடைய வர்களை இனங்கண்டு பரிகாரம் காண நடவடிக்கை எடுத்தல்.
- ஒதுங்கியிருக்கும் பிள்ளைகள் பற்றியும், கட்டுப்படுத்த முடியாத பிள்ளைகள் பற்றியும், மெதுவாகக் கற்போர் பற்றியும், விஷேட கவ னஞ் செலுத்துதல் வேண்டும். பெற் றோருடன் இடை வினைகளை ஏற்படுத்தி பிள்ளைகளின் வளர்ச் சிக்கு ஆவன செய்தல்.

மனிதப் பண்புகளை ஆரம்ப நிலையிலிருந்தே மலரச் செய்வதற்கு ஆரம்பக்கல்விக் கட்டமைப்பும் கற்றல் கற்பித்தல் செயற்பாடும் களமாகின்றது. 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து'. பிஞ்சு மனத்தில் ஆசிரியர்

செலுத்தும் செல்வாக்கு என்றும் பிள்ளையின் நெஞ்சில் நிலைத்து நிற்கும்.

இலங்கையில் காணப்படும் தொழில்களுள் பாரியளவில் மனித வளத்தைக் கொண்ட துறையினர் கல்வியில் ஆசிரியர்களேயாவர். ஏனைய தொழில் துறையினர் சேவையை வழங்கின் தேவை முடிந்த வுடன் அவர்களை மனிதர் மறந்து விடுவர். நோய் குணமடைய டாக்டரை மறந்து விடுகிறோம். வழக்கு முடிவ டைய வழக்கறிஞரை மறந்து விடுகி றோம். ஆனால் பாடசாலைக் காலம் முடிவடைந்தாலும் பிள்ளைகள் தம் வாழ்க்கையை உருவாக்கிய ஆசிரி யரை என்றுமே மறப்பதில்லை. தம்மை மனிதராக்கிய ஆசிரியரை தெய்வமாக மதித்து நெஞ்சில் போற்றுகின்றார்கள்.

குழந்தையின் இயல்பு, உடல், உள்ளம், மனவெழுச்சி ஆகியவற்றின் விருத்தி, சமூக இசைவாக்கம், உளமொழி, எதிர்வு கொள்ளும் பிரச் சனைகள், அவர்தம் உள நலம், அழகுணர் திறன் ஆகியவற்றை ஆசிரியர் அறிந்திருக்கும் பொழுது சிறுவரை வழிநடாத்தும் பணி இலகு வாகின்றது.

புலன்கள் வழியாகத் தூண்டி உள்ளே செலுத்தப்படும் போது கற்றல் ஆரம்பிக்கின்றது. அதனைத் தொடர்ந்து தகவல்களை நிரற்படுத்தும் சந்தர்ப்பம் உள்ளத்தில் நிகழ்கின்றது. இந்த உள்ளார்ந்த செயல்முறையை நெறிப்படுத்தும் திறமை ஆசிரியரில் தங்கியுள்ளது.

ஒவ்வொரு மாணவனும் தனதுவாழ்வை வெற்றிகரமாக அமைத்துக் கொள்வதற்கு உச்ச அளவிலான வாய்ப்புக்களை வழங்க வேண்டும். கற்றல் நடவடிக்கை சார்ந்த முகாமைத்துவ திறன் ஆசிரியருக்குப் போதியளவு இருத்தல் வேண்டும்.

- மாணவரை இனங்காணலும் அவ னது தேவைகளைப் பூர்த்தி செய் தலும்.
- மாணவனது சுயகௌரவத்தைப் பாதுகாத்தல்.
- பொருளாதாரப் பின்னணியைக் கவனித்தல்.
- மாணவனுடன் சிறந்த தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளல்.
- நலிவான மாணவர்களின் திறன்சார் அடைவு விருத்திக்கு வழிவகுத்தல்.
- மாணவருக்கு பாடசாலையில் பாது காப்பினை வழங்குதல்.
- கட்டொழுங்குகளைப் பேண பயிற் றுவித்தல்.
- மாணவர்களை ஊக்குவித்தல்.
- மாணவரிடையே சிறந்த வாழ்க் கைத் தத்துவத்தைக் கட்டி யெழுப்புதல்.
- மாணவரின் தொடர்பாடல் திறனை விருத்தி செய்தல்.
- மொழித்திறன்களை விருத்தி செய்தல்.
- சுற்றாடல் பேணல் சம்பந்தமான அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தி ஏற்படுத்தல்.

- மாணவர் புதிய அறிவைத் தேடுவதற்கான சுய ஊக்கத்தை ஏற்படுத்தல்.
- நூல்களை வாசிப்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
- இணைபாடவிதான செயற்பாடுகள்.
- போட்டிகளில் கலந்து கொள்ள ஊக்குவித்தல்.
- பாடசாலை வளங்களையும், கிடைக்கும் வளங்களையும் உச்ச அளவில் மாணவ செயற்பாட்டிற்குப் பயன்படுத்தல்.

மாணவ மனங்களை வென்று கொள்ள முடியுமானால் ஆசிரியரால் சாதிக்க முடியாதது என்று எதுவுமில்லை. இதற்குரிய பயிற்சி மற்றும் மனப் பாங்கை ஆசிரியர் தனக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். உடனிருத்தல், உற்றுக் கேட்டல், ஒத்துணர்வு காட்டல் போன்ற நுண் திறன்களை தேவைப்பட்ட சந்தர்ப் பங்களில் கையாளக் கூடிய ஆற்றல் களை ஆசிரியர் தனக்குள் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தனித் துவமானவர்கள். தேவைக்கேற்றபடி அவர்களைக் கையாள வேண்டும்.

ஆசிரியர்கள் எப்போதும் உதவ ஆயத்தமாக இருப்பதுடன் சமூக உணர்வு, ஆன்மீக ஈடுபாடு உடையவராகவும் இருக்கவேண்டும். அவரது நடத்தை, பண்பு மற்றவர்கட்கு சிறந்த முன்மாதிரியாக இருக்க வேண்டும். புரிந்து கொள்ளக் கூடியவராக, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவராக, பின்பற்றக் கூடியவராகக் காட்சியளிக்க வேண்டும்.

மாணவர்கள் கண்களுக்கூடாக உலகைப் பார்க்க நல்லாசிரியரால் தான் முடியும். மாணவனே மையம் - முக்கியம் என்ற எண்ணக் கரு அவர் மனதில் எப்போதும் இருக்கும். அவர் வினைத்திறனுடையவராக மட்டுமன்றி மனிதத் தன்மை உள்ளவராகவும் இருப்பார். தனது உளச் சக்தியைப் பாவித்து அதன் மூலம் மாணவர் சக்தியை பயன்பாட்டில் இயங்கச் செய்வார். இத்தகைய ஆசிரியர் அக அமைதிப் பயிற்சியினையும் மாணவரிடம் பழக்கிவிடுவர். இம் மாணவர்கள் சாந்த வழிமுறையைப் புரிந்து கொண்டு வாழத் தலைப்படுவர்.

அர்த்தமுள்ள கற்றலுக்கு மாணவரை இட்டுச் செல்லல், வினைத் திறன் பயன்பாடுள்ள கற்றல் அனுபவங்களைப் பெற வழிகாட்டல் ஆசிரியரின் கடமையாகும்.

- ஆசிரியர்கள் தமக்குரிய பாட விடயத்தில் ஆழமான அறிவு, அனுபவம், பயிற்சி பெற்று இருத்தல் வேண்டும்.
- புதிய தகவல் தொழினுட்பம் பற்றி அறிந்து தம்மை தற்காலப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- பல்வேறுபட்ட பொருத்தமான கற்பித்தல் முறைகளைக் கையாளத் தெரிந்திருக்க வேண்டும்.
- குறிக்கோளுக்கேற்ற கணிப்பீட்டு முறைகளை நடைமுறைப்படுத்தல்.

✍ தம் செயற்பாடு பற்றி மாணவரை மதிப்பிட்டால் மட்டும் போதாது.

தன்னைத்தான் மதிப்பிட வேண்டும். ஒரு ஆசிரியருக்கு சுய மதிப்பீடு மிக அவசியமாகும்.

ஆசிரியரின் ஆளுமையைப் பொறுத்தே மாணவரின் ஆளுமையும் நடத்தைப் பாங்கும் அமையும். பிள்ளைக்கு ஆரோக்கியமான உள்ளத்தை உருவாக்க வேண்டும். ஆரோக்கியமான உள்ளத்தில், ஆரோக்கியமான சிந்தனைகளும் செயற்பாடுகளும் பிறக்கும். பிள்ளை ஆரோக்கியமாக வாழ்ந்தால் தான், மகிழ்ச்சிமரமான கற்றலை மேற்கொள்ள முடியும். பிள்ளைகளது தேவைகள் பூர்த்தி செய்யப்படும் போது பிள்ளைகள் மகிழ்ச்சியடைகின்றனர். ஆசிரியரில் நம்பிக்கை கொள்கின்றார்கள்.

பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவங்களை அறிந்து, அப் பருவங்களுக்கேற்ப செயற்பாடுகளை இனங்கண்டு கொள்ள வேண்டும். நவீன தொழினுட்பமானது இன்றைய மாணவர்கள் கல்வி பெறும் வாய்ப்புக்களை விரிவுபடுத்தியுள்ளது. மாறும் உலகில் உருவாகும் வகுப்பறைக் கற்றலுக்குப் பொருத்தமான தொழினுட்பத்தைப் பயன்படுத்தும் திறன் ஆசிரியருக்கு இருக்க வேண்டும்.

கல்விச் சாலைக்கு மாணவன் உள்ளீடாக வருகின்றான். ஆசிரியர் என்ற அபிவிருத்தி முகாமையாளரால் அவன் பதப்படுத்தப்பட்டு, உரியகாலம் முடிய, மனித வளம் என்ற வெளியீடாக சமுதாயத்திற்குச் செல்கின்றான்.

தொழிற்சாலையில் முகாமையாளரால் உள்ளீடுகள் பயன்படுத்தப்பட்டு, உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு, பொருள் வெளியீடு செய்யப்படுகின்றது. அந்த வெளியீட்டுப் பொருள் தரம் இல்லாவிட்டால், நிராகரித்து கழித்து விடலாம். அல்லது குறைந்த விலைக்கு விற்கலாம். ஆனால் வெளியீடாகும் மனித வளத்தை தரம் குறைந்த வெளியீடு எனக் கூறி நாம் நிராகரிக்கவோ அன்றி தள்ளிவைக்கவோ முடியாது.தரமான மனித வள உற்பத்தி கல்விச் சாலையில் நடந்தேயாக வேண்டும். இதற்குரிய வகைகூறல் பொறுப்பு ஆசிரிய அபிவிருத்தி முகாமையாளருடையதாகும்.

பிள்ளை மகிழ்வுடன் வாழ - மகிழ்வுடன் கற்க வேண்டும். மாணவ மனங்களை வென்று செல்லக் கூடிய செல்வாக்குடைய ஆசிரியரால் தான் இதனை மகிழ்வுடைய பணியாக, மகிழ்வுடன் நிறைவேற்ற முடியும். இதற்கு ஆசிரியர்கள் உள மகிழ்வுடன் தயாராக இருக்க வேண்டும்.

அடிப்படை மொழித்திறன்கள் பின்னடைவின் பின்புலங்கள்

செல்வி இ. முருகுப்பிள்ளை
ஆசிரியர்,
யா/ சாவ. இந்துக்கல்லூரி

மனித வரலாற்றின் தொடக்கத் திலேயே மொழியின் தேவையும் பயன் பாடும் உணரப்பட்டுவிட்டன. மொழி என்ற சாதனமின்றி மனிதனின் பரிணாம வளர்ச்சி நிகழ்ந்திருக்க முடியாது. மனி தனின் மேம்பாட்டுக்குரிய முன்னரங்க நிலைகளை நோக்கிய ஒவ்வொரு நகர்வையும் குவிமுனைப்படுத்தி அதன் வழி மனிதனை இயக்குவது மொழி யாகும். ஒரு குழந்தையின் சகல படி மலர்ச்சிகளிலும் அறாத தொடராக செல்வாக்குச் செலுத்திவரும் சாதனம் மொழி.

இன்று தாய்மொழிமூலக் கல்வியே பெரும்பாலும் நடைமுறை யில் இருந்து வருகின்றது. எனினும் மாணவரின் மொழித்திறன் விருத்தி தொடர்பாக பல குறைபாடுகள் முன் வைக்கப்படுகின்றன. அவற்றில் எழுத் துத்திறன் குறைபாடுகள் முதன்மைப் படுத்தப்படுகின்றன. இக்குறைபாடுகள் ஆரம்பக்கல்வியில் மட்டுமன்றி இடை நிலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை தொடர்வதாகவும் குறிப்படப்படு கின்றன. இந்நிலையில் செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்ற மொழித்திறன்களின் விருத்தி வாழ் வாதாரத் தேவையாக மட்டுமன்றி வளமூட்டும் முக்கிய காரணியாகவும் அமைந்துள்ளது என்பதை அறிந்து கொள்வது பயனுடையதாக இருக்கும்.

1. மாணவர்களது அடைவுமட்டம் மேம்படுவதற்கு மொழித் திறன் விருத்தி முக்கிய பங்காற்றுகின்றது.

2. தொடர்பாடல் திறன்தகவின் விருத் திக்கு மொழிப்பிரயோகம் முக்கிய மானது.

3. இன்று குடும்பம், சமூகம், நாடு எனப்பல நிலைகளிலும் பல்வகை மைசார் பிரச்சினைகள் உருப் பெற்றவண்ணமுள்ளன. இப்பிரச் சனைகளை இனங்கண்டு தீர்ப்பதில் மொழி பெரும் பங்காற்றுகின்றது.

4. புதிய எண்ணக்கரு தொடர்பான சரியான விளக்கத்தைப் பெற வேண்டுமெனில் மொழிவிருத்தி அவசியம்.

5. தனிநபர்களிடையே, சமூகக் குழுக் களிடையே, நாடுகளுக்கிடையே புரிந்துணர்வை வளர்க்கவும் உதவு கின்றது.

6. பெருகிவரும் அறிவு வெள்ளத்தின் சிறு பகுதியையாவது அள்ளி நுகர்வது என்பது பாடசாலைக்

கல்வியினால் மட்டும் நிறைவேற்றக் கூடிய ஒன்றன்று. இதற்கு சுய கற்றல் அவசியமாகும். சுய கற்றலுக்கு மொழித்திறன்களில் விருத்தி ஏற்பட வேண்டும்.

7. தேவையான தகவல்களை தேவையான சந்தர்ப்பங்களில் தேர்ந்தெடுப்பதற்குத் தேவையான நுண்மதி வளர்ச்சிக்கு மொழித்திறன் ஆற்றும் பங்கு அளப்பரியது.

8. விடயங்களை விளக்கவும் தேவைக்கேற்ப சுருக்கவும் தீர்மானம் எடுப்பதை விரைவுபடுத்தவும் மொழி ஆற்றல் உதவும்.

9. எழுத்தாக்கத் திறன்களின் விருத்திக்கு மொழிவிருத்தி அவசியமானது.

10. மொழியின்றி சிந்திக்க முடியாது. மொழி ஆற்றல் ஆழ்ந்தகன்ற சிந்தனைதிறன் விருத்திக்கு ஒளி பாய்ச்சும்.

இத்தகைய பன்முகப் பயன்பாடு கொண்ட மொழித்திறன்களை விருத்தி செய்வதற்கு தடைக் காரணிகள் பல இருப்பதை இனங்காண்பது மொழித் திறன்களை முன்னெடுக்க அனுசரணையாக அமையலாம்.

பரீட்சை மையக்கல்வி:-

இன்றைய கல்வியின் மையம் பரீட்சையாகும். ஆரம்பக் கல்வியிலிருந்து ஒரு தொழிலில் கால்பதிக்கும் வரை மட்டுமன்றி அதன் பின்பும் பரீட்சைகளே ஒருவனது முன்னேற்றத்தின் ஏணிப்படிகளாக இருந்து வருகின்றன. இதனால் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கமைப்பு பரீட்சையை நோக்கியே திட்டமிடப்படுகின்றது. பரீட்சைக்குரிய குறிப்புக்கள், வினாவிடைகள், வழிகாட்டிகள் போன்றவற்றைத் தெரிந்தெடுத்துக் கற்றால் உயர் மதிப்பெண்களைப் பெறலாம் என்ற நம்பிக்கை வலுப்பெற்றுள்ளது. அத்துடன் மாணவர், ஆசிரியர், பாடசாலை தொடர்பான தரக் கணிப்பீடுகள் பரீட்சைப் பெறுபேறுகளை மையப்படுத்தியே தீர்மானிக்கப் படுகின்றன. இந்நிலையில் மொழித்திறன் விருத்தியில் நேரத்தை செலவிடுவதற்கு மாணவரோ ஆசிரியரோ தயாராக இருப்பதில்லை.

போட்டி முறைமை:-

இன்றைய கல்வியமைப்பு சமூகத்தில் காணப்படும் போட்டி முறைமையைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. போட்டியும் அதனடிப்படையிலான தெரிவும் கல்வியமைப்பில் பெரும் வலிமையைப் பெற்று வருகின்றன. போட்டிக்குத் தயார்ப்படுத்தும் செயற்பாடு கல்வி வளங்களை ஆக்கிரமித்து வருகின்றது. போட்டியின் போதும் போட்டியின் முடிவிலும் ஏற்படும் உளநமைச்சல்கள் ஒருவனது மொழியமைப்பைச் சீர்குலைத்துவிடுகின்றன.

பாடவிடயங்களின் முக்கியத்துவம்:-

பொதுவாக சகல பாடங்களிலும் பாடவிடயங்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் போன்று மொழித் திறன்களில் கவனஞ் செலுத்தப்படுவதில்லை. மொழிப்பாடக் கற்றல் - கற்பித்தலிலும் பாடவிடயங்களே செல்வாக்குப் பெறுகின்றன. மொழித் திறன்கள் கருத்திற் கொள்ளப்படுவது குறைவாகவே உள்ளது.

சகலபாட ஆசிரியர்களும் கவனஞ் செலுத்தாமை:-

மொழிப்பாட ஆசிரியர் உட்பட சகலபாட ஆசிரியர்களும் மொழித்திறன் விருத்தியில் அக்கறை காட்ட வேண்டும். எழுத்துக்கள், வசனங்கள், நிறுத்தக் குறியீடுகள் போன்றவற்றில் வழுக்கள் ஏற்படின் கருத்து வழுக்களும் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. இவை எல்லாப் பாட அடைவுகளையும் பாதிக்கும்.

வாசிக்கும் பழக்கம் அருகி வருதல்:-

மாணவர்களின் நேரத்தை விழுங்கும் ஏராளமான திசைதிருப்பிகள் காரணமாக வாசிக்கும் பழக்கம் அருகி வருவது மொழித்திறன் விருத்தியில் பெருந் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. பாடநூல்களையே வாசிக்கும் மனப்பாங்கின்மை கவலைக்குரிய ஒன்றாகும்.

ஆரம்பக் கல்வியில் உள்ள குறைபாடுகள்:-

போட்டியும் பரீட்சையும் ஆரம்பக் கல்வியிலிருந்தே வலிமை பெறத் தொடங்குகின்றன. 5-ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயார்ப் படுத்தும் செயல்முறை ஆரம்பக் கல்வி யின் இலக்குகள் யாவற்றையும் திசை திருப்பி விடுகின்றது. மாணவனின் தரத் திலிருந்து தனியாள் வேறுபாடுகளுக் கேற்ப கற்பிக்கும் முறை முற்றாக நிராகரிக்கப்படுவதற்கான பின்னணியை ஏற்படுத்துகின்றது. மொழி முன் திறன் களில் கவனஞ் செலுத்தாமை பயிற்சி பெற்ற ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுத்தப்படாமை எவரும் கற்பிக்கலாம் என்ற அலட்சியம், பொருத்தமான கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தாமை போன்றன மொழித்திறன் விருத்தியைப் பாதிக்கின்றன.

எழுத்துப் பயிற்சிகளின் போதாமை:-

எழுத்துப் பயிற்சிகளில் மாணவரின் ஆர்வம் குன்றி வருகின்றது. மிகச் சுருக்கமாக அரைகுறை வசனங்களில் விடைகளை எழுதுதல் மாணவரின் விருப்புச் செயலாக உள்ளது. குறிப்புக்கள், வினாவிடைகள் அச்சிட்டு விநியோகிக்கும் முறைமையின் அதிகரிப்பு, பிரதிபண்ணும் இயந்திரப் பாவனையின் செல்வாக்கு போன்றவற்றின் காரணமாக எழுத்துப் பயிற்சிக்கான வாய்ப்புக்கள் குறைந்து வருகின்றன. மாணவரும் இலகு முறைகளையே

நாடுவதால் மீண்டும் மீண்டும் எழுத்துப் பயிற்சிகளில் ஈடுபடுவதை விரும்பு வதில்லை.

இலக்கணக் கல்வியில் நிலவும் குறைபாடுகள்:-

பாடசாலைகளில் இலக்கணக் கல்வி பெரும்பாலும் நன்னூலை அடிப்படையாகக் கொண்டே கற்பிக்கப் படுகின்றது. இந்நூல் சுமார் 700 அல்லது 800 ஆண்டுகளுக்கு முற் பட்டது. இந்நூல் எழுந்ததன் பின் மொழியில் பல மாற்றங்கள் ஏற்பட் டுள்ளன. ஆயினும் இலக்கணம்கற்போர் நன்னூல் சூத்திரங்களையும் உதா ரணங்களையுமே இன்றும் கற்பிக் கின்றனர். நடைமுறையில் மாணவர் பயன்படுத்தும் சொற்களுக்கும் இலக் கணக் கல்வியின் போது வழங்கப்படும் உதாரணங்களுக்கும் தொடர்புகள் குறைவாக உள்ளன. நன்னூலை மட்டும் அடிப்படையாகக் கொண்ட இலக்கணக் கல்வி மொழித்திறன்களின் விருத்திக்கும் பிரயோகத்திற்கும் பங் காற்றுகின்றதா என்பது கேள்விக் குறியாக உள்ளது. மொழி மாற்றங் களுக்குள்ளாவதால் இலக்கணக் கல் வியிலும் பொருத்தமறிந்து மாற்றங் களைப் புகுத்துவது அவசியமாகும்.

இணைக்கலைத்திட்ட செயற் பாடுகளின் அதிக செல்வாக்கு:-

கலைத்திட்ட செயற்பாடுகளின் நேரத்தை இணைக்கலைத்திட்ட செயற் பாடுகள் ஆக்கிரமிக்கும் நிலையையும் அவதானிக்க முடிகின்றது. இணைக் கலைத்திட்டத்தில் போட்டிகளின் மேலாதிக்கம் அதிகமாக உள்ளது. போட்டிகளின் பங்காளர்களும் வெற்றி யாளர்களும் பெரும்பாலும் மீத்திறன் மாணவர்களாகவே இருப்பர். ஏனை யோர் போட்டிகளில் பின்தள்ளப்படு வதோடு கல்விச் செயன்முறையிலும் ஆர்வம் குன்றுகின்றனர். அவர்களை வழிப்படுத்துவதற்குரிய நேரவளம் போதுமானதாயில்லை. மேலும் போட்டிகளின் வெற்றி நிலைகளும் பாடசாலைகளின் தரத்தை நிர்ணயிப் பதால் கல்விசார் ஆளனியினரின் கவனம் போட்டிகளின் பால் ஈர்க்கப் படுவதும் தவிர்க்க முடியாதது.

உள நெருக்கீடுகள்:-

இயற்கை அனர்த்தம், போர், இழப்புக்கள், வறுமை, பயம், அச்சுறுத் தல் போன்ற காரணிகளால் உளரீதி யாக மாணவர்கள் பாதிக்கப்படு கின்றனர். அப்பாதிப்புகள் உடனடியாக வெளித்தோன்றாத பாதிப்புக்களாகவும் இருக்கலாம். அவை மாணவரின் ஏதோ ஒருவகையில் உளக்குலைவை ஏற் படுத்தும். இது சிந்தனைக் குலைவை ஏற்படுத்தி மொழி அமைப்பில் சீரற்ற தன்மையைத் தோற்றுவிக்கின்றது. மேலும் குடும்பம், பாடசாலை, சமூகம், நாடு என்ற மட்டங்களில் ஏற்படும் பிரச்சினைகளும் ஒவ்வொரு தனி நபரையும் பாதிக்கவே செய்கின்றன. உள்ளத்தில் தெளிவிருந்தாலே வாக் கினில் தெளிவுண்டாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஊட்டச்சத்துக் குறைபாடு:-

வறிய மாணவரின் போசாக்கு மட்டுமன்றி பொருளாதார வளம் மிக்க மாணவரது போசாக்கும் பாதிப்புறும் நிலை உள்ளது. ஊட்டச் சத்துள்ள உணவு வகைகளை உரிய வேளையில் உண்ண நேரமின்றி அலையும் மாணவர் குழாமையே நாம் காணுகின்றோம். போசாக்கின்மை மாணவரது உடல், உள ஆரோக்கியத்தை மட்டுமன்றி மொழிக் கோலத்தையும் சீரற்ற தாக்குகின்றது என்ற உண்மை உரியவர்களால் உணரப்படுவது நிலைமையைச் சீர் செய்ய உதவும்.

அதிகரிக்கும் மாணவர் தொகை:-

முப்பதுக்கு மேற்பட்ட மாணவரைக் கொண்ட வகுப்பறையில் தனியாள் வேறுபாடுகளை இனங்காண்பதும் பொறுத்தமுற கற்பித்தலை மேற்கொள்வதும் நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்றாகவே உள்ளது. மொழித்திறன் விருத்தி, நடத்தைச் சீராக்கம், அடைவு மேம்பாடு, பாடத்திட்டங்களைப் பூர்த்தி செய்தல், கணிப்பீட்டு செயல்முறையாவும் சமச்சீராக இடம்பெற வேண்டியுள்ளன. இதற்கு மாணவர் தொகை சாதகமாக அமைவதில்லை.

மேற்கூறப்பட்ட மொழித்திறன்களின் பின்னடைவுக்கான பின்புலன்கள் கல்வியுடன் மட்டும் தொடர்புடையவையல்ல. இன்றைய அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுக் கோலங்களுடன் இணைந்தவை. இதனால் கற்பித்தலில் ஈடுபடுவோரும் பல அழுத்தங்களுக்கு ஈடு கொடுத்தே தமது சேவையைத் தொடர வேண்டியுள்ளது. இவற்றின் தளத்தில் நின்று கொண்டு இவற்றினூடாகவே மொழித் திறன்களை வீருத்தி செய்ய வேண்டிய போராளி வகிபாகம் ஆசிரியர் மீது சுமத்தப்பட்டுள்ளது. மாணவர்களும் பல புதிய விடயங்களின் பங்காளிகளாக மாற வேண்டியுள்ளது. இதனால் மாணவர்களிடம் சவால்களை எதிர் கொள்ளும் ஆற்றல், மன உறுதி, பொறுமை, சகிப்புத் தன்மை, சமூகத் திறன்கள் போன்றவற்றை வளம்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. எவ்வாறாயினும் பன்மொழி ஆற்றல் வேண்டப்படும் தற்காலத்தில் சுய மொழித் திறன் மேம்பாட்டை வாழ்நாட் கல்விச் செயன்முறையாக மாற்றுவதற்கான அர்ப்பணிப்பும் ஆர்வமும் சுய முயற்சியும் கற்றல் - கற்பித்தலில் ஈடுபடும் இருசாராருக்கும் இன்றியமையாதது என்பது குறிப்பிடத்தக்கது.

மழலைச் செல்வமும் முன்பள்ளியும்

செல்வி ஜெயா தம்பையா,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு,
வடக்கு கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

முன்பள்ளிக் கல்வியின் அவசியம் இன்று உலகநாடுகள் எல்லாவற்றாலும் உணரப்பட்டுள்ளது. முன்பள்ளிக் காலம் 2½ அல்லது 3 வயது தொடங்கி 5 வயதுக்குட்பட்ட காலமாகும். இக்காலம் வளர்ச்சியடைந்த வளர்முக நாடுகளில் சிறிது வேறுபட்டுக் காணப்படுகிறது. பல குழந்தை உளவியல் சிந்தனையாளர்கள் முன்பள்ளிக் கல்வியின் அவசியம் பற்றியும் அக்கல்வி முறை எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு பிள்ளையின் விருத்தியில் அடித்தளமாக இருப்பது பிறப்பிலிருந்து 5 வயதுக்குட்பட்ட காலப்பகுதியாகும். இக்காலப் பகுதியிலேயே உடல்உள ரீதியாக பிள்ளை கூடுதலாக வளர்ச்சியைப் பெறுகின்றது. 75% மான மூளை வளர்ச்சியும் இக் காலப் பகுதிலேயே ஏற்பட்டு விடுகின்றது. குழந்தை தாயின் கருவில் இருக்கும் போதே கற்கத் தொடங்குகின்றது. பிள்ளைப் பராமரிப்பும் கவனிப்பும் தாய் கற்பமாக இருக்கும் காலப்பகுதியிலிருந்தே ஆரம்பமாக வேண்டும். தாய் நல்ல போசாக்கான உணவருத்தி, சுகமாகவும், ஆரோக்கியமாகவும் நல்ல சூழலிலும் இருப்பது மிக அவசியமாகும். தாய் கருவை சுமக்கும் போது ஏற்படும். தாக்கங்கள் பிள்ளையையும் பாதிக்கும். இக்காலப்பகுதியில் நல்லவற்றைப் பார்க்கவும், கேட்கவும், சிந்திக்கவும் வேண்டும். நல்ல அறிவுள்ள நூல்களை வாசிப்பதும் அவசியமாகும்.

குழந்தை கருவில் இருக்கும் காலத்துக்கு அடுத்து குழந்தை பிறந்த திலிருந்து மூன்று வயது காலம் இக்காலப் பருவத்திலும் குழந்தையிடம் கூடுதலான உடல்உள வளர்ச்சி ஏற்படுகின்றது. பல பெற்றோர் சிறுவயதில் பிள்ளைகளை ஓடியாடி அவர்களின் விருப்பத்துக்கு விளையாட விடுவதில்லை. சிறியவள் என்பதால் விழுந்து விடுவாளோ, காயம் வந்து விடுமோ என்று குழந்தையின் அதீத பாசத்தால் அவ்வாறு விடுவதில்லை எந்த நேரமும் பிள்ளைகளை தூக்கி வைத்து தமது கட்டுப்பாட்டிலும் வைத்துக் கொள்வார்கள். எதையும் தொடவோ எடுத்து விளையாடவோ அனுமதிப்பதில்லை இது பிள்ளையின் வளர்ச்சியையும், விருத்தியையும் பாதிக்கும். செயலாகும். இக்காலப் பகுதியில் பிள்ளையை ஓடியாடி விளையாட சுகந்திரமாக செயற்பட விட வேண்டும். பெற்றோர் குழந்தைக்கு ஏற்ற பாதுகாப்பைக் கொடுத்து செயற்பட விடுவது அவசியமாகும்.

யுனிசெவ் போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களால் பிள்ளைகளின் வீட்டுச் செயற்பாடு

களுக்கு பெற்றோர்களுக்கு ஆர்வ மூட்டும் வகையில் சிறு கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. வீட்டில் இக் குழந்தைகளின் விருப்பங்கள் தேவை களுக்கு இடமளித்து அவர்களையும் எமது செயற்பாடுகளுக்குள் ஈடுபடுத்தி செயற்பட வைப்பதன் மூலம் அவர் களுக்கு மகிழ்ச்சியையும், சந்தோஷத் தையும் வழங்குவதோடு என் னால் இதைச் செய்ய முடியும் என்ற நம்பிக் கையும் பிள்ளைக்கு ஏற்படுகின்றது. மூன்று வயதுக்குட்பட்ட காலப் பகுதி யின் முக்கியத்துவத்தை உணர்ந்து வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளின் பெற்றார் குழந் தைகளை இணைத்து செயற் படுவது அவசியமாகும்.

வீட்டை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் (Home based Education) இச் செயற்பாட்டின் மூலம் பிள்ளையின் உடல் தசைசார் விருத்தி, இயக்க விருத்தி, மொழி, கணித எண்ணக்கரு, சூழல், ஆக்கத்திறன் விருத்தி என்பன ஏற்படுகிறது. தாயார் சமைக்கும் போதும், வீட்டை சுத்தம் செய்யும் போதும், விருந்தினரை உப சரிக்கும் போதும், உடைகள் சுத்தம் செய்யும் போதும், குளிக்கும் போதும், தந் தையின் வேலைகளிலும் இணைந்து பிள்ளையும் பல விடயங் களைக் கற்றுக் கொள்கின்றது. என்பதை எம்மில் பலர் உணர்வ தில்லை மூன்று வயது வரை வீட்டி லிருக்கும் இக்குழந்தைக்கு நல்ல அனு பவங்களைப் பெற வழி செய்வது அவசியமாகும்.

அடுத்து முக்கியம் பெறுவது முன்பள்ளிப் பருவமாகும். 3-5 வயதுக் காலப்பகுதியில் பிள்ளையின் உடல், உள ஆக்க, அறிவு விருத்திக்கு முன்பள்ளிகள் மிக அவசியமாகும். ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்று ஔவையாரும் ''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா'' என்றும் எம்முன்னோர் கூறி இருப்பது நாம் அறிந்ததே. பெஸ்ட லோசி, புரோபல், மொன்ட சோறி அம் மை யார் றூ னே போன் ற குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்கள் சுகந்திரமான, சுயசிந்தனை செயலாற் றல்களை வளர்க்கக் கூடிய கல்வியே முன்பள்ளிக் கல்வியாகக் கண்டனர். சுகந்திரமே குழந்தைக் கல்வியின் அடிப்படை எனவும் இவர்கள் வலி யுறுத்தியுள்ளனர்.

Travers (றவேர்ஸ்) முன்பள்ளி என்பது ஒரு குழந்தை ஆரம்பக் கல்வியை ஆரம்பிக்கும் முன்னர் வேண்டிய கல்வியைப் பெறுவதற்கான சிறந்த இடமாகும் என்றார். ஆரம்ப பருவத்தில் ஒரு குழந்தைக்கு ஏற்படும் அனுபவம் தான் அப்பிள்ளைக்கு கல்லூரி ஏன் வாழ்க்கை பூராகவும் உதவப் போகின்றது. இந்நிலையில் ஒரு குழந்தைக்கு ஆர்வத்தை ஊட்ட லாம் அல்லது வெறுப்பை ஏற்படுத் தலாம் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

சுகந்திர உணர்ச்சி மழலை யரின் உளத்தேவையாகும். குழந் தைகள் சுதந்திரமாக ஓடி விளையாட விரும்புவர். அந்த சுகந்திரம் அவர்

களுக்கு மகிழ்ச்சியையும் மன நிறை வையும் தருகின்றது. பிள்ளையின் முழு வளர்ச்சிக்கு இது ஓர் அடிப் படைத் தேவையாகும். உடல் வளர்ச்சிக்கு உடலின் உறுப்புக்கள் கட்டுப்பாடின்றி சுதந்திரமாக செயற் படுத்தல் அவசியமாகும். அறிவு வளர்ச்சிக்கு தம் விருப்பப்படி சிந் திக்கவும் தீர்மானிக்கவும், சோதனை செய்யவும் சூழலிலுள்ள பொருட்களை துருவி ஆராயவும் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

குழந்தைப் பருவத்தின் முக்கிய பண்புகளாக தீவிர உடல் வளர்ச்சி, உளதிறன் வளர்ச்சி, செயல்திறனைப் பெறல், மனவெழுச்சி தொடர்புடைய சில துலங்கல்களையும் சிறு சமூக நடத்தையையும் பெறல், மொழித்திறன் வளர்ச்சி என்பன ஆரம்பப்பருவத்தில் காணப்படுகின்றன.

குழந்தைக்கு அதனுடைய வளர்ச்சிக்கும் இயற்கைத் தன்மைக்கும் ஏற்ற பரிமானமுள்ள சூழ்நிலையில் சகல பொருட்களையும் அமைத்துக் கொடுக்க வேண்டும். அவனை அங்கே சுகந்திரமாக செயற்பட விட வேண்டும். ஆசிரியருடைய பணி கற்பிப்பதில்லை இயக்குனராக இருந்து குழந்தைக்கு வழிகாட்டலும், ஊக்குவித்தலுமாகும். குழந்தைக்கு தண்டனையோ அடக்கு முறையோ இருக்கக் கூடாது இப்பரு வத்தில் உடல்உள வளர்ச்சிக்கு முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும்.

குழந்தைக் கல்வியில் தாமே கற்றல், செய்து அறிந்து கொள்ளுதல் தெரிந்தவற்றை தெளிவுபடுத்தல் ஆகிய மூன்றும் குழந்தைக் கல்வியின் அடித்தளமாகும். குழந்தைகள் தாமா கவே இயற்கையோடு ஒட்டிய தமது இயல்புக்கு ஏற்றதாக கல்வி அறி வினைப் பெற வேண்டும். அதற்கு வழி காட்ட வேண்டும். பெஸ்ரலோறி குழந் தையை ஒரு விதையாக கருதினார் விதைக்குள் எதிர்காலத்தில் பெரிய மரமாகும். ஆற்றல் சிறுவடிவில் உள்ளுணர்ந்து இருப்பது போன்று பிற்காலத்தில் வெளிவர வேண்டிய பேராற்றல்கள் மழலையரிடம் உள்ளு றைந்து கிடக்கின்றன என்றார். ஆற்றல் களை வெளிப்படுத்தி குழந்தைகளை சிறந்த ஆளுமையுடையவராக செய் வதே கல்வியின் நோக்கமாகும்.

குழந்தையின் முக்கிய தொழில் விளையாட்டாகும் விளை யாட்டிலேயே கல்வி இலக்குகள் பல அடங்கியுள்ளன. முன்பள்ளிக் குழந் தைக்கு விளையாட்டு மூலமே கல்வி யளிக்கப்பட்ட வேண்டும். குழந்தைகள் மகிழ்ச்சியாக ஈடுபடும் தொழிலும் விளையாட்டாகும். விளையாட்டு மூல மே உடலும் உள்ளமும் ஒருங்கி ணைந்து வளர்ச்சி பெறுகின்றது. படைப்புச் செயலின் சிறந்த வெளிப் பாடே விளையாட்டு, கதை கேட்டல், சொல்லுதல், கதையை நடித்துச் சொல்லுதல், கைவேலை, சித்திரம் என்பனவாகும்.

குழந்தைகள் மழலைப் பருவத்திலேயே கற்கத் தொடங்கு கின்றனர் என ஏலவே பார்த்தோம். தங்கள் எண்ணங்கள், உணர்ச்சிகள் தேவைகளைப் பேச்சு, அபிநயம் மூலம் வெளிப்படுத்துவதோடு ஆடல், பாடல் விளையாட்டுக்களினால் தமது

ஆசைகளையும் கற்பனையையும் வெளிக்காட்டுகின்றார்கள். புதியவற்றை ஆராயவும் அறியவும் விரும்புவார்கள். இந்த ஆற்றல்களை நெறிப்படுத்தி வழிப்படுத்துவதே முன்பள்ளிக் கல்வியாகும்.

மழலைகளின் அன்புத் தேவை காப்புத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலேயே கல்வி அமைதல் வேண்டும். குழந்தைகளை குதூகல மாக மகிழ்ச்சியுடன் நல்ல சூழ்நிலை யில் சுதந்திரமான அடிப்படையில் பயிற்சி முறையில் கல்வி கற்பிக்க வேண்டும் என மொன்றிசோறி அம்மை யார் வலியுறுத்தியுள்ளார்.

முன்பள்ளிகள் அவர்களுக்கு இயற்கையானதும் சுதந்திரமானது, அன்பானதும், பாதுகாப்பானதும், மகிழ்ச்சிகரமானதுமான சூழலை வழங் குகின்றன. இங்கேயே பிள்ளைகளின் உடல் உள வளர்ச்சிக்கு சிறந்த அத்தி வாரமிடப்படுகின்றது. ஆடல், பாடல், உரையாடல், கதை சொல்லுதல் புதிய சொற்களை அறிதல், வாக்கியங்களை தெரிந்து கொள்ளுதல் எழுத்துக்களை அடையாளம் காணல், அவற்றை எழுது தல் மற்றவர்களோடு அடக்கமின்றி, அச்சமின்றி பழகுதல் என்பவற்றுக்கு ஏற்ற சூழலை உருவாக்கலும் வழி காட்டலுமே குழந்தைக் கல்வியின் நோக்கமாகும்.

எனவே குழந்தைக்கு முன் பள்ளிக்கல்வி மிக அவசியமானது. முன்பள்ளிகளிலேயே பிள்ளைகளின் பண்பாட்டுவிருத்தி, ஆளுமைவிருத்தி, உடல் விருத்தி, ஒழுக்கவிருத்தி, மூளைவிருத்தி என்பன ஏற்படுகின்றன. முன்பள்ளிகளுக்குப் போகாத குழந்தை கள் இவற்றை இழந்துவிடுகின்றனர் இக்காலப்பகுதியிலேயே பிள்ளை களின் மூளை அதிகமாக வளர்ச்சி யடைகின்றது. வீடு, பாடசாலைச் சூழல் பாதிப்பு அடையுமேயானால் அது மூளை வளர்ச்சியிலும் பாதிப்பை ஏற் படுத்தும் வீட்டை விட நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்தக் கூடிய நிலையமும் முன்பள்ளி யேயாகும். இப் பிள்ளைகளை ஆய்வு செய்த உலக அறிஞர்கள் இப் பருவத்தை (Magic State) **வியத்தகு பருவம்** எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இப்பருவத்தில் பிள்ளைகள் திறன்களை அறிவதற்கு ஆர்வப்படுவர் தொடர்ச்சியாக மொழியைக் கற்கத் தொடங்குவர் விரல்கள் கைகளின் பாவனைகளைத் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவருவர். லாபக மாவும், சுறுசுறுப்பாகவும் ஒருவர், விளையாட்டு உபகரணங்களோடு விளையாடுவார்கள். செய்யும் வேலை யில் முழுக் கவனத்தையும் செலுத்து வர். இந்தகைய வியத்தகு பருவத் தினரிரை உரிய முறையில் வளப் படுத்தி வளர்க்கும்திறன் கொண்ட நிலையங்கள் முன்பள்ளியே ஆகும்.

''முன்பள்ளிகள் ஆரம்பப் பள்ளி செல்வதற்குரிய அதிதிறன்களை அமைக்கும் தளம்''

முன்பள்ளிக் கல்வி

ச.க. கண்ணதாஸ், M,A
ஆங்கில மொழித்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,

கல்விச் சிந்தனைகள் கல்விச் செயல்முறைகள் மற்றும் கல்விக் கருத்தியல் போன்ற விடயங்களில் இன்றைய நவீன உலகின் விசைகொண்ட விஞ்ஞான வளர்ச்சி மாற்றங்கள் ஆக்கபூர்வமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. இந்நிலையில் குழந்தைக் கல்வி அல்லது முன்பள்ளிக் கல்வி என்கின்ற காத்திரமான சிந்தனை பள்ளிக் கல்விச் சிந்தனைகளுக்கு ஈடான ஒரு இடத்தினைப் பெற்று வருகின்றது. குழந்தைகளுடைய அறிவு, திறன், மனப்பாங்கு, மன வெழுச்சி, நடத்தைக் கோலங்கள் என்பன இன்றைய உலகில் பல மாற்றங்களுக்குள்ளாகி வருகின்ற நிலையில் முன்பள்ளிக் கல்வி என்பது நன்கு திட்டமிடப்படவேண்டிய தொன்றாகின்றது.

மேற்கு நாடுகளிலே குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களாக தோற்றம் பெற்ற முன்பள்ளிக் கல்விக் கூடங்கள் பின்னர் காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு பள்ளிகளாக மாற்றமடைந்தன. தொழிலுக்குச் செல்லும் பெற்றோர் இவ்வாறான பராமரிப்பு நிலையங்களிலேயே தமது பிள்ளைகளை ஒப்படைத்துச் சென்றனர். இவ்வாறான குழந்தைகளுடைய நடத்தைக் கோலங்களை ஆய்வு செய்த குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்களின் சிந்தனைகளின் வெளிப்பாடே முன்பள்ளிக் கல்வி எனும் கருத்தியல் அதன் காத்திரமான தன்மையைப் பெற்றுக் கொள்ள உதவியது.

கீழைத்தேய நாடுகளிலும் கூட்டுக் குடும்ப அமைப்பு முறை சிதைவடையத் தொடங்கிய போது குழந்தைப் பராமரிப்பு பிரச்சனையாகியது. நகரங்களிலே தொழிலுக்குச் செல்லும் பெற்றோருக்கு இது முக்கிய பிரச்சனையானது. இதனால் கீழைத்தேய நாடுகளிலும் முன்பள்ளிகள் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஒரு இடம் கிடைத்தால் போதும் என்று நினைத்தனர். நாம் தொழிலுக்குச் செல்வதற்கும், தமது வீட்டுப்பணிகளை முடிப்பதற்கும் குழந்தைகளை முன்பள்ளிகளுக்கு அனுப்பி வைத்தனர். அவர்கள் முன்பள்ளிகளினுடைய நிலைமைகள், தரம் போன்றவற்றை கவனத்தில் எடுக்கவில்லை. ஆனால் இன்று நிலைமை அப்படி இல்லை. ஒவ்வொரு பெற்றோர் மனத்திலும் தனது குழந்தை தாமான முன்பள்ளியிலே கல்வியை ஆரம்பிக்க வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கி நிற்கின்றது.

இலங்கையில் அதிகரித்து வரும் முன்பள்ளிக் கல்விக்கான கேள்வி கல்வி உலகில் ஒரு பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தி வருகிறது. ஆங்காங்கே பல முறைசார்ந்த, முறை சாரா முன்பள்ளிகள் தோற்றம் பெற்று வருகின்றன. தற்பொழுது நாடு முழுவதும் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்டு வருகின்ற புதிய கல்விச் சீர்திருத்தத்தில் முன்பள்ளிக்கல்வியை மேம்படுத்த வேண்டிய அவசியம்

வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக கல்வி வலயங்களிலே முன்பள்ளிக் கல்விக்குப் பொறுப்பாக உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு கல்வி வலயத்திலும் முன்பள்ளிக் கல்விக்கான உதவிக் கல்விப் பணிப்பாளரின் கீழ் ஒரு ஆளணி அதன் மேம்பாட்டிற்குப் பொறுப்பாக இருக்கின்றது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக சிறு தொகைப் பணம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக சிறுதொகைப் பணம் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. இந் நிலையில் முன்பள்ளிக் கல்விக்கான சிரத்தையை தெட்டத்தெளிவாக்கியுள்ளது. அத்துடன் அது பற்றிய அங்கீகாரம் அரச மற்றும் சமூகங்களின் மத்தியிலே கிடைக்கப்பெற்று முன்பள்ளிக் கல்வி பற்றிய விழிப்புணர்வு உயிர்த்துடிப்புடன் முனைப்புப் பெற்றுள்ளது.

முன்பள்ளிக் கல்வியினுடைய தேவை யதார்த்தமாக உணரப்பட்ட போதும் அதன் கலைத்திட்ட வடிவமைப்பு, ஆசிரியர் பயிற்சி, முகாமைத்துவம் போன்ற விடயங்களிலே காட்டப்படுகின்ற அக்கறை போதுமானதாக இல்லை. முன்பள்ளிக் கல்வி பற்றிய ஒரு பொதுக் கொள்கையை அரசாங்கம் தனது கொள்கை விளக்கத்தில் கூறி வருகின்ற போதிலும் அதனை முன்னெடுப்பதற்கான உருப்படியான திட்டங்களை இன்னமும் வகுக்கவில்லை என்றே கூறவேண்டும். இன்று பல முன்பள்ளிக் கல்வி நிலையங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றின் பௌதீக வளத் தன்மை, சுகாதார வசதிகள், காற்றோட்ட வசதி. குழந்தைகளின் செயல்முறைகளுக்கான உபகரண வசதிகள், கலைத்திட்ட வடிவமைப்பு, ஆசிரியரின் பயிற்சி தொடர்பான செயற்றிட்டம் சீரிய முறையில் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

எமது யாழ் மாவட்டத்திலே முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணப்படுகின்றன. குழந்தைகளுக்கு கல்வியூட்டுகின்ற ஆசிரியர்கள் முறையான பயிற்சியினைப் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் இங்கு முறையான பயிற்சியினைப் பெறுவதற்கு ஒரு வளமான நிலையமும் இல்லை. யாழ் பல்கலைக்கழகத்திலே முன்பள்ளி ஆசிரியர்களுக்கான Diploma தர பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்பட இருப்பதாக கல்வியியல் பேராசிரியர் சபா. ஜெயராசா கூறியிருப்பது ஒரு இனிப்பான செய்தியாகும். குழந்தைக் கல்வி தொடர்பான நூல்களை எழுதியுள்ள அவரது வழிகாட்டலின் கீழ் முன்பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி பெறுவது வரப்பிரசாதமாக அமையும்.

ஜோன் கென்றி பெஸ்ற்ரலோசி. ஜோன் பிறற்றிக் கேபாற், பிறற்றிக் புரோபல், மொன்ரிசோரி அம்மையார், ஸ்ரான்லி ஹோல், அல்பிரெட் பீனே, ஜீன் பியாசே, புறூனர் போன்ற குழந்தைக் கல்விக் கல்விச் சிந்தனையாளர்கள் குழந்தைகளுடைய கல்வி எவ்வாறு இருக்க வேண்டுமென்று தமது ஆய்வாளர்களின் மூலம் கூறியுள்ளனர். இவர்களுடைய சிந்தனைகளைத் தொகுத்து நோக்கினால் பின்வரும் விடயங்களை நாம் கவனிக்க முடியும்.

1. முன்பள்ளிள் கல்வியில் பேச்சுக்கு முக்கியத்துவம் அளித்தல். அதன் பின்னரே எழுத்துக் கற்பித்தல் ஏற்புடையது. எழுத்துக் கற்பித்தலின் போது பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

அ. எழுத்துக்களின் வரிவடிவமைப்பை அறிதல்.

ஆ. எழுத்துக்கள் குறிக்கும் ஒலியை அறிந்து கொள்ளல்.

இ. எழுதுகோலைக் கையாளும் திறனறிதல்.

2. கற்பிக்கப்படும் பாடம் பொருள் குழந்தைகளின் உடல் உள மன வெழுச்சிக்குப் பொருத்தமாக அமைய வேண்டும்.

3. கற்பித்தல் எளிதில் இருந்து படிப்படியாக சிக்கலை நோக்கிச் செல்லக் கூடியவாறு அமைய வேண்டும்.

4. கற்பித்தல் ஆர்வத்தைத் தூண்டக் கூடிய முறையிலும் வினைத்திறன், முயற்சி என்பவற்றை அதிகரிக்கத்தக்க முறையிலும் கவர்ச்சியும் நாட்டமும் கொண்டதாக இருக்க வேண்டும். இதனால் ஆடல், பாடல், விளையாட்டு, புலக்காட்சி உபகரணங்கள் மூலமான கற்பித்தலே சிறந்தது.

5. கற்றலின் பல்வேறு கூறு களிடையே தொடர்பும் ஒத்திசைவும் இருக்க வேண்டும்.

6. செயல்முறை அனுபவங்களினூடாகவே எண்ணும் கணிதமும் கற்பிக்கப்பட வேண்டும்.

7. வடிவங்களை உற்று நோக்கச் செய்து கணித அறிவை மேம்படுத்த வேண்டும்.

8. புலக்காட்சிப் பயிற்சிகள் அவசியமானவை.

9. கட்டுப்பாடு, பயிற்சி என்பன கற்பித்தலில் சிறப்பிடம் பெறவேண்டும்.

10. புலன்களுக்கான பயிற்சி கற்பித்தலில் அவசியம். விளையாட்டுக்கள், செயற்பாடுகளினூடாக புலன்களுக்கான பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

11. குழந்தைகள் கல்வி கற்கின்ற இடம் ஒரு பூங்காவின் மத்தியிலே இருக்க வேண்டும். இவ்வாறான ஒரு சூழலில்

அ. சூழந்தைகள் தமது செயற்பாடுகளில் விரும்பி ஈடுபடுவர்.

ஆ. சூழலை விளங்கிக் கொள்வர்.

இ. அறிவுக்கும் செயலுக்கும் இடையேயுள்ள இடைவெளி குறைவடையும், ஆற்றல் அதிகரிக்கும்

ஈ. கற்றல் மகிழ்ச்சியானதாகவும் விடுதலை உணர்வு கொண்டதாகவும், ஆக்கபூர்வமான உற்சாகத்தை முன்னெடுப்பதாகவும் இருக்கும்.

12. கற்பித்தலை ஒழுங்கமைக்கும் போது பின்வருவன கவனிக்கப்பட வேண்டும்;

அ. குழந்தைகளது தனித்துவம் தனியாள் இயல்பு மலர்ச்சியடைய இடமளித்தல்.

ஆ. தாமே முயன்று கற்கும் செயற்பாட்டை வளர்த்தல்.

இ. குழந்தைகளின் தன்னுரிமைக்கும், சுயாதீனமான செயற்பாடு களுக்கும் இடமளித்தல்.

ஈ. நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்புடையதாக இருத்தல்.

உ. சுகாதாரப் பழக்கங்களை கடைப்பிடித்தல், பொருட்களை சுத்தமாக வைத்திருத்தல், நகம் வெட்டுதல், பல் துலக்குதல், கைகழுவுதல்.

ஊ. பல்வேறுபட்ட வடிவங்கள், உருவங்கள், வண்ணத்தாள்கள், நாணயங்கள், மணிகள், கம்பளி நூல்கள், பெட்டிகள், போத்தல்கள் மூலம் புலப்பயிற்சியை வழங்கல்.

எ. உடல் ஒத்திசையையும் இயக்கத்தையும் மேம்படுத்துகின்ற உடற் பயிற்சிகளை வழங்கல்.

13. குழந்தைகளுக்கு உளக் குறைபாடுகள் காணப்பட்டால் கல்விசார் சீர்மியம் வழங்கல்.

14. சிறந்த விழுமியங்களையும் பெறுமானங்களையும் உள்ளடக்கங்களாகக் கொண்ட கதைகளைக் கூறுதல், கதைகளில் மிருகங்கள் கதாபாத்திரங்களாக சேர்க்கப்படுதல் நல்லது. பேய்கள், பிசாசுகள் என்பன தவிர்க்கப்பட வேண்டும்.

15. பொருத்தமான மீள வலியுறுத்தல்களை ஏற்படுத்துதல்.

இவ்வாறு கல்விச் சிந்தனையாளர்கள் குழந்தைக் கல்வி தொடர்பான கருத்துக்களை தமது அனுபவங்கள், ஆற்றல்கள் என்பவற்றினூடாக முன்வைத்துள்ளனர். இவை எந்த அளவிற்கு எமது முன்பள்ளிகளிலே கடைபட்பிடிக்கப்படுகின்றது என்பது முக்கியமானது. குழந்தைகளை ஒரு அறையினுள்ளே பல மணி நேரம் முடக்கி வைத்திருப்பது தவிர்க்கப்பட வேண்டும். குழந்தைகளினுடைய கருத்துக்கள், எண்ணங்கள், நல்ல செயல்களுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். அவர்களை நன்கு வழிப்படுத்துவதுடன் நல்ல பண்புகள், செயல்கள், ஆக்கங்கள், எண்ணங்கள் பாராட்டப்பட்டு இவர்களை நம்பிக்கையுடையவர்களாக வளர்க்க வேண்டும்.

புதிய கல்விச் சீர்திருத்த சிந்தனைகளில் ஆரம்பக்கல்வியின் முதல் கட்டத்திலே பிள்ளைகளுடைய பேச்சு செயற்பாடுகள், விளையாட்டுக்கள் என்பவற்றிற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். என்றும் பிள்ளைகளுடைய செயற்பாடுகளுக்கான செயற்பாட்டு அறையின் தேவையையும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே முன்பள்ளிக் கல்வியிலும் இந்த யோசனைகள் கட்டாயமாக பின்பற்றப்பட வேண்டும். குழந்தைகளது ஆளுமை வளர்க்கும் வதமாக அவர்களது பேச்சுத்திறன், தொடர் பாடல் திறன், குழுச் செயற்பாட்டுத்திறன், இணக்கத்திறன், தொடர்பாடல் திறன், கிரகித்தல் திறன் என்பன மேம்படுத்தப்படவேண்டும். இருமொழி ஆற்றல் இன்றைய நவீன தொழில்நுட்ப உலகிற்கு அவசியமானது. எனவே தமிழ் மொழியுடன் ஆங்கில மொழியினையும் முன்பள்ளி நிலையிலேயே கற்பித்தல் சிறந்தது. ஆங்கிலம் கற்பிக்கும் போது குழந்தைகளுக்கு அது ஒரு சுமை என்கின்ற உணர்வை ஏற்படுத்தாமல் வாய்மொழியூடானதாக அமைவதே சிறந்தது.

வசதிகள், வாய்ப்புக்கள உள்ள குழந்தைகள் நன்கு துலங்குபவர்களாகவும் நுண்மதி அபிவிருமத்தி பெறுபவர்களாகவும் காணப்படுகின்றனர் என்பது ஆய்வு முடிவுகள்.

வசதி குறைந்த குழந்தைகள் ஊட்டச் சத்துக் குறைபாடு உடையவர்களாக இருப்பதால் அவர்களது அடைவு மட்டம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இவ்வாறான குறைபாடுகள் முன்பள்ளி நிலையிலேயே நிவர்த்தி செய்யப் படுதல் அவசியமானதாகும்.

யாழ் மாவட்டத்திலே மிக முக்கியமான பிரச்சனைகளாகவுள்ள கல்வித்தர வீழ்ச்சி, இளைஞர் களிடையே காணப்படும் வன்முறை நாட்டம், கலாசாரச் சீரழிவு என்பவற் றிற்கான சிகிச்சை முறை முன்பள்ளி நிலையிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். எனவே முன்பள்ளிகள் காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு நன்கு அபிவிருத்தி செய் யப்பட வேண்டும். அன்றிருந்த தன வந்தர்களது உயரிய சிந்தனையின் வெளிப்பாடே இன்றுள்ள பல பிரபல் யமான பாடசாலைகளின் தோற்ற மாகும். இன்றுள்ள பணம் படைத்தோர் ஏன் முன்பள்ளிக் கல்வியின் பால் தமது கவனத்தைத் திருப்ப முடியாது.

யாழ் பல்கலைக்கழக கல்வி யியல் சமூகத்தினரும் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூத்தினரும் இணைந்து முன் பள்ளி ஆசிரியர் களினது வாண்மை விருத்தியில் உரிய கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்குப் போதுமான பயிற்சியினை வழங்கி வழிப்படுத் தினால் குழந்தைகளுடைய எதிர் காலம் சிறப்புப் பெறும்.

தற்போதுள்ள முன்பள்ளி நிலையங்கள் எவ்வாறு செயற்படு கின்றன, அங்குள்ள வசதிகள் அவற்றின் பொருத்தப்பாடு, என்பவற் றைக் கவனிக்கவும் அபிவிருத்தி செய்வதும் எமது சமூகத்தின் கடமை யாகும். நகர சபையினர், பிரதேச சபையினர், பிரதேச செயலகம் என்பன இவ்விடயத்தைப் பற்றி காத்திர மான ஒரு நோக்கினைக் கொண்டிருக்க வேண்டும். ஒரு பொது வேலைத்தி ட்டமொன்றினை வடிவமைத்து விரைந்து செயற்பட வேண்டும்.

குழந்தைகளினுடைய அறி கைத்திறன் இரண்டு முதல் ஐந்து வயது என்ற எல்லைக்குள் மிக வேகமாக வளருகின்றது என குழந் தைகள் உளவியலாளர்கள் கூறு கின்றனர். இப்பருவமே முன்பள்ளிப் பருவமாகும். எனவே முன்பள்ளிக் கல்வியிலே நாம் அதிக கவனமெடுக்க வேண்டிய கடப்பாடுடையவர் களாகிறோம்.

உசாத்துணை: –
குழந்தைக் கல்விச் சிந்தனைகள் –
பேராசிரியர் சபா ஜெயராசா.

முன்பள்ளிகளின் வெற்றிகரமான முகாமையும் முன்பள்ளிகளின் தரமேம்பாடும்

சி. இ. சத்தியேந்திரம்பிள்ளை
B.A, B.Com, PGDE, HNDA MAAT, MED, MPHIL
உபபீடாதிபதி (நிர்வாகம்/நிதி)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி.

தற்காலக் கல்விச் செல்நெறியில் முன்பள்ளிகளின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. ஒழுங்கமைத்த பாடசாலைக் கற்றல் முறைமைக்கு முன்னர் ஒழுங்கமைத்த முன்பள்ளி அமைப்பு முறை இடம் பெறுவதன் அவசியம் உணரப்பட்டு அதற்கான முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டு சில ஆரம்ப நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு கிழக்கு பகுதிகளில் தமிழீழக் கல்விக் கழகம். தமிழர் புனர்வாழ்வுக் கழகம், வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு என்பன இணைந்து முன்பள்ளிகளின் மேம்பாட்டிற்கான செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

முன்பள்ளிக் கல்வி தொடர்பான இடர்பாடுகள்

வடக்கு கிழக்கில் தமிழ் மொழி மூலம் மொத்தம் 2809 முன்பள்ளிகளும் 4751 முன்பள்ளி ஆசிரியர்களும் 81088 முன்பள்ளி மாணவர்களும் உள்ளனர். மேற்படி தரவுகள் காணப்பட்டபோதும் முன்பள்ளிகள் தொடர்பாக பின்வரும் இடர்பாடுகள் காணப்படுகின்றன.

1. பௌதீக வளங்கள் பற்றாக்குறையாக இருக்கின்றமை.
   உ+ம்:- கட்டிடம், தளபாடங்கள்
2. கற்றல் வளங்கள் பற்றாக்குறையாக இருக்கின்றமை
   உ+ம்:- விளையாட்டு முற்றம், கற்றல் சாதனங்கள்
3. முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகைமைகளில் உள்ள வேறுபாடுகள்
4. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேறு தொழில்களை நாடிச் செல்கின்றமை.
5. முன்பள்ளிக்கும் பெற்றோருக்கு மிடையே சீரான இடைத்தொடர்பு இன்மை.
6. முன்பள்ளிகள் பற்றிய சமூக விழிப்புணர்வு போதியதாக இல்லை.
7. முன்பள்ளி ஆசிரியர்களுக்குரிய வாமைத்துவ விருத்திக்கான சந்தர்ப்பங்கள் குறைவாக காணப்படுகின்றமை
8. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் போதியவையாக இல்லாதிருக்கின்றது.
9. சிறப்பாக முன்பள்ளிகளை நடாத்திச் செல்வதற்குரிய வழிகாட்டல் உதவிகள் போதியவையாக இன்மை.

அமுலாக்கத் திட்ட நடைமுறைகள்

முன்பள்ளியினூடாக முழுமையான கல்வியையும் பயிற்சியையும் மாணவர்களுக்கு வழங்குவதில் முன்பள்ளிகளின் சிறப்பான ஒழுங்கமைப்பு முக்கியம் பெறுகின்றது. அவையாவன.

1. சிறந்த நிர்வாகக் கட்டமைப்பும் அவற்றுக்கிடையே இணைப்பும் முன்பள்ளிகளின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல் செயற்பாடுகளுக்கென பின்வரும் ஆளணியினர் உள்ளனர்.

1. உதவிக் கல்விப் பணிப்பாளர்
2. வலய இணைப்பாளர்
3. பிரதேச இணைப்பாளர்
4. குடும்பக் கட்டமைப்புத் தலைவி

கிரமமான முறையில் அமைந்த மேற்பார்வை மற்றும் வழி காட்டல்கள் முன்பள்ளி ஆசிரியர்கள் தமது செயற்பாடுகளை வினைத் திறனுடன் மேற்கொள்ள உதவியாக அமையும்.

2. நிர்வாகக் கருமங்கள்

முன்பள்ளிகளில் பல்வேறு ஆவணங்கள் பேணப்படுவதுடன் பல வகைப்பட்ட நிர்வாகச் செயற்பாடு களிலும் ஆசிரியர்கள் ஈடுபட வேண்டியது அவசியமாகும். ஆவணங் களின் வகைகளாவன

1. நேர அட்டவணை
2. ஆசிரியர் வரவுப் பதிவேடு
3. மாணவர் தினவரவுப் பதிவேடு
4. மாணவர் சுயவிபரப் பதிவேடு
5. மாணவர் போசாக்கு பதிவேடு
6. காசுப் பதிவேடு
7. பௌதீக வளங்களின் பதிவேடு
8. சம்பவப் பதிவுப் புத்தகம்
9. மேற்பார்வையாளர் பதிவுப் புத்தகம்
10. பெற்றோர் கூட்ட அறிக்கை
11. தேவைப்படும் வளங்கள் பற்றிய விபரம்
12. மாணவர் முன்னேற்ற அறிக்கை

முன்பள்ளிகளுக்கான உதவிகளைப் பெறக்கூடிய வழிவகைகள்

ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் உதவிகள் ← உதவிக் கல்விப் பணிப்பாளர் வலய இணைப்பாளர் பிரதேச இணைப்பாளர் குடும்ப கட்டமைப்பு தலைவி அயற் பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள்.

பௌதீக வள உதவிகள் ← பெற்றோர், பழைய மாணவர்கள் பிரதேச சமூக நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள்

மாணவர் போசாக்கு விருத்தி ← பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குடும்ப நல மாது மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி

ஆளணி வள உதவி ← பெற்றோர், பழைய மாணவர்கள், அயற்பாடசாலை பிரதேச சனசமூக நிலையம்

மேற்படி விபரத்தின் பிரகாரம் முன்பள்ளிகள் பிரதேச சமூக நிறுவனங்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், சுகாதாரத்துறையினர் ஆகியோருடன் சீரான கிடைத் தொடர்புகளைப் பேணுவதன் மூலம் போதிய உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

முன்பள்ளி ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்தி சந்தர்ப்பங்கள்

ஏற்கனவே முன்பள்ளி ஆசிரியர்கள் பல்வேறு பயிற்சிக் கருத்தரங்குகளில் பங்குபற்றி வருகின்றனர்.

தற்போது இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் முன்பள்ளி டிப்ளோமா பயிற்சி நெறி ஆரம்பிக்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்களால் மேற்கொள்ளக் கூடிய சில முகாமைத்துவ உத்திகள்

1. விடயங்களை முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும். இதன்போது உரிய திகதி, பொருத்தமான நேர ஒழுங்கு பெறக்கூடிய வளங்கள், ஆளணி உதவிகள், சட்ட நடைமுறைகள் என்பவற்றைக் கருத்திக் கொள்ள வேண்டும்.
2. விழாக்கள் நடாத்தும் போது சிறந்த முறையில் வேலையைப் பங்கிட்டுக் கொடுக்கும் ஆற்றல் கொண்டிருக்க வேண்டும்.
3. சிறந்த ஊக்குவிப்பாளராக இருத்தல் வேண்டும் செயற்பாடுகள் வினைத்திறனைகள் நடைபெறுவதற்கு இது உதவியாக அமையும்.
4. சிறந்த கிடைத்தொடர்புகளைப் பேண வேண்டும். முன் பள்ளிகளின் வளர்ச்சிக்கு சமூக நிறுவனங்களின் பங்களிப்பு அவசியம் சென்ற வகையில் இது முக்கியம் பெறுகின்றது.
5. மீள் பார்வை செய்யும் திறனைக் கொண்டிருக்க வேண்டும். நடைபெற்ற செயற்பாடுகளின் குறை நிறைகளை அறிந்து கொள்வதற்கும் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் செயற்பாடுகளை வினைத் திறனை மேற்கொள்வதற்கும் இது உதவியாக அமைகின்றது.

உசாத்துணை நூல்கள்:-

1- புதிய கல்விச் சீர்திருத்தம் 1997

2- நவீன முகாமைத்துவ கோட்பாடுகள் T. ஈஸ்வரன்

குழந்தை கல்வியில் பெண்களின் பங்கு

செல்வி இ. சிவதர்மிகா
வலய இணைப்பாளர்,
தென்மராட்சி

கல்வியை ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படை மூலவளமாக அமைகிறது. இதற்கமைய குழந்தைக் கல்வி என்பது ஆளுமையுடைய முழு மனிதனை ஆக்குவதில் ஆரம்பப்படி யாக அமைகிறது. தாயின் கருப்பை யில் குழந்தை மலரும் போதே கல்வி தொடர்கிறது. குழந்தை பிறந்து தாயின் அரவணைப்பிற்கு பின்பு அதன் இயல்பான வளர்ச்சியின் போதே கற்ற லும் நடைபெற வேண்டும். விளை யாட்டை விரும்பும் குழந்தைப் பருவத் தில் அவர்கள் ஆடியும் பாடியும் விளை யாடியும் தமது திறன்களை வளர்த்துக் கொள்கின்றனர். எனவே மலர்கின்ற இளம் பருவத்துக் கல்வி மகிழ்ச்சிகர மாக அமைவதற்கு அவர்கள் கற்கும் சூழல் பூஞ்சோலை போல் விளங்க வேண்டும்.

குழந்தை மூன்று வயது முதல் ஐந்து வயது வரை அதன் ஆரம்பப் பள்ளிகளில் கல்வி பயில்வதில் தாய் போன்று மென்மையுள்ளம் படைத்த பெண்களின் பங்கு முக்கியமாகிறது. கற்கும் குழந்தைகளுக்கு தாயாகவும் ஆசிரியராகவும் பணிபுரிந்து சமூக வளர்ச்சியில் நிலைநிறுத்த வேண்டும்.

குழந்தைகள் வாழும் சூழல் களிலிருந்தும் அவர்கள் பெறுகின்ற அனுபவங்களிலிருந்தும் கல்வி ஆரம்பிக்க வேண்டும். அத்துடன் இயற்கை, சமூகம், இறைவன் என்பவற் றுடன் ஒருமைப்படுத்தி அவற்றை உணரச் செய்வதே கல்வியின் நோக்க மும் பயனும் ஆகும். இதனை பெண் கள் உணர்ந்து அவர்களை வளர்க்கக் கூடிய செயல்களினூடாக கற்பதற்கான சந்தர்ப்பங்களை ஆண் ஆசிரியர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கல்வி என்பது ஓர் அடிப்படை அத்திவாரத்தின் மேல் படிப்படியாக மேலெழ வேண்டும். குழந்தைகள் பெறும் கல்வி காலத்தாலும் தன்மை யாலும் முதன்மை பெற்று விளங்க வேண்டும். இத்தகைய உறுதியான கல்வியே வாழ்விற்கு ஆதாரமாக அமைய வேண்டும் என்ற கருத்துக் களை காந்தியடிகள் முன்வைத்தார்.

ஒருவர் தனது சமூக மரபின் தன்மையை உணர்ந்து இணக்கமான முறையில் பிறருடன் தொடர்பு கொண்டு பழகும்திறன் வளர்ச்சி பெறும் போது சமூக வளர்ச்சி ஏற்படும். இது தொடர்ச்சியாகவும், மெதுவாகவும் நிகழ்வதாகும். குழந்தையின் சமூக இயல்பு தன் தாயுடன் ஆரம்பிக்கிறது. குழந்தையின் உடலியல் தேவைகள் பாதுகாப்பு, அன்பு, அரவணைப்பு யாவும் ஆரம்பத்தில் தாயால் பூர்த்தி செய்யப்படும். நான்கு மாதப்

பருவத்தில் தந்தை, சகோதரர், நெருங்கிய உறவினர் ஆகியோரை இனம்கண்டு உறவாடத் தொடங்கும். பின் இரண்டு வயதளவில் தம்முடன் பழகிய உறவினர், அயற்குழந்தைகள் ஆகியோருடன் சேர்ந்து விளையாடும். இது சமூக விருத்திக்கு உதவும். மூன்று வயதில் குழந்தைகள் முன்பள்ளிகளை அடைந்து மேலும் பண்புகளை விருத்தியடையச் செய்யும். இதில் முன்பள்ளி ஆசிரியரின் பணி மகத்தானது.

இவ்விடத்தில் இன்னொரு விடயத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அது எதுவெனில் தியாகம். தியாகவுள்ளம் அவைகளைவிட பெண்களுக்கே அதிகமுள்ளது என்பதும் மனோவியல் நிபுணர்களின் வாதம். உண்மையில் முன்பள்ளி ஆசிரியைகள் அனைவருமே தியாகிகள் தான். அவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்படுவதில்லை. அதை வழங்க எவரும் முன்வருவதுமில்லை. சில இடங்களில் ஊதியம் அறவே இல்லாத நிலையுமுண்டு. இந்த ஒரு நிலையில் கடமையற்ற எந்த ஒரு ஆணும் முன்வரமாட்டார். ஆனால் பெண்களோ சலிக்காது அவர் கடமையை தியாகவுணர்வோடு செய்து வருகிறார்கள். குழந்தைக் கல்வி என்றால் ஊதியத்தை எதிர்பாராமல் சேவை செய்ய வேண்டும். இது ஆண்களால் முடியாத காரியம். எனவே இவ்விடத்திலும் குழந்தைக் கல்வியில் பெண்களே முதன்மை பெறுகிறார்கள். (இது எமது பிரதேசக் குழந்தைக் கல்வியின் நிலை)

ஒரு குழந்தையின் எதிர்கால கல்விக்கான அத்திவாரம் இடுகின்ற உயர்ந்த கைங்கர்யத்தை முன்பள்ளி ஆசிரியர் ஆரம்பித்து வைக்கிறார் என்றால் ஒரு மானிட வாழ்வின் எதிர் காலத்தை தீர்மானிப்பதில் பெண்மைக்கு பெரும்பங்கு உள்ளது உண்மை ஆகும்.

ஏனைய நிலை கல்விகளை ஒருவர் பெறுவதற்கு குழந்தை கல்வியே மிக அவசியமானது. எனவே ஏனைய கல்விநிலையை கற்பிக்கும் ஆசிரியருக்கு முன்பள்ளி ஆசிரியர் கல்வியூட்டல் துணையாக அமைகிறது. இந்தவகையில் முன்பள்ளி கல்வி பெரும்பான்மையானவருக்கு ஏற்ற வகையில் ஊட்டப்படுகிறது. இந்த வகையில் கல்வி வளர்ச்சியில் பெண்கள் பங்கு.

குழந்தைகளுக்கும் அவர்கள் வாழும் சமூகத்திற்கும் பயனுள்ள விரும்பத்தக்க பல நடத்தை மாற்றங்களை தோற்றுவித்தலே கல்வியின் உண்மையான நோக்கமாகும். எனவே குழந்தைகளின் நல்வளர்ச்சிக்கான கருவியாக கல்வி அமைகிறது. அவர்களின் அறிவு செயல்திறன்கள், நன்மனப்பான்மைகள், சமூகத் தொடர்புகள், ஒழுக்கம் என்பன கற்றல் மூலம் வளர்ச்சி பெற ஊக்குவித்தல் ஆசிரியரது பணியாகும்.

குழந்தை பிறக்கும்போது மரபு வழியான உளத்திறன் எதனையும் கொண்டிருப்பது இல்லை. தெறிவினைச் செயற்பாடுகளை மட்டும்

கொண்டுள்ள குழந்தை சூழலுடன் இடைவினை கொள்ளும்போது குழந்தையின் அறிவு வளர்ச்சியடைகிறது. இந் நோக்கத்தை நிறைவு செய்பவராக முன்பள்ளி ஆசிரியர்கள் இருத்தல் வேண்டும்.

கல்வியும் போராட்டமும் இணைந்த வாழ்வு போற்றுதலுக் குரியது என்ற தேசிய தலைவரின் சிந்தனைக்கமைய குழந்தைகள் எதிர் கால சிற்பிகள் அவர்களே தமி ழீழத்தை ஆளும் பிரியர்கள்.

தமிழர் தேசத்துக் குழந்தைக ளுக்கு சிறப்பான குழந்தைக் கல்வி ஊட்டப்பட வேண்டும். இக்குழந்தை கள் கல்விச்சாலைகள் மேலைத்தேயக் கல்விச்சாலைகளை ஒத்தவையாகத் தரமுயர்த்தப்பட வேண்டும். தமிழர் தேசத்தின் சிற்பிகள் சிறந்த அறிவைப் பெற்று வளர வேண்டும் என்ற பேரன் பைப் படைத்தவராகவுள்ளனர். தனது நிர்வாகக் கட்டமைப்புக்களில் முன் பள்ளிக் கட்டமைப்பையும் உருவாக்கி அதனை தானே மேற்பார்வை செய்வ தோடு குழந்தைக் கல்வியில் பேரக் கறையோடும் உள்ளனர். நம் தேசக் குழந்தைகளை சிறப்பானவர்களாக வளர்த்தெடுக்கும் நோக்கில் செஞ் சோலையையும் ஆரம்பித்த தேசியத் தலைவர் அவற்றோடு ஈழவள நாட்டில் முன்பள்ளிகளையும் பேணி பாதுகாத்து அவற்றுக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்து வருவது இங்கு குறிப்பிடத்தக்க தாகும்.

குழந்தைக் கல்விக்கு வேண் டிய மாதிரி முன்பள்ளிகள் பல தேசி யத் தலைவரின் பணிப்புக்கு இணங்க இன்று வடக்கு கிழக்கு மாகாணப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. மாதிரி முன்பள்ளிகள், முன்பள்ளிகள் என்பவற்றை அமைத்துத் தந்துள்ளமை யும் ஆசிரியர் தினம் முதல் குழந்தை கள் தினம் வரை முன்பள்ளிகளில் கொண்டாடும் நிலை ஏற்பட்டமையும் எமது தேசியத் தலைவரின் வழி காட்டலாகும். சுனாமி பேரழிவினால் அழிவுற்ற தமிழ் மக்களில் இளம்பிஞ்சு கள் பல உயிர் இழந்தமை இன்றும் தேசிய தலைவரின் உள்ளத்தை வருத்திக் கொண்டிருக்கும் நிலையை உணரமுடிகிறது. இவ்விடத்தில் எமது தேசிய தலைவர் கொண்டுள்ள அன்பும் பற்றும் தெளிவாகின்றன என்பது இங்கு குறிப்பிட வேண்டிய ஒரு விடயமாகும்.

குழந்தைகள் கல்வியைப் புகட் டுவதன் பெரும்பங்கு எமது தாய்க் குணத்தை சேர்ந்து நிற்கும். அதே வேளை குழந்தைக் கல்விக்கான அடிப் படை வசதிகள் பலவற்றை எமது பிரதேசத்தில் உருவாக்கித் தருகின்ற மிகப்பெரும் பணியினை எமது தேசியத் தலைவர் மேற்கொண்டு வருவதாவது எமது மக்கள் அனைவரும் தெரிந் திருக்க வேண்டிய விடயமாகும்.

வடக்கு கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் சிறப்பு அம்சம் தமிழ், சிங்களம், முஸ்லீம் என்ற பாகுபாடு இன்று ஒருங்கிணைந்த அனைவருக்கும் ஒரே வகை பயிற்சி வழங்கி தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் நடாத்தி வருகின்ற சிறப்பம்சம் ஆகும்.

முன் பிள்ளைப் பருவ உள நலமும் குடும்பமும்

கோகிலா மகேந்திரன்

இரண்டு வயது முதல் ஐந்து வயது வரையான பருவம் முன் பிள்ளைப் பருவம் என அழைக்கப் படுகிறது.

தாய், தந்தை, பிள்ளைகள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் ஒன்றாக இணைந்து வாழ்வது சாதாரண குடும்பம் குடும்பங்களில் பிள்ளைகள் பிறந்து வளருகின்றனர். வளர்ச்சி என்பது தொடர்ச்சியாக நடைபெறு கிறது. தொடர்ச்சியான வளர்ச்சியில் இடையிடை வெளிப்படும்மைல் கற்கள் விருத்தி எனப்படும். மொட்டு ஒன்று மெதுவாக வளர்ந்து வருவது வளர்ச்சி என்றால் பூ ஒன்று விரிவது விருத்தி ஆகும்.

குழந்தைகளின் வளர்ச்சிக்கு மிக ஆதாரமான அடிப்படை அலகு குடும்பம். இது மிக நீண்டகாலம் நிலைக்கும் அலகாக இருப்பதால் மிக முக்கியத்துவம் பெறுகிறது. ஆயினும் பரம்பரை குடும்பத்துக்கு வெளியே உள்ள சூழல் சமூக நிலைமைகள், முன்பள்ளியின் தன்மை, வளர்ச்சி விருத்தி நடைபெறும் முறை, வழங்கப் படும் ஆன்மிகச் சூழல், தேவைகள் பூர்த்தி செய்யப்படும் முறை போன்ற விடயங்களும் பிள்ளையின் உளநலத் தில் செல்வாக்குச் செலுத் துகின்றன.

புதிதாகப் பிறந்த ஒரு குழந்தை யின் உடல், உள, சமூக, ஆன்மீக, புலன் உணர்வு, தசை இயக்க, அறிகை, உணர்ச்சி சார் விருத்தி யாவும் வீட்டில் ஆரம்பமாகிறது. ஒரு குழந்தையின் அடிப்படை உடற் தொழிலியல் தேவைகளான உணவு, நீர், ஒட்சிசன், புலன்தூண்டல், நித்திரை போன்றனவும் ஏனைய தேவைகளான அன்பு, காப்பு, கணிப்பு, சுயதிறன், நிறைவு ஆகியனவும் குடும்பத்தில் இருந்தே கிடைக்க வேண்டும்.

ஏனைய பல விலங்குகளோடு ஒப்பிடுகையில் மனிதக் குழந்தையின் விருத்தி மிக ஆறுதலாக நடை பெறுவது குழந்தை ஒன்று தானாகத் தனித்து வாழ்வதற்கு முன்னர் பல வருட ஆதரவும், கற்றலும் குழந் தைக்குத் தேவைப்படுகிறது. சர்வதேச ரீதியாகவே பிள்ளையின் வாழ்வில் பெற்றோரின் பங்கு மிக முக்கியமானது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆதரவான குடும்பம் ஒன்று இல்லாத பிள்ளைகள் கூட்டுக் குடும்பங்களிலும் வேறு தனி நபரிடத்திலும் தமக்குத் தேவைப்படும் அன்பு, பாதுகாப்பு, கணிப்பு, ஆகியவற்றைத் தேடித் திரிவர்.

பிள்ளை ஒன்றின் வளர்ச்சியில் வேறு பல நிறுவனங்கள் செல்வாக்குச் செலுத்துமாயின் வலுவிலும் அக லத்திலும் குடும்பமே முதன்மையான தாக இருக்கும். குடும்பத்தில் பெற்றோரிடமும் சகோதரரிடமும் உரு வாகும் உறவு ஒரு வாழ்வுக் காலம் முழுதும் நீடித்திருப்பது. பாடசாலை யிலும், சமூகத்திலும், ஏற்படும் ஏனைய உறவுகளுக்கு மாதிரியாக அமைவதும் அதுதான்.

இன்னொரு மனிதனுடைய நடத்தையில் நாம் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறோம் என்பதைக் கற்றுக் கொள்வது குடும்பத்திலிருந்து தான். மொழி, பல வேறு திறன்கள், சமூக விழுமியங்கள், ஒழுக்கப் பண்புகள் கலாசாரம் ஆகியனவும் குடும்பத்திலேயே கற்றுக் கொள்ளப் படுகின்றன. குடும்பமே இப்பிள்ளைகளுக்குரிய நிதியுதவி, சேவைகள், சமூக ஒழுங்கு, சமூக மயமாதல், திறன், உணர்வு, ஆதரவு ஆகிய வற்றைப் பிள்ளைக்கு வழங்குவது.

பல பிள்ளைகள் இன்று குடும்பத்தில் விவாகரத்து, ஒற்றைப் பெற்றோரியம், உடைந்த குடும்ப நிலை தாய் தந்தை இருவரும் முழு நேர வேலைக்குச் செல்லுதல், தாய் தந்தையின் மறுமணம் போன்ற நெருக்கீடுகளைச் சந்திக்கின்றனர். இத்தகைய நெருக்கீடுகளைச் சந்திக்கும் பிள்ளைகள் உளநலத்துடன் வளர்தல் ஒரு சவாலாகவே இருக்கிறது.

பெற்றோர் பிரிந்து வாழ்வது, விவாகரத்துச் செய்து கொள்வது அல்லது அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வது, மது பாவனையுடைய தந்தை அடிக்கடி தாயையும் குழந்தைகளையும் அடிப்பது போன்ற நிலைமைகள் காணப்படும் போது, அக்குடும்பங்களில் இருந்துவரும் பிள்ளைகளின் சுய எண்ணம், சுய கணிப்பு, சமூகத்தேர்ச்சி, மகிழ்வு, முதிர்ச்சி ஆகியவை குறைவாகவே இருக்கும். இத்தகைய குடும்பங்களில் பெற்றோர் தமது சொந்தப் பிரச்சனைகளில் மூழ்கி இருப்பதால், பிள்ளைகளின் தேவைகள் கவனிக்கப்படுவதில்லை. இவ்வேளைகளில் பெற்றோர் பிள்ளைகளுடன் கடுமையாகவே நடந்து கொள்வர். அது அவர்களின் உள நலத்தைப் பெரிதும் பாதிக்கும்.

குறிப்பாக, பெற்றோர் மறுமணம் செய்து கொள்ளும் போது அந்நிகழ்வு பிள்ளைகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் இருப்பதால், ஏனைய நெருக்கீட்டுச் சம்பவங்களும் தமது கட்டுப் பாட்டை மீறியவையே என இவர்கள் கருதுவர். அது அவர்களின் உளச் சமநிலையைக் குழப்பிவிடும்.

குடும்பத்துக்குள் வரும் முரண்பாடுகளும் சண்டைகளும் பிள்ளைகளின் மனச் சோர்வுக்குப் பதகளிப்புக்குக் காரணமாக இருக்கும். குடும்பத்தில் ஒரு பெற்றோர் மட்டும் இருப்பாராயின் (குறிப்பாகத் தந்தை இல்லாதிருந்தால்) அக்குடும்பத்தில் அடிப்படைத் தேவைகளையே நிறைவு செய்ய முடியாத அளவுக்குப் பொருளாதாரக் கஷ்டமும் காணப்படலாம். இல்லாத அந்தப் பெற்றோரின் வகிபங்கும் அங்கு பூர்த்தியாக்கப்படாமல் இருப்பதால் குழந்தைகள் நிறையவே குழப்பமடைய வாய்ப்புண்டு.

பெற்றோர் ஒருவரோ அல்லது இருவருமோ இருக்கும் போதும் சில வேளை அவர்கள் பிள்ளைகளை இல்லங்களில் சேர்த்து விடுகிறார்கள். இல்லங்களில், உணவு, உடை, உறைவிடத் தேவைகள் எவ்வளவு சிறப்பாகப் பூர்த்தி செய்யப்பட்டாலும் அன்பு, பாதுகாப்பு, கணிப்புத் தேவகைளை இல்லங்கள் சிறப்பாகப் பூர்த்தி செய்ய முடியாது. இந்த நிலையும் பிள்ளைகளின் மனச் சமநிலைக் குழப்பத்திற்குக் காரணமாகின்றன. ஆகவே பெற்றோர் இருக்கும் போது பிள்ளைகள்

இல்லங்களில் சேர்க்கப்படுதல் தவிர்க்கப்பட வேண்டும். பொருளாதார ரீதியில் அவர்களுக்கு உதவ விரும்பும் நிறுவனங்கள் குடும்பங்களுக்கு அந்த உதவியை வழங்கலாம்.

குடும்பங்களில் பாத்திரத் தெளிவு சரியாக இருக்கும் போது பிள்ளைகளின் உளநலம் சிறப்பாக இருக்கும். பாத்திரச் செயற்பாடுகளில் குழப்பங்களும் தெளிவின்மையும் இருந்தால், உளநலம் சரிந்து போக வாய்ப்புண்டு. பெற்றோர் இந்த விடயங்களை அறிந்திருப்பதும், நடைமுறைப் படுத்துவதும் முக்கியம்.

குழந்தை ஒன்று பிறந்த உடனேயே அதன் கல்வி ஆரம்பமாகி விடுகிறது. (கருவறையிலும் அது நடக்கலாம்) தனது முதல் ஓரிரு வருடங்களில் தான் குழந்தை மிக அதிக அளவு விடயங்களைக் கற்றுக் கொள்கிறது. இக்காலப்பகுதியில் பிள்ளைகளின் வளர்ச்சி விருத்தியில் பெற்றோர் ஆதரவாகவும் அக்கறையாகவும் இருப்பதோடு, புதியதிறன்களைப் பிள்ளை கற்றுக் கொள்வதற்கு நிறையவே உதவ வேண்டும். அவர்களின் கதைகளை உற்றுக் கேட்க வேண்டும். அவர்களின் பொருத்தமான நடத்தைகள் நேர்மீள வலியுறுத்தல் செய்யப்பட வேண்டும். அவர்கள் கோபம், பயம், கவலை, வெறுப்பு போன்ற மறை உணர்வுகளுக்கு உள்ளாகும்போது அந்த உணர்வுகள் பகிர்ந்து கொள்ளப் படுவதற்குப் பெற்றோர் ஆதரவாக இருக்கவேண்டும்.

முன்பள்ளிப் பருவப் பிள்ளைகள் தாமாக உடை அணிந்து தெறிகளைப் பூட்டி, 'சிப்' பையும் பூட்டக் கூடியவர்கள். பெற்றோர் ஒரு சிறு மேற்பார்வை கொடுத்தால், போகும் சிலிப்பர்களைப் போட்டுக் கொள்வார்கள். சப்பாத்துகளைக் கட்டுவதற்கு உதவி தேவைப்படலாம்.

பல்லு விளக்குதல், முகம், கை, கால் கழுவுதல், குளித்தல் ஆகியவற்றைத் தாமே செய்து கொள்வராயினும் 'ஷாம்பு' போடுவதற்கோ, சவர்க்காரம் கண்ணுக்குள் வராமல் பார்ப்பதற்கோ உதவி தேவைப்படலாம். அம்மா அருகில் நின்று கொண்டால் போகும்.

மலசலகூடத்திற்குத் தனியே போய் வருவர். நீர் செம்மையாக ஊற்றியிருப்பதைப் பெரியவர்கள் கவனிக்கலாம்.

கரண்டியால் சாப்பிடமுடியும். பாணில் பட்டர், ஜாம் என்பவற்றைப் பரவக் கூடியவராய் இருப்பர். கதைத்துக் கொண்டே சாப்பிடுவர். சாப்பாடுகளில் விருப்பு, வெறுப்பு ஏற்படத் தொடங்கியிருக்கும். சாப்பாட்டு மேசை ஒழுங்கு செய்வதில் உதவக் கூடியவர்.

படுக்கை நேரம் எப்போதும் ஒழுங்காக இருந்தால் அதிக பிரச்சனை இன்றி நித்திரைக்குச் செல்வர். இருளுக்குப் பயம் இருக்கலாம். ஒரு சிறு விளக்கை எரிய விடலாம். இரவில் 10 - 12 மணி நேர நித்திரையும் மாலையில் ஒரு சிறு தூக்கமும் தேவைப்படலாம். இரவில் படுக்கை நனைக்கமாட்டார்கள்.

ஆரோக்கியமான முன்பள்ளிப் பிள்ளைகளின் உருவாக்கத்தில் குடும்பத்தின் பங்கு பெரியதாயினால், முன்பள்ளி ஆசிரியரும் சமூகமும் கணிசமான பங்களிப்பைச் செய்யலாம்.

சிறார்களின் விருத்தியில் உடற்கல்வி
Physical Education in Child. Development

திரு. க. கணேசநாதன்
B. Com. (Hons) Dip in Edu.
உடற்கல்வி அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சிறார்களின் விருத்தி பல்வேறு பரிமாணங்களில் இடம் பெறுகின்றது. இதில் ஓர் பரிமாணமே உடற்கல்வி மூலமான விருத்தியாக அமைகின்றது. ஓர் உயிரின் கரு தோன்றியதில் இருந்தே உடலியக்கம் படிப்படியாக விருத்தியடைகின்றது. ஓர் உயிரின் உடலியக்கத் திறன் என்பது சுகப் பிரசவத்திற்கு உறுதுணையாக அமை கின்றது. இந்த வகையில் உலகை தரிசிக்கும் உயிர்கள் எல்லாம் தமது உடலியக்க செயற்பாடுகளின் மூல மாகவே தமது தேவைகளை திருப்தி செய்வதற்கான தொடர்புகளைப் பேணிக் கொள்கின்றன. மனித குலத் தில் குழந்தை பேசத் தொடங்கும் வரைக்கும் அதன் சுற்றத்தவர்களு டனான இடைத் தொடர்புகள் யாவும் உடல் மொழி மூலமாகவே (Body Language) பேணப்படுகின்றது. இங்கு உடல் அசைவுகளின் மூலம் தோற்று விக்கப்படும் கட்புல, செவிப்புல தொடர்புகள் குழந்தையின் உடலியல், பாதுகாப்பு மற்றும் சமூகத் தேவை களைப் பூர்த்தி செய்ய உதவுகின்றன. எனவே தான் மனிதர்களின் கற்றல் என்பது உடலியக்கத்தின் மூலமே தோற்றம் பெறுகின்றது என்பதை நாம் உணர முடிகின்றது.

குழந்தைப் பருவத்தில் பிள்ளை தனது செயற்பாடுகளை படிப்படியாக தாய், தந்தை, உற்றார், உறவினர், சுற்றத்தார் என்ற சமூக குழுக்களு டனான இடைத் தொடர்பினூடாக விருத்தி செய்கின்றது. மேற்கத்தேய நாடுகளில் அவர்களது வாழ்க்கை முறைக்கேற்ப சிறுவர்கள் சிறுவர் பரா மரிப்பு இல்லங்களில் பராமரிக்கப் படுகின்றனர். அங்கு மேற்கொள்ளப் படும் பராமரிப்பு செயற்பாடுகளில் பிள் ளைகளுக்குப் பொருத்தமான உடல் இயக்கச் செயற்பாடுகள் நன்கு பயிற்சி பெற்ற பராமரிப்பு உதவியாளர்களி னால் நன்கு திட்டமிடப்பட்ட முறை களினூடாக படிப்படியாக அறிமுகப் படுத்தப்படுகின்றது. அவர்கள் 2-3 வயது பராயத்தில் விளையாட்டு பாட சாலைகளுக்கு (Play School) அனுப் பப்படுகின்றனர். இப் பாடசாலைகளில் சிறார்கள் வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை பண்புகளையும் திறன் களையும் பண்புகளையும் உடலியக்க விளையாட்டு செயற்பாடுகளினூடாக அறிந்து கொள்கின்றனர். இவ் அறிக் கையானது நன்கு திட்டமிடப்பட்ட செயற்பாடுகளினூடாக காலத்திற்குக் காலம் சீரமைக்கப்பெற்ற கற்றல் கோட்பாடுகளிற்கேற்ப மேற்கொள் ளப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து 4-5 வயது பராயத்தில் முன்பள்ளிகளில் (Pree School) சிறார்கள் இணைக்கப் படுகின்றனர். இங்கு பிள்ளைகளுக்கு முறையான கற்றல் கற்பித்தல் செயற் பாடுகள் அறிமுகப்படுத்தப்படுகின்றது. நவீன கல்வி கொள்கைக ளுக்கேற்ப இக் காலகட்டத்தில் உடலியக்க செயற்பாடுகளின் மூலம் கற்றல் விட யங்கள் அறிமுகப்படுத்தப்படு கின்றது. இங்கு நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர் கள் இச் செய்முறையில் ஈடுபடுத்தப் படுகின்றனர்.

எமது சமூகத்திலும் அண்மைக் காலங்களில் முன்பள்ளி, ஆரம்பக் கல்வி செயற்பாடுகளில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளமையை அவதானிக்க முடி கின்றது. இதன் மூலம் சிறார்களின் விருத்தியில் உடற்கல்வியின் பங்கும் பயனும் உணரப்பட்டு உடற்கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

உடற்கல்வியானது தசை நார் விருத்தி, கலன் தொகுதி மேம்பாடு, உடல் விருத்தி என்பவற்றுடன் மட்டுமே தொடர்புடைய கல்விப்புலம் என்ற கருத்து நிலையில் இருந்து நாம் விடு பட்டு இன்று உடல், உள, சமூக, ஆன்மீக, ஒழுக்க, மனப்பாங்கு விருத் திகளை தோற்றுவிக்கும் ஓர் வியாபித்த கல்விப் புலமாக உடற்கல்வி உணரப் பட்டுள்ளது.

இன்று சிறார்களின் கல்வியில் அவர்களது விருத்தியை வேகமாகவும் விவேகமாகவும் முன்னெடுப்பதற்கு அசைவு, ஆக்கத் தொழிற்பாடு, ஆடல் பயிற்சி, ஏனைய விளையாட்டுக்கள் தொடர்பான பயிற்சி வழங்கப்படல் வேண்டும் என்ற கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இக் கோட்பாட்டை மையப்படுத்தி நன்கு திட்டமிடப்பட்ட அடிப்படையில் உடற்கல்வியின் பிர யோகம் சிறார்களின் விருத்தியில் பயன் படுத்தப்படல் வேண்டும்.

சிறார்களின் விருத்தியில் பின்வரும் நோக்கங்களை நிறைவு செய்வதற்கு உடற்கல்வி பிரயோகம் அவசியமாகின்றது.

- உடல் விருத்தி.
- உள விருத்தி.
- வெற்றிக் களிப்பில் ஈடுபடும் அனுபவங்களைப் பெறல்.
- ஒத்துழைக்கும் மனப்பான்மையை வளர்த்தல்.
- பயனுள்ள வகையில் பொழு தைக் களிக்க பழகுதல்.
- ஆக்கத் திறன்களை விருத்தி செய்தல்.
- உடல் இயக்கத்திறனை விருத்தி செய்தல்.
- தேகாரோக்கியத்தை ஏற்படுத்தல்.
- உடற் தகமைகளை பெற்றுக் கொள்ளுதல்.
- சிறார்களின் வளர்ச்சிக்கு உறு துணை செய்தல்
- ஒழுக்க விழுமியங்களைப் பின் பற்றுதல்.
- சமநிலை ஆளுமை விருத்தியை உறுதி செய்தல்.
- தலைமைத்துவ ஆற்றலை விருத்தி செய்தல்.
- பணிவு, தன்னடக்கம், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை விருத்தி செய்தல்.

- ஏனையோருடன் இணைந்து செயற்படல், மதித்தல், ஏனையோர் மீது செல்வாக்கு செலுத்தும் திறனைவரவழைத்தல்.
- சட்ட திட்டங்கள், விதிகள், நடைமுறைகளை அனுசரித்து நடக்கப் பழகுதல்.
- சகிப்புத் திறன், நடுநிலைமை பேணல், வெற்றி தோல்விகளை சமமாக மதிக்கும் பண்புகளை விருத்தி செய்தல்.
- சமத்துவ, சகோதரத்துவப் பண்பைப் பேணல்.
- நேரம் தவறாமை.

பிறப்பிலிருந்து உடல் விருத்தி தன்னிச்சையாக நிகழ்கின்ற போதிலும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட உடற் செயற்பாடு முறைமை ஒன்றினை சிறார்களின் அபிவிருத்திக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சிறார்களின் உடற் திறனை விஞ்ஞான பூர்வமாக மேம்படுத்தவும், உடற் குறைபாடுகள் காணப்படின் அவற்றை சீர்செய்யவும், புலக்காட்சி சார் அறிவு செயல்களாகிய எண், இடம், வெளி, காலம், அளத்தல் என்பவற்றை மேம்படுத்தவும் உடற் கல்வி செயற்பாடுகள் சிறார்களுக்கு அவர்களது விருத்தியில் இன்றியமையாததாகக் காணப்படுகின்றது.

சிறார்களின் ஆரோக்கிய தன்மையை வெளிப்படுத்தும் பிரதான அம்சம் உடற் பொருத்தப்பாடாகும். ஓர் பிள்ளையின் செயற்பாட்டுத்திறன், சரியான மெய்நிலைகள், நெகிழ்ச்சி தன்மை என்பவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் உடலின் சிறந்த செயலாற்றல் எலும்பு, தசை, குருதி யோட்டம், சுவாச செயலொழுங்கு என்பவற்றின் இயைபாக்கலில் தங்கியிருக்கும் இவ் இயைபாக்கலானது உணவு, தேகாப்பியாசம், சுகாதார முறைமை என்பவற்றின் தொகுப்பாக விருத்தியுறுகின்றது.

மேற்படி விருத்தி தொடர்பான அம்சங்களை பெற்றோரும் ஆசிரியரும் நன்கு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இந்த வகையில் சிறார்களுக்கு பொருத்தப்பாடுடைய செயற்பாடுகளும் அவர்களின் துலங்கல்களும் பின் வருமாறு அமையப் பெறுதலை அறிந்திருத்தல் வேண்டும்.

குழந்தைப் பருவம் மிகவும் தீவிரமான பண்புகளையுடைய பருவமாகும். இப்பருவத்தில் சிறார்களின் ஓடுதல், பாய்தல், வினாவுதல் போன்ற செயற்பாடுகளில் பெரும் விருப்பத்தை வெளிப்படுத்துவர். அசைதல் செயற்பாடுகளினால் பெறும் அனுபவங்களில் ஆர்வம் காட்டுவர். பலவர்ண ஈர்ப்பு, போலச் செல்தல் ஆராய்வு ஊக்கம் என்பனவும் காணப்படும். ஆசிரியரும் பெற்றோரும் சிறார்கள் மீது செலுத்தும் அன்பும், ஆதரவும், அரவணைப்பும் இவர்களது விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும். இக்காலகட்டத்தில் நடத்தல், தள்ளுதல், ஊர்தல், புரளுதல், தொங்குதல், பாய்தல், தாவுதல் போன்ற எளிய உடலியக்கத் திறன்களை கற்பித்தல் பொருத்தமுடையதாக அமையும். தனித்தனியாகவோ அல்லது குழுக்க

ளாகவோ செய்யும் செயற்பாடுகளில் பந்து, விதைப்பை, வளையம், கயிறு, சிறு கோல், கயிற்று ஏணி, ஊஞ்சல், சறுக்கும் சாய்தளம் போன்ற இலகுவான உபகரணங்களை இச் செயற் பாடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்று எமது பிரதேசத்தில் சிறார்களின் விருத்தியில் உடற் கல்வியின் முக்கியத்துவம் உணரப் பட்டுள்ளது. எனினும் முன்பள்ளி மற்றும் ஆரம்ப வகுப்புக்களில் உடற்திறன் செயற்பாடுகளை மேற் கொள்வதற்கு போதிய இடவசதி இன்மை என்பது குறிப்பிடத்தக்க பின்னடைவாக உள்ளது. எமது சமூக முன் னேற்றத்தின் அத்திவாரமாக அமையும் சிறார்களின் கல்வி விருத்தியில் உடற் கல்வியின் பங்கையும், பயனையும் கருத்திற் கொண்டு போதியளவு இட வசதியை ஏற்படுத்துவதோடு ஒவ் வொரு முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பாடசாலைகளிலும் விளையாட்டு முற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வொரு கிராமங் களிலும் உள்ளூர் ஆட்சி அமைப்புக் களும் சமூக நலன் பேணும் அமைப் புக்களும், விளையாட்டு முற்றங்களு டன் கூடிய சிறுவர் பூங்காக்களையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஏற்படுத்தப்படும் வசதிகளையும் வாய்ப்புக்களையும் தக்கவாறு பயன்படுத்தி உடற்கல்வி அனுபவங்களினூடாக உடல், உள, ஒழுக்க, ஆன்மீக, மனப்பாங்கு விருத்திகளை சிறார்கள் பெற்றுக் கொள்ளும் வண்ணம் ஆசிரியர்களும் பெற்றோர்களும் சிறார்களுக்கு சிறந்த வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமே அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தி என்ற கல்வி இலக்குகளை சிறார்களுக்கு வர வளைத்து எமது சமூகத்தில் ஆரோக்கியமான, திடகாத்திரமான சிறந்த முடிவுகளை விரைவாக மேற் கொள்ளக் கூடிய தலைமைத்துவ ஆற்றல் கொண்ட எதிர்கால சந்ததி யிரை தோற்றுவிக்க முடியும். இச் செய்முறையிலே சமூகத்தில் எல்லா மட்டத்தவர்களதும் இணைந்த செயற் பாடு என்பதே இன்றைய தேவையாக உள்ளது.

"இதுவே தருணம் இணைந்த செயற்கு காக்கணும் உறுதி கனிவுடன் செம்மை களங்கள் பலதிலும் விளையாடி"

குழந்தை உளவியலும் கற்பித்தல் நுட்பங்களும்

திரு. க. கோவிந்தராசா
ஆசிரியர்
.யா/ கைதடி நாவற்குழி அ. த. க. பாடசாலை

குழந்தை உளவியல் என்று மில்லாத அளவிற்கு இன்று உன்ன தத்தை பெற்று வருகின்றது. எதிர்கால சமூகத்தின் வாழ்விலும் வளத்திலும் குழந்தை உளவியலின் முக்கியத் துவம் பரவலாக உணரப்படுகின்றது. குழந்தையின் வளர்ச்சியிலும் மேம் பாட்டிலும் எமது நேரடியான பங்களிப் பைச் செலுத்துவதுடன் குழந்தை வளர்ப்பை இங்கிதமாக்கவும் வளமாக் கவும் வழியமைகின்றது. குழந்தை சமூகத்தை விளங்கிக் கொள்ளல், தனியாள் இயல்புகளை விளங்கிக் கொள்ளல், பலங்களையும் பலவீனங் களையும் தெரிந்து கொள்ளல், இசைவாக்கல் பிரச்சனைகளைத் தெரிவு செய்தல் முதலியவற்றிற்கு குழந்தை உளவியல் வழியமைக் கின்றது. இக் குழந்தை உளவியல் பற்றிய விடயங்களை பாலர் பள்ளி ஆசிரியர்கள் அறிந்திருப்பது மிக அவசியமாகும்.

குடும்பமே குழந்தையின் முதற் சூழலாகும். பெற்றோரின் கல்வி நிலை, குடும்பத்தின் பொருளாதார நிலை, குழந்தைகளின் அடிப்படைத் தேவை கள் நிறைவேற்றப்படல், பொழுது போக்கு வசதிகள், குழந்தை வளர்ப்பு முறைகள், தாய் தந்தையரின் முதிர்ச் சிப் பண்பு, குடும்பத்தில் காணப்படும் கட்டுப்பாட்டு முறைகள், குழந்தையின் வளர்ச்சியிலும், கல்வியிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

வறுமை, குடும்ப நெருக்குவா ரம், அன்பு கிடைக்காமை, பொறாமை, உறுதியற்ற சூழல், புறக்கணிப்பு, சிறார் கேடுறுத்தல் முதலிய காரணங்களால் குழந்தைகளிடம் பயம், கோபம், பொறாமை, பதகளிப்பு போன்ற விரும்பத் தகாத மனவெழுச்சிகளும், மன உழைச்சல்களும், மன முறிவு களும் உருவாகின்றன. குழந்தை களிடம் இவற்றைச் சீராக்கம் செய்து உளச் சமநிலைப்படுத்தும் அறிவையும், மனப்பாங்கையும் பாலர் பள்ளி ஆசிரி யர்கள் பெற்றிருத்தல் மிக அவ சியமாகும்.

கற்றல் இடர்பாடுகள் பல்வேறு உடல், உள, மனவெழுச்சி மற்றும் சமூகக் காரணிகளால் ஏற்படுகின்றன. கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், கணித்தல், காரணங் காணுதல் முதலிய அடிப்படைத் திறன்களிலே பின்னடைவு காரண மாகவும் கற்றல் இடர்பாடுகள் ஏற்படுகின்றன.

குழந்தைகளிடத்திலே கண் பார்வைக் குறைவு, செவிப்புலன் உணர்வுக் குறைவு, பற்பழுது, உடல் ஒழுங்கீனம், தோல் நோய்கள், பேச்சுத் திறன் பாதிப்பு முதலியன காணப் படலாம். குழந்தைகளை கற்பிக்கின்ற ஆசிரியர்கள் குணநலவியல் பற்றிய அடிப்படை அறிவு கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். இக் குறைபாடுகள்

திருத்தியமைக்கக் கூடியதாகவுள்ளதென்பதை அறிந்திருத்தலுடன் பெற்றோருக்கு ஆலோசனை கூறி வழிகாட்டல் வேண்டும்.

சூழற் காரணிகளாலும் குழந்தைகளின் ஆளுமை வளர்ச்சியில் தாக்கங்கள் ஏற்படலாம். அன்பு , ஆதரவு, அரவணைப்பற்ற சூழலிலும், சிதைந்த குடும்பங்களிலும் வாழ்ந்த குடும்பங்களின் அடைவுகளும், நுண்மதித் திறனும் பாதிப்படைந்திருந்தமை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

சூழலை அடிப்டையாகக் கொண்ட பின்வரும் தேவைகளை குழந்தைகள் அவாவி நிற்கின்றார்கள்.

01. அந்தஸ்துக்கான தேவை:-
பிறரது கணிப்பு, கவனம், அங்கீகாரம் முதலிய தேவைகள்.
02. பாதுகாப்புத் தேவைகள்:-
உள, உடல், சூழல் பாதுகாப்புத் தேவை.

03. அன்பு மற்றும் அரவணைப்பை எதிர்நோக்கும் தேவை:-
பெற்றோர், ஆசிரியர், சகபாடிகளிடம் எதிர்பார்த்தல்.

04. சுயாதீனத்தை அவாவும் தேவை:-
தமது ஆற்றல்களை சுதந்திரமாக வெளியிடவும், சுயாதீனமாக தொழிற்படவும் விரும்புதல்.

05. திறன் கதவுகளை வெளியிடும் தேவை:-
தமது ஆற்றலால் நண்பர்களையும், சூழலையும் வசப்படுத்தும் சிறார் மகிழ்ச்சி அடைதல்.

குழந்தைகளின் இத் தேவைகளை பாலர் பள்ளி ஆசிரியர் அறிந்திருப்பதுடன், நிறைவேற்ற வழிவகை செய்து கொடுப்பதுடன் ஊக்கப்படுத்தலும் வேண்டும்.

பாலர் பாடசாலைகளில் நிகழும் கற்பித்தல் நுட்பவியலில் அசைவுக் கல்வி பற்றி கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. பாலர்களால் மேற்கொள்ளப்படும் அசைவுகள் மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

01. செயல் நெறிப்பட்ட அசைவுகள்:-
ஏறுதல், தள்ளுதல், தாவுதல், சமநிலைப்படுத்தல் முதலியன.

02. உடற்பலத்தையும் வேகத்தையும் ஒன்றிணைத்து செயற்படுத்தும் அசைவுகள்:-
ஓடுதல், பாய்தல், நீந்துதல், கெந்துதல் முதலியன.

03. ஒத்திசைவுடன் இணைந்த அசைவுகள்:-
தாளத்தோடும் இசையோடும் இணைந்த அசைவுகள்.

அசைவுக் கல்வியுடன் இணைந்ததாகவே ஒரு பிள்ளையின் பேச்சுத் திறன், எழுத்துத் திறன், ஆற்றுகைத் திறன், நுண்மதித் திறன், ஆக்கத் திறன் முதலியவை வளர்ச்சியடைவதால் பெற்றோரும், ஆசிரியர்களும் இத் துறையிலே கூடிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது. மேலும் தமது நடத்தைகளை தாமே நேர்முகமாக

நெறிப்படுத்தக் கூடிய ஆற்றல்களை வளர்க்கவும், மனவெழுச்சிக் கட்டுப் பாடுகளுக்கும் துணை புரிகின்றது. அழகியற் செயற்பாடு அனைத்தும் அசைவுகளால் பிறப்பிக்கப்படுகின்றன. அசைவுகள் வாயிலாக ஆற்றல்கள் வெளிப்படுத்தப்படுகின்றதை நெறிப் படுத்துகின்றன. சமூக இசைவாக்கம் போன்ற கல்வி மாற்றங்களை வளம் படுத்த அசைவுக் கல்வியே பெரிதும் உதவுகின்றன. பாலர் பள்ளி ஆசிரி யர்கள் குழந்தைகளுக்கு அசைவுக் கல்வியை உரிய முறையில் வழங்கு வதன் வாயிலாக மேற்படி திறன்களை விருத்தி செய்ய முடியும்.

விளையாட்டுக்களின் வாயி லாக குழந்தைகள் அறவொழுக்கங் கள், கட்டுப்பாடுகள், உணர்ச்சி வெளிப்பாட்டுக்குரிய சொற்கள் முத லியவற்றை கற்றுக் கொள்வதுடன் தற்காட்சி, சரியான நடத்தை உருவாக் கம் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு விளையாட்டுக்கள் துணை புரிகின்றன. எனவே பாலர் பள்ளிகளில் விளை யாட்டு முற்றம் அமைப்பதுடன் பாது காப்புடனும், ஒழுங்குடனும், கட்டுப் பாட்டுடனும் விளையாடுவதற்கு ஆசிரி யர்கள் உதவுதல் வேண்டும்.

பாலர் கல்வியில் கற்பித்தல் நுட்பவியலின் வலிமை மிக்க சாதன மாகக் கதைகள் விளங்குகின்றன. குழந்தைக்குரிய கதைகள் சிறியன வாகவும், எளிதானவையாகவும், சிந் திக்கத் தூண்டுவனவாகவும், ஒழுக்க மும் இருத்தல் வேண்டும். கதை அசைவுகளினூடாக குழந்தைகள் உள அசைவுகளை அனுபவிக் கின்றனர். பாத்திரங்களுடன் கூடிய கற்பனையால் இன்பத்தையும் சீராக்கத்தையும் பெறுகின்றனர். பாட்டியின் கதைகள், நாடோடிக் கதைகள், புராணக் கதைகள் பல்வேறு மனித விழுமியங்களை கையளிக்கின்றன. நவீன விஞ்ஞானத் தொழில்நுட்பவியல் எண்ணக் கருக் களை அறிமுகம் செய்யக் கூடிய கதைகளும் குழந்தைகளின் உள மேம்பாட்டுக்கு அடிப்படையாக அமை கின்றன. பாலர் பாடசாலை ஆசிரி யர்கள் கதை கூறலில் கூடிய கவனமும் அக்கறையும் செலுத்துதல் வேண்டும்.

பாலர் கல்வியில் கற்பித்தல் நுட்பவியலில் பேச்சுத் திறன் சிறப்பிடம் பெறுகின்றது. குழந்தைகளிடம் பேச்சுத் திறனைத் திருத்தவும், மீள வடிவ மைக்கவும், வளர்க்கவும் வேண்டி யுள்ளன. குழந்தைகளின் குடும்பப் பின்புலம், சொற்களஞ்சிய விருத் திக்குரிய கவிநிலை முதலியனவும் பேச்சு மொழிக் கோலங்களிலே செல் வாக்குச் செலுத்துகின்றது. பாலர் பள்ளிக் கூடங்களில் பேச்சு மேம்படுத்த பின்வரும் செயற்பாடுகளில் ஆசிரியர் ஈடுபட வேண்டும்.

01. காட்சிக் கவர்ச்சிகளுடன் சொற் களை அறிமுகப்படுத்தல்.

02. சொற்களையும், பொருட்களை யும் பயன்படுத்துதல்.

03. சொற்களையும் செயற்பாடுகளை யும் ஒன்றிணைத்தல்.

04. இசைக்கவர்ச்சியை ஊட்டுதல், கேட்கும் திறனை வளர்த்தல்.

05. சுய வெளிப்பாடுகளை தூண்டுவதுடன் உச்சரிப்பு சோம்பலை தவிர்த்தல்.

06. சொற்களையும் வசனங்களையும் முழுநிறைவாக பேச ஊக்கிவித்தல்.

ஆசிரியர் மொழிக் கற்பித்தல் நுட்பவியலில் ஈடுபடும் பொழுது பின்வரும் செயற்பாடுகளில் கவனம் செலுத்த வேண்டும்.

01. மாணவர்கள் தொடர்பாடலில் ஈடுபடும் பொழுது அவர்களிடத்தே காணப்படும் மனவெழுச்சித் தடைகளையும் இடர்களையும் நீக்குதல் வேண்டும்.

02. மொழி விதிகளை குழந்தைகளுக்கு எளிதாகவும் செப்பமாகவும் பதிய வைத்தல் வேண்டும்.

03. சரியான திருத்தமான மொழித் துலங்கல்களுக்கு வெகுமதி கொடுத்து மீளவலியுறுத்தல் வேண்டும்.

பாலர் கல்வியில் நினைவாற்றலை மேம்படுத்த வேண்டும். குழந்தைகளின் நினைவாற்றலை வளர்ப்பதற்குரிய நுட்பங்களால் குழந்தைகளை ஊக்கப்படுத்தல், பின்னூட்டல் வழங்குதல், கற்கும் பொருளில் அக்கறை உண்டாக்குதல் கற்கும் விடயங்களில் அவர்களின் உள ஆற்றல்களுக்கேற்ப ஒழுங்குபடுத்திக் கொடுத்தல், பொருத்தமான வெகுமதிகளை வழங்குதல் ஆகிய நுட்பங்கள் மூலம் ஆசிரியர் நினைவாற்றலை வளர்த்தெடுக்க வேண்டும்.

பாலர் பள்ளிகளில் ஆசிரியர்களின் பணி வெறுமனே கற்பித்தலோடு நின்றுவிடுவதில்லை. குழந்தைகளை ஆளுமையுள்ள மனிதர்களாக உருவாக்கும் பெரும் பணியும் பாலர் கல்வி ஆசிரியர்கள் கைகளில் தான் உள்ளது. அதற்கு குழந்தை உளவியல் பற்றிய அறிவைப் பெற்றிருப்பதுடன் குழந்தைகளின் குடும்பப் பின்னணி, குழந்தை வாழும் சூழற் பின்னணியையும் அறிந்திருத்தல் வேண்டும். குழந்தைகளின் உள வளர்ச்சி, அறிகை வளர்ச்சி, பேச்சுத் திறன், தொடர்பாடற்றிறன், மொழித் திறன் ஆகியவற்றில் விருத்தியை ஏற்படுத்தக் கூடிய கற்பித்தல் நுட்பங்களையும் அறிந்து விளங்கிப் பிரயோகித்தல் இன்றியமையாத தேவையாக உள்ளது.

அடிக்குறிப்பு:

ஜெயராசா - சபா
குழந்தை உளவியலும் கல்வியும் - 2005
பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு - 13.

பிள்ளைப் பருவக் கல்வியில் – ஆடலும் பாடலும்

த. ஸ்ரீஸ்கந்தராஜா

கலையை இரசிக்காத மனிதர் களே இல்லை. அதிலும் குழந்தைகள் என்றால் சொல்லவும் வேண்டுமா. குழந்தை தன் தாயின் தாலாட்டுப் பாட லைச் செவிமடுத்து அந்த இசையில் தூக்கத்துக்குச் சென்றுவிடுகிறது. கருத் தை விளங்காத நிலையிலும் தாலா ட்டின் ஓசை நயம் தூங்க வைக்கிறது. அதிர்வுகள் நரம்பு மண்டலத்தை ஊட றுத்து தாக்கி உணர்வுகளை வெளிப் படுத்துகிறது. சிலவகை சுர அதிர்வுகள் மகிழ்ச்சியையும் குதூகலத்தையும் உண்டாக்க வல்லன. சிலவகைச் சுர அதிர்வுகள் சோகத்தையும் கண்ணீரை யும் வரவழைக்கும். இன்னும் பல வகைப்பட்ட சுரங்களுண்டு. நவரசங் களும் பிறக்கும். நவரசத்தை விடக் கானரசம் என்று ஒன்று உண்டு. கான ரசத்தினூடாக கற்றல் கற்பித்தல் நடை பெறுவது தொன்று தொட்டு உள்ள ஒன்றாகும்.

விளையாட்டு என்றால் குழந்தை களுக்கு மட்டில்லாத பிரியம் இயற்கை யின் கொடை உடலை நீட்டி அசைத்து வளர்ச்சியைத் தூண்டும் வரப்பிரசாதம் இந்த விளையாட்டையும் கற்றலில் இணைத்து கற்பிக்க வேண்டும். பிள்ளை விளையாட வேண்டும். ஆசிரியர் விளை யாட்டில் இசையுடன் பாடலும் கலக்கப் பட வேண்டும். இவ்வாறான திட்டமிட்ட விளையாட்டினூடாக பிள்ளை விளை யாடுகிறது. என்று எண்ணுகிறது, நாம் கற்பிக்கிறோம் கற்றல் நடைபெறுகிறது என எண்ணுகிறோம்.

விளையாட்டும் வினோதச் செய ல்களும் பெருங்பாங்கு அமைந்த செயற் பாடுகளுடனான குறைந்தளவு எழுத்து வேலையுடனே முன்பள்ளி பள்ளிப் பரு வம் ஆரம்பிக்க வேண்டும் என்று புதிய கல்விச் சீர்திருத்தம் கூறுகிறது.

கானரசத்தினூடாக குழந்தை களுக்கு கலாச்சாரம், ஒழுக்கம், பண் பாடு போன்றவற்றையும் கல்விசார் விட யங்களையும் கற்பிக்க வழி செய்யலா ம். மிகப் பெரிய தத்துவங்களைக் கான ரசத்தினூடாக பிள்ளையின் பிஞ்சு மன தில் வெறும் சொற் படிவுகளாக படியச் செய்து விடலாம். இவ்வாறாகப் படிந்த வற்றுக்கான விளக்கங்கள் பிற்கால வாழ்வில் எமது வாழ்வை வளம்படுத்த உதவும். 'பீரம் பேணி பாரம் தாங்கும்' என்று அறநெறி விளக்கமின்றியே மன னஞ் செய்கிறோம். அதன் பொருள் பிற்காலத்தில் தெரிந்து கொள்கிறோம். அதாவது தாய்ப்பாலை அதிகமாக உண்டவன் அதிகளவு பாரம் சுமப்பா னென்பதேயாம்.

அழவள்ளியப்பாவின் பாடலொ ன்று - எல்லோரும் பாடி மகிழ்வது பின்வரும் பாடல்,

பச்சைக் கிளியே வா வா வா

பாலுஞ் சோறும் உண்ணவா

கொச்சி மஞ்சள் பூசவா - என்று பாடி மகிழ்கின்றோம். கொச்சி மஞ்சள் என்பது என்னவென்று பிற்காலத்தில் சிந்திக்கத் தோன்றுகிறது. அழவள்ளி யப்பா இந்தியா - இந்தியாவில் கொச் சின் நகரம் இந்நகரம் தான் மஞ்சளி ற்குப் பெயர்போன நகரமென்ற தகவ லைத் தெரிந்து கொள்கிறோம்.

குழந்தைக்கு அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, மாமா, மாமி போன்றவர் களைப் பற்றிய பல தகவல்களை தன் னகத்தே கொண்ட குழந்தைப் பாடலொ ன்று,

ஆனா சொல்லித் தந்தார் எங்கள்
அருமையான அம்மா
பேனா பென்சில் புத்தகங்கள்
வாங்கித் தந்தார் அப்பா
உழைக்க வேணும் எறும்பு போல
தாத்தா நீதி சொன்னார்
பட்டம் பலூன் வாங்கித் தந்தார்
எங்கள் பாலு மாமா
விட்டேனோ பார் இந்தா மிட்டாய்
என்று தந்தார் மாமி

அருமையான எத்தனையோ தகவல்களைக் கொண்ட திஸ்ர நடை யிலுள்ள இப்பாடலை குழந்தைகள் மனதில் பசுமரத்தாணிபோல் ஏற்றி விட்டால் ஆலமரம் போன்ற விருட்சமான சிந்தனைகளைத் தோற்றுவிக்கும். பாட ல்கள் இசைக்கப்படும் போது ஒதுங்கி இருக்கும் குழந்தைகளும் உள்வாங்கப் பட்டு அப்பாடல்களை இசைக்கும் நிலை தோன்றும் பேச்சு வெளிப்படும். சிறுவர் அரங்குகளில் அரங்கச் செயற் பாடுகளில் தம்மை மறந்து இரசித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள் பாடல் களை முணுமுணுப்பதும் பாடிப்பாடி மேடையேறி அங்க அசைவுகளுடன் ஆடிப்பாடி மகிழ்வதும் இன்றைக்கால நிகழ்வுகளாகும்.

சிறுவர் அரங்குகளில் சிறுவர் ஆடிப்பாடி மகிழும் நவீன உத்திகள் கையாளப்படுகின்றது. சிறுவர்கள் ஒரு கட்டுப்பாடான உடல் அசைவுகளினின் றும் மேம்பட்டு சுயமான அசைவுகளுட ன் பாடி ஆடி மகிழ சிறுவர் அரங்குகள் வழிவகுக்கின்றன.

இசையுடன் அமைந்த பாடல்க ள் ஊனிரை உருக்கி உட்புக வல்லன ஊனிரை உருக்கி உள்ளத்தில் குடி கொள்ளும் பாடல்கள் மூலம் பாலர் கல்வியை மேம்படுத்துவோமாக.

முன்பள்ளிக் கல்வியில் விழுமியக் கல்வியின் அவசியம்

செல்வி மாலினி நடராஜா
B A. Dip. in. Ed.
ஆசிரியை
யா/ கோண்டாவில் இராமகிருஷ்ண ம. வி.

ஒரு நாட்டினுடைய வளமான எதிர்காலம் குழந்தைகளுக்கு, அளிக்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது. கல்வியானது அறிவுத் தேடலை மட்டும் மையமாகக் கொள்ளாது சிறந்த விழுமியங்களைக் குழந்தைகள் மத்தியிலே வளர்ப்பதாக அமைய வேண்டும். இன்றைய புதிய கல்வி சீர்திருத்த அமைப்பிலே மனித விழுமியங்கள் பற்றிய சிந்தனைகள் பல்வேறு மட்டத்திலும் பல அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்று உலக நாடுகளின் கல்விக் கொள்கையை ஆராய்கின்ற போது பல நாடுகளிலே இந்த விழுமியக் கல்வியின் தேவை உணரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விழுமியம் பற்றிய சிந்தனைகளை மாணவனுக்குக் குழந்தைப் பருவத்தில் இருந்தே வழங்குதல் சிறப்பான விடயமாகும். பாடசாலைகளினூடாகத்தான் விழுமியங்களைப் புகட்டுதல் வேண்டும் என்ற சிந்தனையில் இருந்து விலகி அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தி விழுமியங்களை கற்பிக்கலாம். குழந்தைகளிடத்தில் தூய செயல், தூய சிந்தனை, தூய சொற்கள் போன்றவைகளை ஏற்படுத்த வேண்டும். இவற்றுள்ளே எல்லா விழுமியங்களும் பொதுவாக அடங்கி விடுகின்றன. மனித வாழ்வின் சிறப்பிற்கும் உயர்ச்சிக்கும் உறுதுணையாக அமையும் மனித விழுமியங்கள் பற்றிய அறிவும் விளக்கமும் குழந்தைப் பருவத்தில் இருந்து அவர்களுக்கு ஊட்டும் வகையில் கலைத்திட்டம் அமைய வேண்டும்.

விவேகானந்தர், ஔவையார், காந்தி, பாரதியார், கௌதமபுத்தர், இராமகிருஷ்ண பரமஹம்சர், இயேசுபிரான், நபிகள் நாயகம் போன்றவர்களால் போதிக்கப்பட்ட விழுமியக் கருத்துக்களை அவர்களுக்கு விளக்கும் வகையிலேயே பாட்டுகள் மூலமோ, நாடகங்கள் மூலமோ, கணித மூலமோ போதிக்கலாம். அன்பு என்ற உயர் விழுமியம் பற்றி அவர்கள் அறியும் வகையில் ஆசிரியர் செயற்பாடு அமைய வேண்டும். குழந்தைகளிடத்தில் அளவற்ற அன்புடையவராக ஆசிரியர் விளங்க வேண்டும். ஆசிரியரைப் பின் பற்றி மாணவர்கள் வழி நடப்பவராதலால் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதாரண புருஷர்களாக விளங்க வேண்டும்.

மனிதன் ஒருவன் சிறப்புமிக்க வனாக வாழ்வதற்கு அவனிடம் உயர்ந்த பண்புகள் இருப்பதும் ஒரு காரணமாகின்றது. ஆகவே சிறுவயதில் இருந்தே சிறந்த பழக்கவழக்கங்களைப் போதிப்பதற்கு இத்தகைய முன்பள்ளிக் கூடங்கள் பெரிதும் உதவுகின்றன. இதனை அடியொற்றி மனித வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது ஆரம்பக் கல்வி. சிறப்பாக அமைகின்ற போது பல விடயங்கள் குழந்தைகள் மனதில் பசுமரத்தாணி போல இலகுவில் பதிந்து விடுகின்றன. மாணவர்கள் மத்தியில் காணப்படும் அமைதியின்மை பொறுப்பற்ற தன்மை, கட்டுப்பாடின்மை, ஒழுகக் குறைவு போன்றவைகள் சிறந்த கல்வி போதிக்கப்படுவதன் மூலம் குறைக்கப்பட்டு பல நற்குணங்கள் வளர வாய்ப்பு ஏற்படுகின்றது. அவ வகையில் விழுமியங்கள் பற்றிய அறிவு, மனித மேம்பாட்டுக் கல்வி போன்றன அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

இன்றைய சிறுவர்களே எதிர் காலத்தின் பூரண மனிதர்கள் என்ற நிலையில் சிறந்த மனப்பாங்குகளை விழுமியங்களை இளமைப்பருவம் தொட்டே வளர்ப்பது ஆசிரியர்களின் உயர்ந்த கடமையுமாகும். சிறந்த கல்வித் திட்டம் ஒன்று நாட்டில் அமுல்ப்படுத்தப்பட்டால் நல்லொழுக்க முள்ள இளைஞர்கள் எதிர்காலத்தில் உருவாகுவார்கள். ஆகவே சிறுவயதி லிருந்து சிறந்த விழுமியங்கள் நிறை ந்தவர்களாகக் குழந்தைகள் வழிப படுத்தப்பட்டால் பிற்காலத்தில் நற் பிரசையாகும் வாய்ப்பை அவர்கள் பெறுகின்றார்கள். இன்று சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டம் பலவிதமான சிறந்த மாற்றங்களை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவது வரவேற்கத்தக்கதாகும். குழந்தை வயதி லேயே விழுமியக் கல்வியைக் கற்பிப்ப தற்கு சிறந்த ஊடகமாகக் கதைகள் அமைகின்றன. அன்பு, அறம், கருணை, இரக்கம், பண்பாடு போன்ற உயர்ந்த விழுமியங்களை உள்ளடக்கிய விதத் தில் பாடங்கள் போதிக்கப்படும் போது குழந்தைகளின் செயற்பாடுகளும் நல்ல திசையிலேயே திருப்பப்படுகின்றன. இன்று இளைஞர்கள் மத்தியிலே அன்பு, சகிப்புணர்வு, மனஉறுதி போன்ற பண்புகளைக் காண்பது அரிதாகவே உள்ளது. மக்கள் மத்தியில் விளங்கும் பண்புகளே மேலோங்குகின்றன. கல்வி யின் மூலம் ஒருவனிடம் சிறந்த பணிவு த்தன்மை ஏற்பட வேண்டும். இதனை அடியொற்றி சுவாமி விவேகானந்தரும் முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக்கொள் அப்போது எஜமானாகும் தகுதி தானாகவே உனக்கு வந்து சேரும் என்கின்றார். ஒவ்வொருவனும் அறிவுவழி நின்று ஒழுக்கத்தையும் ஒப் புரவையும் பேணும் வகையில் கல்வி செயலாற்ற வேண்டும்.

விளையாட்டுக்கள் மூலமும் குழந்தைகள் சிறந்த உடற்பலம் உள்ளவர்களாகின்றனர். சமூக அனு பவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் விளையாட்டுக்கள் ஏற்படுத்த ப்படவேண்டும். விளையாட்டின் போது கூட்டுறவு பொறுப்புக்களைப் பகிர்தல், சமத்துவம், சகோதரத்துவம், விட்டுக்

கொடுக்கும் மனப்பாங்கு, நன்றி சொல்லும் தன்மை போன்ற உயர் விழுமியங்கள் குழந்தைகள் மத்தியிலே வளர்க்கப்படுகின்றன. விளையாட்டுப் பொருட்களாக மணல், தண்ணீர், கடதாசி, துணி, பஞ்சு, பிளாஸ்ரிக் பொருட்கள் போன்றவைகளைப் பயன்படுத்தலாம். விளையாட்டின் மூலம் உடல் வலு அதிகரிக்கும் அதேவேளை உள வலுவையும் மாணவர்கள் பெறுகின்றார்கள். சிறந்த தொரு பொழுது போக்காகவும் விளையாட்டுக்கள் அமைந்து விடுகின்றன.

கல்வி ஒருவனைச் சிறந்த சமூக இயல்பினாக்கும் வகையில் செயற்பட வேண்டும். ஒரு குழந்தை தன் குடும்பத்திலேயே முதலில் சமூக இயல்பினனாகின்றது. தன் பெற்றோர், அயலவர், சமூகம் என்ற வகையில் சமூகமயப்படுத்தப்பட்டு பின் பள்ளிக் கூடங்களை நாடிவரும் வேளையில் தன் போன்ற குழந்தைகளோடு பழகும் வகையில் சிறப்பான தன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றது. இந்த நிலையில் மற்ற வர்களைப் புரிந்து அவர்களோடு சேர்ந்து வாழும் மனப்பாங்கைப் பெறுகின்றது. இன்று மனித வாழ்க்கையிலே ஒரு விரிசல் ஏற்படும் நிலையில் இவ்வாறான சமூக உறவுகளை ஏற்படுத்தும் வகையில் சிறந்த விழுமியங்களைப் பெற்றுக் குழந்தை செயற்படும் வகையில் அவர்களுக்கான பாட ஏற்பாடுகள் அமையவேண்டும். இச்சிந்தனைகள் யாவும் குழந்தைப் பருவத்தில் ஏற்படுத்தப்பட வேண்டுமானால் இத்தகைய முன்பள்ளிக் கல்வி நிலையங்கள் இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக அமைய வேண்டும்.

எனவே முன்பள்ளிக் கூடங்களில் இவ்வகையான பாட ஏற்பாடுகள் மூலம் பல்வகையான விழுமியங்கள் குழந்தைகள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள் போன்றோர் இவ்வகையான விழுமியக் கல்வியின் தேவையை உணர்ந்து எதிர்காலத்திற்கேற்ற சிறந்த பண்பான பிரசைகளை உருவாக்குவதில் அக்கறையுடையவர்களாகச் செயற்பட வேண்டும். மனிதன் ஒருவன் தன்னிடம் குடிகொண்டுள்ள தீய அம்சங்களைத் தவிர்த்து மானிடப் பண்பைப் பெற்று வாழ்வதற்கு விழுமியக் கல்வியின் அவசியம் உணரப்பட வேண்டும்.

சிறுவர் உரிமைகள்

செல்வி நா. முத்துக்குமாரு
(ஓய்வு பெற்ற உப அதிபர்)
கலைமாணி
பட்டப்பின் கல்வி.

ஐக்கிய நாடுகள் சபை சர்வ தேச மனித உரிமைகள் பிரகடனத்தில் சிறுவர் உரிமைகள் பற்றிப் பிரகடனம் செய்துள்ளது. அதாவது சிறுவர் சிறப் பான பராமரிப்பும் ஆதரவும் பெற உரி மையுடையர் என்பதை எடுத்துக் கூறி, ஒரு சமுதாயம் சிறுவர் வளர்ச்சிக்கும் நல்வாழ்வுக்கும் ஏற்ற சூழலாக அமை வதால் அச் சமுதாயம் சிறுவருக்கு பாதுகாப்பையும் ஒத்தாசையையும் வழங்க வேண்டும் என்பதை வலியுறு த்துகின்றது. இன்னும் வளர்முக நாடு களில் காணப்படும் சிறுவர் மிகமிகக் கஷ்டநிலையில் வாழ்வதைக் கருத்திற் கொண்டு, ஒவ்வொரு நாட்டிலும் குறிப் பாக வளர்முக நாடுகளில் சிறுவரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சர்வ தேச ஒத்துழைப்புத் தேவை என்பதை வலியுறுத்துகிறது.

இனிச் சிறுவர் எனக் கருதப் படுபவர் யார்? என நோக்குவோம். பதி னெட்டு வயதுக்குக் குறைந்த ஒவ் வொரு பிரஜையும் சிறுவராகக் கணிக் கப்படுவர். ஒரு நாட்டில் வசிக்கும் சிறு வர், அவர்தம் பெற்றோர், பாதுகாவ லரின் சாதி, நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது தேசியம், இனம், சமூகம், பூர்வீகம், ஆதனம், ஊனம், பிறப்பு அல்லது அந்தஸ்து போன்ற எந்தப் பாகுபாடுமின்றி பாதுகாக்கப்பட வேண்டும் எனச் சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம் கூறுகின்றது.

சிறுவர் தம் உடல், உள வளர் ச்சிக்கும், விருத்திக்கும் அடிப்படை யாகக் கொண்டுள்ள தேவைகளே அவ ர்களது உரிமைகளாக அமைகின்றன. குழந்தையின் ஆரம்ப சமூகச் சூழல் குடும்பமேயாகும். குழந்தை பெற்றோ ரின் பராமரிப்பில் வளரும் போது பிள் ளை அனுபவிக்கும் பாசம் அல்லது பய உணர்வு, நம்பிக்கை அல்லது பாதுகாப்பற்ற உணர்வு என்பன பிள் ளையின் உலகு பற்றிய அபிப்பிராயத் தைப் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே பெற்றோர் தமது குழந்தையின் உடல், உள வளர்ச்சியில் அக்கறை யுள்ளவராக இருத்தல் அவசியமும் அத்தியாவசியமுமாகும். குழந்தையின் உடல், உள வளர்ச்சிக்கு சுத்தமான போசாக்கு நிறைந்த உணவு, சுத்த மான உடை, சுகாதாரப் பராமரிப்பு என்பன முக்கிய அடிப்படைத் தேவை களாகும். அதே போல பெற்றோரும், சார்ந்தோரதும் அன்பு, பாசம், கருணை போன்ற குணங்கள் குழந்தையின் உள் ளத்தைப் பூரணப்படுத்துவன.

இத் தேவைகளை ஒவ்வொரு குழந்தையும் பூரணமாகப் பெறுவதற்கு உரிமையுடையது. அதற்கு இன, மத, மொழி, பொருளாதார வேறுபாடுகள் இருக்க முடியாது. இவற்றை நிறை வேற்றும் கடமை முதலில் பெற்றோருக் குரியது. பெற்றோர் இல்லாதவிடத்து பாதுகாவலருக்குடையதாகும். பெற்றோ ருக்கு அல்லது பாதுகாவலருக்குத் தேவையான வசதிகளையும் தேவை களையும் நிறைவேற்றும் பொறுப்பு ஒவ் வொரு அரசையும் சார்ந்தது எனச் சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனம் கூறுகின்றது.

ஒரு குழந்தை தனது குடும்பச் சூழலை இழக்கும் பட்சத்தில் அக் குழந்தைக்கு ஏற்ற பராமரிப்பு நிலையத்தைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு அந் நாட்டு அரசைச் சேர்ந்ததாகும். அப் பிள்ளையைப் பராமரிப்பு நிலையத்தில் சேர்ப்பதாயினும், வேறொரு நாட்டில் சுவீகாரத்திற்குக் கொடுப்பதாயினும் அக் குழந்தையின் பாதுகாப்புக்கு அரசே பொறுப்புடையதாகும்.

உடல், உள ஊனமுள்ள பிள்ளைகள் விசேட கவனத்திற் குரியவராவர். இவர்களுக்குரிய தேவைகளான கல்வி, சுகாதாரம், புனர்வாழ்வு சேவைகள் யாவும் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

அடுத்து கல்வி பயிலும் உரிமை சிறுவருக்குரிய முக்கிய உரிமையாகும். இவர்களது ஆரம்பக் கல்வி கட்டாயக் கல்வியாகவும், இலவசக்கல்வியாகவும் இருத்தல் அவசியம். இடைநிலைக்கல்வி வெவ் வேறு வகையாக அமையலாம். எல் லோருக்கும் ஆற்றல் அடிப்படையில் உயர்கல்வி கிடைக்க வேண்டும். அதே வேளை தொழில்சார் தகவல்களும் வழி காட்டல்களும் கிடைக்க வேண்டும். பாடசாலையின் ஒழுக்க விதிகள் சிறுவர் உரிமைகளையும் கௌரவத்தையும் மதிப்பதாக அமைய வேண்டும். கல்வியானது பிள்ளையின் ஆளுமை, திறமை, உடல், உள ஆற்றல்களை முழுமையாக விருத்தி செய்வதாக அமைய வேண்டும். பருவமடைந்ததும் சுதந்திரமான சமுதாயத்தில் ஊக்கத்துடன் வாழ்வதற்கும், பெற்றோரைக் கனம் பண்ணுவதற்கும், தன் சொந்த கலாசாரத் தனித்துவம் மொழி விழுமியங்கள் ஆகியவற்றையும், பிறரின் கலாசாரப் பின்னணி விழுமியங்கள் ஆகியவற்றை மதிப்பதற்கும் கல்வி உதவ வேண்டுமெனக் கல்வியின் உள் நோக்கம் பற்றி சிறுவர் உரிமைகள் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது.

வளர்ந்து வந்த பிள்ளைக்கு தனது கருத்துக்களைத் தெரிவிக்கும் உரிமை உண்டு.

1. அதாவது தனது எண்ணங்களைத் தடையின்றி வெளியிடவும், தகவல் பெறவும் உரிமை உடையவராவார். இன்னும் பெற்றோர் வழிகாட்டலுக் கமைய சிந்தனைச் சுதந்திரம், மனச்சான்றுச் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றையும் பெறும் உரித்துடையர்.

2. இன்னும் சங்கங்கள் அமைக்கவும், சங்கங்களில் அங்கத்துவம் பெறவும் உரிமை உடையர்.

சிறுவருக்கு பல்வேறு முனைகளிலிருந்தும் தகவல்களும் தகவற் சாதனங்களும் கிடைக்க வேண்டும். பிள்ளையின் சமூக, கலாசார நலன் சார்ந்த தகவல்களைப் பரப்பும்படி வெகுசனத் தொடர்பு ஊடகங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அத்துடன் பாதகமான தகவற் சாதனங்களிலிருந்து சிறுவரைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட சிறுவர் உரிமைகள் மறுக்கப்படுதல், புறக்கணிக்கப்படுதல், இம்சைப்படுத்தல், சுரண்டல் போன்ற சந்தர்ப்பங்கள் சிறுவர் உரிமைகளில் துஷ்பிரயோகமாகக் கருதப்படும்.

பிள்ளை தொழில் புரிவதற்கு குறைந்த பட்ச வயதெல்லை வரையறுக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யும் தொழில் பிள்ளையின் ஆரோக்கியம், கல்வி அல்லது மேம்பாட்டுக்கு ஊறு விளைவிக்காததாக அமைய வேண்டும்.

நமது நாட்டில் பெற்றோரில் ஒரு பகுதியினர் தமது வறுமை காரணமாக தமது பிள்ளைகளைச் சிறு கடைகள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களுக்கும் வீட்டுப் பணியாளர்களாகவும் வேலைக்கு அனுப்பி வருமானம் பெறுகிறார்கள். இது பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு இழைக்கும் துஷ்பிரயோகமாகும். சிறுவர் பானங்கள், சிற்றுண்டிகள், பத்திரிகைகள் என்பவற்றைக் கொண்டு திரிந்து விற்கிறார்கள். பிரேசில் நாட்டில் சிறுவர் வாழைத் தோட்டங்களில் வேலை செய்கிறார்கள். கொலம்பியாவில் செங்கற்களைச் சுமக்கிறார்கள். மொரொக்கோவில் ஓடுகளுக்குக் களி உடைக்கிறார்கள். எகிப்தில் கந்தைத் துணிகள் மற்றும் கழிவுகளைச் சேகரிக்கிறார்கள். சூடானில் பஞ்சு அறுவடை செய்கிறார்கள்.

இதைவிடப் போதைப் பொருள் உபயோகித்தல், தயாரித்தல், விநியோகித்தல் ஆகியவற்றிலும் சிறுவர் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இன்னும் விபசாரம், ஆபாச நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படல், பாலியல் சார்ந்த சுரண்டல்களும் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்றன.

பிள்ளைகளைக் கடத்தல், விற்பனை செய்தல், பரிவர்த்தனை செய்தல் என்பனவும் ஆங்காங்கு காணப்படும் சிறுவர் துஷ்பிரயோகங்களாகும்.

இன்னும் பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களை ஆயுதக்குழுக்களில் சேர்த்துக் கொள்ளல், சண்டையில் ஈடுபடுத்தல் என்பனவும் துஷ்பிரயோகமாகும்.

இவ்வாறான துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை ஒவ்வொரு சிறுவருக்கும் உண்டு. அது மறுக்க முடியாது. ஆனால் உலக நாடுகளில் அதுவும் வளர்முக நாடுகளில் இவை மறுக்கப்பட்டே வருகின்றன. உதாரணமாக தொழில் செய்யும் சிறுவரின் நலன்கள் பேணும் சட்ட திட்டங்கள் ஏட்டில் இருக்கின்ற போதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் சீர்கேடுகள் இருக்கின்றன.

சிறுவர் இவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் போது பல்வேறு உளப் பாதிப்புகளுக்கும் தொடர்ச்சியான நடத்தைக் கோல மாற்றங்களுக்கும் உள்ளாகிறார்கள். அதை ஒவ்வொரு பெற்றோரும், பாதுகாவலரும், ஆசிரியரும் ஏனையோரும் உணர்ந்து சிறுவருடைய தேவைகள் குறித்தும், துஷ்பிரயோகங்கள் குறித்தும் விழிப்பாக இருக்கவேண்டும். சிறுவர் உரிமை பற்றி யாவருக்கும் நல்ல தெளிவு இருந்தால், சிறுவர் உரிமைகள் முறையாக வழங்கப்பட்டால் சிறுவரின் எதிர்கால வாழ்க்கை சிறப்படையும். எமது சமுதாயம் முன்னேற்றமடையும்.

பெற்றோரே! பாதுகாவலரே!...

நம் நாட்டின் செல்வங்கள் சிறுவரே. இவர்களே நம் நாட்டின் எதிர் காலச் சிற்பிகள். இவர்களின் எதிர் காலம் வளமாக அமைய இவர்கள் உரிமைகள் பேணப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும்.

எனவே உங்கள் சிறுவரின் கருத்துக்களைக் கவனத்திற் கொள்ளுங்கள். கருத்துக்கள் வெளிப்படுத்தப்படும் சமயங்களில் அவர்களை ஊக்கப்படுத்துங்கள் - உற்சாகப்படுத்துங்கள். நலனுக்குத் தகுந்த கருத்துக்களுக்கு மதிப்பளித்து செயற்படுங்கள். நாளைய உலகம் நலமாக மிளிர இன்றே செயற்படத் தொடங்குங்கள்.

முன்பள்ளி பெற்றோர் பொறுப்புக்களும் கடமைகளும்

சு. பாக்கியராஜா
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.

முன்பள்ளி என்பது மூன்று வயது தொடக்கம் ஐந்து வயது வரை யுள்ள பிள்ளைகளைக் கொண்ட ஓர் நிறுவனமாகும். இந்த நிறுவன தலை மைப் பொறுப்பு பிரதம முன்பள்ளி ஆசிரியையிடம் பெற்றோரால் கையளி க்கப்பட்டுள்ளது. உதவி ஆசிரியைகள் இவரின் தலைமையில் செயற்படு கின்றனர் அல்லது பிரதம ஆசிரியை வராத போது பதிற்கடமை ஆற்றுகின்ற னர். வருட ஆரம்பத்தில் பெற்றோர் கூட்டம் வைக்கப்பட்டு முன்பள்ளிக்கு ஓர் நிர்வாகம் தெரிவு செய்யப்படும். இதில் செயலாளராக ஆசிரியை செயற்படுவார். ஏனையோர் பெற்றோரி லிருந்து தெரிவு செய்யப்படுவர். இந்த நிர்வாகத்தின் கீழ் முன்பள்ளியின் ஒரு வருட செயற்பாடு அமைகிறது.

முன்பள்ளியை பொறுத்தவரை மாணவர்களின் முன்னேற்றத்தில் பெற்றோர், ஆசிரியர், சமூகம் என்பன பங்கு வகிக்கின்றன. இதில் பெற்றோ ரின் பங்கு முக்கியமானது. மாணவன் கூடிய நேரத்தை பெற்றோருடன் கழிக்கிறான். இதனால் பெற்றோரின் சொற்பிரயோகங்களை அவன் பின்பற்ற நேரிடுகிறது. எனவே பெற்றோர் இவ் விடயத்தில் கவனமாக இருத்தல் வேண்டும். திணை விதைத்தவன் திணை அறுப்பான் என்பதை இங்கு குறிப்பிடலாம். நல்லவற்றை பெற்றோர் பேசினால் மாணவனும் நல்லவற்றை பேசுவான்.

பழக்க வழக்கங்களை பெற் றோரிடமிருந்து மாணவன் பழகுகிறான். நேரகாலத்தோடு நித்திரை விட்டு எழல், பல் துலக்கி முகம் கழுவி தேனீர் குடித்தல், குளித்தபின் சாப்பிடல், இறை வனை வணங்குதல், கைகழுவிய பின் சாப்பிடல், மலசலம் கழித்த பின் கை கழுவுதல், தினமும் குளித்தல், கோயி லுக்குப் போதல்போன்ற பல்வேறு பழக்கவழக்கங்களை பெற்றோரிட மிருந்து கற்கின்றான்.

பாடசாலைக்குச் செல்லும் போது பாதரட்சை அணிதல், சுத்தமான உடை அணிதல், தலை சீவுதல், பொட் டு வைத்தல், பவுடர் பூசுதல் போன்ற வற்றில் பெற்றோர் கவனஞ் செலுத்துவ தோடு நேர காலத்திற்கு முன்பள்ளிக்கு அனுப்புவதும் அவசியமாகும்.

மாணவனுக்கு ஏதாவது நோ யுள்ள போதும், உறவினரின் மரணவீடு போன்றவற்றை தவிர்ந்த ஏனைய நாட களில் கட்டாயம் மாணவனை முன் பள்ளிக்கு அனுப்புதல் வேண்டும். முன் பள்ளி நிர்வாகத்தில் பெற்றோர் பலர் பங்கு கொள்வதால் முன்பள்ளி நிகழ்வு களில் செயற்பட வேண்டிய பொறுப்பு பெற்றோரைச் சாரும். விளையாட்டுப் போட்டி, கலைவிழா, சிறுவர் தினம், குழந்தைகள் தினம், ஆசிரியர் தினம் போன்ற நிகழ்வுகளில் பணம் கொடுத் தால் மட்டும் பெற்றோரின் பங்கு முடி ந்துவிடாது. அவர்கள் இவ் விழாக்கள் சிறப்புற ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஆசிரியையின் செயற்பாட்டில் பெற்றோர் பங்குகொள்ள வேண்டும். அவருக்குத் தேவையான பொருட்கள் சேகரிக்க உதவ வேண்டும். மாணவர் கட்கு சத்துணவு வழங்குவதில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பாடசாலைச் சூழலை சுத்தமாக வைத்திருக்க உதவ வேண்டும். ஒவ்வொரு நாளும் முன பள்ளியில் என்ன நடக்கிறது என்பதை அறிந்திருத்தல் அவசியம். மாணவர் கட்கு தேவையான விளையாட்டு உப கரணங்களை பெற்றோர் வழங்க முடியும். விளையாட்டு நேரத்தில் நாளுக்கு ஒரு பெற்றோர் வீதம் ஆசிரியைக்கு உதவ முடியும். உள்ளக விளையாட்டு உபகரணம், வெளியக விளையாட்டு உபகரணம் என்பன வழங்கப்படல் வேண்டும். பெற்றோர் தமது தகுதிக் கேற்ப இவற்றை வழங்க வேண்டும்.

பெற்றோரிடமிருந்து சேகரிக்கும் பணமே தற்போது ஆசிரியைகட்கு கிடைக்கிறது. எனவே பெற்றோரை அனுசரித்து போக வேண்டிய நிலையில் ஆசிரியை இருக்கிறார். இதனால்தான் தற்போது எழுத்துப் பழக்கும் ஓர் நிகழ்வு முன்பள்ளிகளில் நடைபெற்று வருகின்றது. பெற்றோரின் விருப்பத்தை நிறைவு செய்யாதவிடத்து மாணவரை வேறு முன்பள்ளிக்கு மாற்றிவிடுவர். இத னால் ஆசிரியை முரண்பட்ட வழி நடத் தலுக்கு உட்படுகிறார்.

புதிய கல்வித்திட்டத்தில் முன் பள்ளி முக்கிய இடம் வகிக்கின்றது. முன்பள்ளியில் விளையாட்டின் மூலம் மாணவன் ஏதோ வகையில் கற்கின் றான். இதனை பெற்றோர் விளங்கிக் கொள்ள வேண்டும். பல காலமாக ஆராட்சி செய்துதான் கல்விமான்கள் ஓர் முடிவிற்கு வந்துள்ளனர். அவர்க ளின் முடிவின்படி சரியான வயதை அடையும் முன் மாணவர்கட்கு எழுத் துப் பழக்கக் கூடாது. பழக்குவதால் அவர்களின் எழுத்துக்கள் கோணல் மாணலாகவும் தெளிவற்றதாகவும் ஆகி விடும்.

முன்பள்ளிப் பருவத்தின் மாண வன் மூளை 90% வரை வளர்ந்து விடுகிறது. இந்நேரத்தில் ஏற்படும் தாக் கங்கள் அவனின் வாழ்க்கையை பாதிக் கின்றது என விஞ்ஞானிகள் அறிந்து ள்ளனர். எனவே இந் நேரத்தில் மேல திக சுமைகளை மாணவன் மீது சுமத் துவதால் கல்வியில் மாணவனுக்கு வெறுப்பு ஏற்படுகின்றது. இவற்றைப் பெற்றோர் உணர்ந்து நடக்க வேண்டும். ஆசிரியைகள் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறும் நிலை தற்போது தென்படுகிறது. இதற்கு பெற்றோரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

சமூகத்தைப் பொறுத்த வரை யில் சில விடயங்களை மாணவன் கற்கிறான். பெற்றோர் அயல் மாணவர்க ளுடன் பழக, விளையாட மாணவர்க ளை அனுமதிக்க வேண்டும். தனியாக வீட்டில் அடைந்து கிடக்க அனுமதி யளிக்கக் கூடாது.

பெற்றோரின் மனப்பாங்கிலேயே முன்பள்ளியின் வளர்ச்சி தங்கியுள்ள து. பெற்றோரும், முன்பள்ளி ஆசிரியை முதலாம் ஆண்டு ஆசிரியை, சமூகம் என்பன மாணவன் வளர்ச்சியில் பங்கு வகிக்கின்றனர். இவர்கள் தங்கள் பொறுப்புக்களையும் கடமைகளையும் சரியான முறையில் செயற்படுத்தும் போது தான் நற்பிரஜைகளை உருவா க்க முடியும். தற்போது இந் நிலை திருப்திகரமாக இல்லை. மாற்றங்களை இந் நான்கு பேரும் ஏற்றுக்கொண்டு செயற்படுவது அவசியமாகும்.

யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலய வரலாறு

திரு. செ. பேரின்பநாதன்
அதிபர்
யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்

எங்கள் ஈழத்திருநாட்டிலே வட பிரதேசம் இயற்கை வளம் நிறைந்த சிறந்த ஒரு பிரதேசமாகும். இப் பிரதேசத்தின் யாழ்ப்பாணப் பிரிவில் ஒன்றான தென்மராட்சியில் மண்வளம் மிகுந்த மருத நிலம் அதிகமாக இருப்ப தால் குளந்தொட்டு வளம் பெருக்கி பசுமைப் புரட்சியில் முன்னேறி வரலா யினர் அத்துடன் நிற்காது மந்தை களை வளர்த்து பால் வளம்பெருக்கி வெண்மைப் புரட்சியும் கண்ட ஓயாத உழைப்பாளிகள் அப்படிப்பட்ட பெரு மைமிகு பிரதேசத்தில் அமைந்த ஓர் கிராமம் மட்டுவில் ஆகும். "மட்டு" என்பது தேன்நிறைந்த தாமரைத் தடாகங்களையுடைய கிராமம் ஆகும்.

அக்காலத்தில் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் குருகுல வாசகங் களிற் புனிதமடைந்திருந்த இப் பகுதியில், மிசனரிமாரின் செல்வாக்கு வளரத் தொடங்கியது. அரசாங்கமும் அவர்களுக்கே உதவி செய்தது. நாடு முழுவதும் கிறிஸ்தவ மதம் ஆதிக்கஞ் செலுத்தியது. சைவமும் தமிழும் அழிந் தொழிந்து விடுமோ என்ற நிலையிலி ருந்தது. இக்கால கட்டத்தில் சைவப் பிள்ளைகள் சைவசமயமும், நல்ல தமிழும் சங்கீதமும் கற்க வேண்டு மென்ற நன்நோக்கோடு சரசாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட வித்துவான் க. இராமலிங்கம் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டார். பல சோதனைகள் சந்திக்க நேரிட்ட போதும் மலையேவரினும் தலையே சுமப்பது என்று மனவுறுதி கொண்டு எடுத்த முயற்சியைக் கை விடாது 1917-ம் ஆண்டு மங்கள வருடம் புரட்டாதி மாதம் விஜயதசமித் தினத் திலே மட்டுவில் வடக்கில் கமலாசனி வித்தியாலயம் உதயமானது.

ஆரம்பத்தில் திரு. சபாபதி சர வணமுத்து அவர்கள் திண்ணைப் பள்ளிக் கூட முறையிலே சில பிள்ளை களைச் சேர்த்து நவராத்திரி விழா வருமானத்தையே வேதனமாகக் கொண்டு பாடசாலையை நடாத்தி வந்தார். 1918-ம் ஆண்டு தராதரப் பத்திரம் பெற்ற தலைமையாசிரியர் திரு. வே. சுப்பையா அவர்களும் இன் னும் சில ஆசிரியர்களும் நியமிக்கப் பட்டு அரசினர் முறைப்படி நடைபெறத் தொடங்கியது. 1921-ம் ஆண்டு அரசினர் நன்கொடைக்குரிய பணமும் கிடைத் தது. திரு. வே. சுப்பையா அவர்கள் 43 ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றி பாடசாலைக்கு ஒரு நிரந்தரக் கட் டிடத்தை அமைத்ததுடன் பல செயற் கரிய சேவைகளையும் செய்தார். இவர் களது ஞாபகமாக இராமலிங்க மண்டப மும், சுப்பையா அரங்கும் உருவாக்கப் பட்டன.

இவரைத் தொடர்ந்து பல அதிபர்கள் கல்வி அபிவிருத்தியிலும், இணை பாடவிதான செயற்பாடு களிலும், பாடசாலை வளர்ச்சியிலும்

பெரும் பங்கினை ஆற்றி முன்னோடி யாகத் திகழ்ந்து கிராமத்திற்கு பெருமை தேடிக் கொடுத்தனர். 2000-ம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தின் காரணமாக பேரழிவிற்குள்ளான இப் பாடசாலை அடையாளம் காணமுடியா தவாறு சின்னாபின்னமாக்கப்பட்டு காட்சியளித்து காணப்பட்டது. இந் நிலையிலும், யுத்தம், வறுமை, பொரு ளாதாரநிலை போன்றவற்றில் பின் தள்ளப்பட்ட இக்கிராம மாணவச் செல் வங்களின் அறிவுப் பசியைப் போக்க வென மீண்டும் 2002-ம் ஆண்டு ஆரம் பித்து சிதைந்த கட்டிடத்திற் குள்ளும், இடிபாடுகளுக்கிடையிலும், தளபாட வசதிகள் எதுவுமின்றி கல்வியைத் தொடர்ந்து கற்று வந்தனர்.

இந் நிலையில், கல்விக்கூடம் என்பது பலதுறைகளிலும், பல வசதிகளிலும் சிறந்து மிளிர வேண்டும் என்ற பெருநோக்கமும், மாணவச் செல் வங்களின் அறிவுத் திறனை விருத்தி செய்யவும் பெருமனம் படைத்தவர் களான பழைய மாணவர் சங்கம், பாட சாலை அபிவிருத்தி சங்கம், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற வற்றின் உதவியினால் பாடசாலை மீண்டும் புதுப்பொலிவு பெற்று விளங்கிறது.

பாடசாலை நுழைவாயிலில் அழகாகப் பொறிக்கப்பட்ட பாடசாலை யின் பெயர் கொண்ட வளைவும், இரண்டு மேல் மாடிக் கட்டடங்களும் மேலும் அழகுறச் செய்கின்றது. அதிபர் அலுவலகம், விஞ்ஞான கூடம், விளை யாட்டு மைதானம், மலசலகூடம், குடி நீர் வசதி போன்ற வளங்கள், கிடைக் கப்பெற்றதுடன் சின்னஞ்சிறார்கள் மகிழ்ச்சிகரமாக கற்றலை மேற் கொள் ளவும், ஓய்வு நேரத்தை சிறந்த முறை யில் பயன்படுத்துவதற்குமென சிறுவர் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டு வருகின்றது.

2000-ம் ஆண்டு இடப்பெயர் விற்கு முன்பு வளம் குறைந்து காணப் பட்டாலும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிலோ, இணைபாடவிதான செயற்பாடுகளிலோ ஏனைய பாட சாலைகளோடு போட்டி போட்டுக் கொண்டு செயற்படும் திறமையுடைய வர்களாக விளங்கினர். ஓரிரு வருடங் களாக சிறிது தொய்வு நிலை ஏற்பட்ட போதும் அனைவரினதும் முயற்சி யினாலும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பல நிலைகளில் உயர்ந்து விளங்கிற்று. அது மட்டுமன்றி இணைபாடவிதான செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டில் வளங்கள் குன்றிய நிலையிலும் பல உயர்தரப் பாடசாலைகளோடு போட்டி போட்டு மாவட்ட ரீதியிலும், மாகாண மட்டத் திலும், தேசிய மட்டத்திலும் மாணவன் செல்வன் தி. நிசான்ராஜ் அவர்கள் பாடசாலைக்குப் பெருமையைத் தேடி சாதனை படைத்துள்ளார். இப் பாட சாலைக்கு மட்டுமன்றி கிராமத்திற்குப் பெருமையைத் தேடிக் கொடுத்து மிளிர வைக்கின்றது. இந்த வகையில் மேன்மேலும் உயர்ந்து பல துறை களிலும் சிறப்படைய வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

ஆரம்பக் கல்வியில் கற்பித்தல் உத்திகள்

திருமதி ஜெ. பரஞ்சோதி
ஆசிரியர்,
யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்

ஒரு பிள்ளையானது தனது முறையான கல்வியைத் தொடங்குவது ஆரம்பக் கல்விப் பருவத்திலேயே ஆகும். இப்பருவத்திலே அது பெறுகின்ற அடைவே எதிர்காலச் செயற்பாடுகளுக்கு ஆதாரமாக அமைகின்றது. ஆசிரியரின் வாக்கே வேதவாக்கு எனக் கொண்டு அவரைப் பின்பற்றக் கூடியதாக இருக்கும் இப்பருவத்தில் ஆசிரியர் சரியான எண்ணக்கருக்களையும், நற்பண்புகளையும் ஊட்ட வேண்டிய தேவை மிக இன்றியமையாதாகின்றது. ஆசிரியர் மையக்கல்வியாக இல்லாது மாணவர் மையக்கல்வியாக செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். பிள்ளையின் நுண்ணறிவு மட்டம், குடும்பச் சூழல், அயற்சூழல் என்பவற்றை உணர்ந்து கொண்டு கற்பித்தலை மேற் கொள்ள அவர் பிள்ளை பற்றிய முழு விடயங்களையும் இனங்கண்டிருத்தல் முக்கியமானதாகின்றது.

கற்பித்தலை மேற்கொள்ளும் போது பல்வேறு முறைகளைக் கையாள முடியும் விளையாட்டு சூழச் செயற்பாடு, பரிசோதனைகள், களச்சுற்றுலா, கண்காட்சி, அவதானிப்புமுறை போன்ற பல்வேறு செயற்பாடுகளையும் திட்டமிட்ட வகையிலே மேற்கொள்வதன் மூலம் சரியான எண்ணக்கருக்களை மாணவருக்கு ஊட்ட முடியும்.

விளையாட்டு முறை

விளையாட்டின் மூலம் கற்பித்தலை மேற்கொள்ளும் போது மாணவர் கற்கின்றோம் என்பதை அறியாமலே கற்கிறார்கள். இவ்விளையாட்டுக்களை மாணவர்களின் உள வயதுக்கு ஏற்றதாகவும் பொருத்தமான நல்ல எண்ணக்கருக்களையும், திறன்களையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் தெரிவு செய்தல் வேண்டும். இவற்றில் மாணவர்கள் மத்தியில் எதிர்விளைவுகள் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ளல் வேண்டும். போட்டி மனப்பான்மைகள் கருத்து முரண்பாடுகள், தாழ்வுச் சிக்கல் என்பவற்றை தவிர்க்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். உதாரணமாக 'ஆடும், வீடும்' பஞ்சாமிர்தம் போன்ற விளையாட்டுக்கள் எவ்வித பாதிப்புக்களும்

அற்றதாக அமைவதைக் காணலாம். இங்கே ஆசிரியர் மாணவர்களுடன் சேர்ந்து விளையாடுபவர் போல இருப்பது விரும்பத்தக்கது. விளையாட்டுக்கள் மூலம் ஞாபகசக்தி, நுண்ணறிவு, உற்சாகம், பின்னிற்காமை போன்ற பண்புகள் வளர்ச்சியடைகின்றன.

குழுச் செயற்பாடு

சில செயற்பாடுகளை குழுச் செயற்பாடாக மேற்கொள்ளும்போது மாணவர்களை மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குபற்றச் செய்யமுடியும். சக மாணவர்களின் உதவியோடு அவர்கள் அச் செயற்பாட்டில் ஈடுபடுவார்கள். மாணவர்களிடையே தலைமைத்துவத்தினை மாறிமாறி வழங்க வேண்டும். மாணவர்களை உற்சாகப்படுத்த குழுக்களிடையே போட்டி வைக்க முடியும். இதன் மூலம் தலைமைத்துவப் பண்பு, ஏனையோருடன் இணைந்து செயற்படும் இயல்பு என்பன மாணவர் மத்தியில் வளரும்.

உபகரணப் பயன்பாடு

பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்திக் கற்பித்தலை மேற்கொள்ளல் வேண்டும். மாணவர் மத்தியிலே தவறான எண்ணக்கருவை ஏற்படுத்தாத வகையில் உபகரணங்களைத் திட்டமிட்டுத் தயாரிக்க வேண்டும். எவ்வளவுக்கு உண்மைப் பொருட்களைக் காண்பிக்க முடியுமோ அவ்வளவுக்கு அவற்றைக் காட்டுவது மிகச் சிறப்பானதாகும்.

அது முடியாத விடத்து மாதிரிகளையோ படங்களையோ காண்பிப்பதும் வகுப்பறைகளில் தொங்க விடுவதும் மிகவும் சிறந்தது. உண்மையான பொருளைக் காண்பிப்பதில் சிறப்பானது என்னவெனில் "யானை" எனக் கூறி ஒரு சிறிய மாதிரியையோ அல்லது படத்தையோ காண்பிப்போமாக இருந்தால் பிள்ளையின் மனதில் "யானை" மிகச்சிறிய ஒரு உருவமாகவே பதிந்து விடும். இதனைத் தவிப்பதற்காகவே உண்மைப் பொருட்களைக் காண்பிப்பது சிறந்ததாகக் கருதப்படுகிறது. இவற்றை தொலைக்காட்சி மூலமாவது காண்பிப்பது சிறந்ததாகும்.

பரிசோதனைகள்

சில அலகுகளிற்குப் பரிசோதனை முறை அவசியமாகும். மாணவர்களிற்குப் பரிசோதனைகளை விளங்க வைப்பதோடு நிறுத்தி விடாது பரிசோதனைகளைச் செய்து ஆய்வின் விளைவுகளை அறிவார்களாயின் ஞாபகசக்தி அதிகரிக்கும் பரிசோதனையில் ஈடுபடும் போது ஆபத்துக்கள் ஏற்படாததும் பாதுகாப்பானதுமான பரிசோதனைகளையே செய்யவேண்டும். ஆசிரியரும் துணை நிற்கவேண்டும்.

களச்சுற்றுலா

எந்த ஒரு விடயத்தையும் நேரடி யாகச் சென்று பார்வையிட்டு அனுபவ ம் பெறுவது நீண்டநாள் மனதில் பதிய க் கூடியதாகவும் உண்மையை உணர க் கூடியதாகவும் இருக் கும் . மா ணவர் க ளை உற்சாகப்படுத்துகின்ற ஒரு முறை யும் ஆகும். விளையாட்டு முறையைப் போல இதுவும் கற்கிறோம் என்பதை உணராமலே கற்கிறார்கள். களச் சுற்றுலாவும் மாணவர்களின் பாதுகாப் பைக் கவனத்தில் கொள்ளக் கூடியதா கவும் மாணவர் கற்றலிற்குப் பொருத்த மான இடங்களாக இருத்தலும் மிக அவசியமாகும். களச்சுற்றுலாவின் போது அங்கு அவதானிக்க வேண்டிய விடயங்களையும் சேகரிக்க வேண்டிய தகவல்களை முன்னதாகவே கூறி வைத்து அவதானிக்கச் செய்தல் வேண்டும். இதன் மூலம் தகவல் சேகரி த்து அதனை தொகுத்து வெளியிடப் பழகுவர்.

கண்காட்சி

கண்காட்சி மூலம் கற்பித்தலை மேற்கொள்ளுவதும் கற்பித்தல் உத்தி களில் சிறந்த ஒன்றாகவே அமைகின் றது. மாணவர்களது திறன்களை ஏனை யோருக்கு வெளிக்காட்டவும் இந்த முறை உதவுகிறது. ஒரே நேரத்தில் பல பாடங்களையும் பார்வையிட்டு கற் று அனுபவம் பெறுவதற்கும் இது உத வுகிறது. வருடத்தில் ஒரு முறையாவது கண்காட்சி பாடசாலைகளில் பாடசா லை மட்டத்தில் வைக்கப்பட வேண்டும். தினமும் வகுப்பறையில் செய்யும் சிறந் த ஆக்கங்களை வகுப்பறை மட்டத்தி லும் பாடசாலையின் பொதுவான காட் சிப் பலகையிலும் காட்சிப்படுத்தி மாணவர்களை ஊக்கபடுத்த முடியும்.

இவ்வாறாக ஆரம்பக் கல்வி மாணவர்களிற்கு கற்பித்தலை இலகு படுத்தவும் அவர்களது கற்றல் அடைவு மட்டத்தை அதிகரிக்கவும் ஆரம்பக் கல்வியில் பல கற்பித்தல் உத்தி களைக் கையாள முடியும். ஆசிரியரது கற்பித்தலை இலகுவாக்கவும் இக் கற்பித்தல் உத்திகள் பெரிதும் துணை புரிகின்றன. மாணவர்களது அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கு பிள்ளை யை மையமாகக் கொண்ட இந்தக் கற்பித்தல் உத்திகள் மூலம் அவர் களது மேற்படிப்பிற்கு சிறந்த அத்தி வாரமிட்டு துணை புரியலாம்.

நற்சிந்தனை

திருமதி யோ. சுகந்தி
மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின்
செயலாளர்
(கன்னகை முன்பள்ளி ஆசிரியர்)

சிலந்தியின் வெற்றி

சிறிய அழகிய சிலந்திப் பூச்சி கள் ஓர் வீட்டின் மழைநீர் போகும் குழாயில் ஏறினார்கள். அப்போது பெரி ய மழை ஒன்று வந்தது. குழாய்க்குள் தண்ணீர் நிறைந்து ஓடியது. குழாய்க் குள் இருந்த சிலந்திப் பூச்சிகள் நீருட ன் வந்து கீழ் விழுந்தார்கள். பின்னர் வெய்யில் எறித்தவுடன் நீர் வற்றியது சிலந்திப் பூச்சிகள் உயிர் தப்பி மீண்டு ம் எழுந்து குழாய்க்குள் ஏறினார்கள். அதே போல் எமக்கு கஸ்ரங்கள் தோல்விகள் வந்தாலும் சிலந்திப் பூச்சி கள் போல் திரும்பவும் முயற்சி செய்து வெற்றி அடைவோம்.

பாட்டு

சின்ன வண்ண சிலந்திகள்
சறுக்கும் குழாயில் ஏறினர்
உண்ணிப் பெய்த மழையினால்
உதைக்க வந்து விழுந்தார்கள்

வெப்பக் கதிரோன் வந்தது
வற்றி மழை நீர் போனது
தப்பி எழுந்த சிலந்திகள்
தாவி மீண்டும் ஏறினர்

சிலந்திகளைப் போலவே நாம்
தோல்வி வந்த போதிலும்
மனம் தளர்ந்து போகாது
சாதனைகள் செய்வோமே.

யா/மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலய வரலாறு

திரு. செ. சிவஞானம்
அதிபர்,
யா/மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்

யா/மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலயம் வட மாகாணத்தில் தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மட்டுவில் வடக்கு கிராமத்தில் அமைந்துள்ளது. இப்பாடசாலையின் வரலாறு பழமையும் பெருமையும் மிக்க தொன்றாகும்.

இப்பாடசாலை அமைந்த காணியானது கயற்றைக் கிணற்றடிவளவு என்னும் பெயரில் கதிரேசு காசிநாதர் என்பவரால் சாஸ்திரியார் கணபதிப் பிள்ளை என்பவரிடம் அறுதியாக நூறு ரூபாவிற்கு 1875-ம் ஆண்டு புரட்டாதி மாதம் பதினேழாம் திகதி வாங்கப் பட்டது. இக்காணியில் பாடசாலை நடாத்துவதற்கான ஒரு கட்டடத்தை காசி நாதர் அமைப்பித்தார். 1881-ம் ஆண்டு உரையாசிரியர் ம. க. வேற் பிள்ளை அவர்கள் சைவப்பிரகாச வித் தியாசாலை என்னும் பெயரில் ஆரம்பித்தார். தென்மராட்சிப் பிரதேசத்தில் முதன்முதல் தோன்றிய சைவப் பாட சாலை என்பதில் நாம் பெருமையடைகின்றோம்.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் தமிழ் மக்களிடையே சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காகவாகும். ஏனெனில் இலங்கையானது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இருந்தபோது தமிழும் சைவமும் குன்றத் தொடங்கின. வீழ்ச்சியுறத் தொடங்கிய சைவத்தையும் தமிழையும் எழுச்சி பெறச் செய்வதற்காக ஊருக்கொரு பள்ளிகள் அமைக்கப்பட்டன. அந்த வகையில் மட்டுவில் வாழ் மக்களின் சைவத் தமிழ் உணர்வுகளைக் கட்டியெழுப்புவதற்காக ம. க. வேற்பிள்ளை அவர்கள் இப்பள்ளியை அமைத்தார்.

அக்காலத்தில் தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த பலர் இப்பாடசாலையில் இலக்கண இலக்கியங்களையும் சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் கற்றனர். இலக்கண இலக்கியங்கள் கற்பதற்கு இலட்சிய நிறுவனமாக இப்பாடசாலை அமைந்திருந்த காரணத்தினால் தென்மராட்சிப் பகுதியில் பல்வேறு கிராமங்களிலிருந்தும் பிள்ளைகள் கல்வியைப் பெறுவதற்கு இப்பாடசாலையை நாடி வந்தனர். இராக் காலங்களில் உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை அவர்களின் சைவ சமய சொற்பொழிவுகள் இடம்பெற்றன.

சில வருடங்களின் பின் ஆசிரியர் அவர்கள் நாவலர் அவர்களின் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு

தலைமை ஆசிரியராகச் சென்றார். பாட சாலைக் காணிச் சொந்தக்காரரும் சந் ததியற்றுக் காலமானார். இதனால் எவ ரும் பாடசாலை நடாத்த முன்வர வில்லை. இந்நிலையில் கட்டடச் சொந் தக்காரரின் உறவினர் கட்டடத்தைக் கிறிஸ்தவப் பாதிரியாருக்கு ரூபா ஒன்றுக்கு மாத வாடகையாகக் கொடுத் தனர். "சைவப் பிரகாச வித்தியாசாலை" மட்டுவில் இந்து ஆங்கில திராவிட வித்தியாசாலையாக'' மாறியது. அதாவது மிசனறிமாரின் கைக்கு மாறிய இப் பாடசாலை "அமெரிக்க மிசன் வித்தியாசாலை" என்னும் பெய ருடன் இயங்கி யது. இக்காலத்தில் இப் பாடசாலைக்கு நுணாவில் தம்பையா உபாத்தியாயர் என்பவர் தலைமையாசிரியரானார். இவர் பெயரளவில் கிறிஸ்தவராக இருந்து கொண்டு ம. க. வேற்பிள்ளை அவர் களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஆத்தி சூடி முதலிய நூல்களையும் நிகண்டு இலக்கணம் முதலிய கருவி நூல் களையும் கற்பித்து வந்தார். அவர் கற்பித்த காலத்தை "இரு தலை முறை களின் காலம்" எனக்கூறப்பட்டது. அதா வது தகப்பனும் மகனும் அவர் மாணவ ராயிருப்பர். ம. க. வேற்பிள்ளை அவர்க ளின் மூத்த குமாரர் திருஞானசம்பந்த ரை உதவி ஆசிரியராக ஆக்கிக் கொண்டார்.

இப்பாடசாலை மிசனறிமாருக்கு வாடகைக்கு கொடுக்கப்பட்ட பின் ஒரு பிள்ளையைக் கூட இப்பாடசாலைக்குப் பெற்றோர் விடவில்லை. திரு. நா. செல்லப்பா என்பவரின் தலைமையில் எல்லாப் பிள்ளைகளும் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலில் முன் னால் இருந்த மடத்தில் கல்வி கற்றனர். எனவே தென்மராட்சியில் எப்பாட சாலையிலும் இல்லாத வகையில் மிச னறிமார் இப்பாடசாலையைக் கை விட்டுச் சென்றது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு விடயமாகும். மிசனறி மார் காலத்திலும் இப்பாடசாலை சைவப் பாடசாலையாகவே விளங் கியது. சைவவித்தியாவிருத்திச் சங்கம் தோன்றியதும் கிறிஸ்தவ மணமே இல்லாது போயிற்று.

அன்றைய காலப்பகுதியில் கல்வியைக் கற்ற பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழையும் சைவத்தையும் வளர்க்க வேண்டுமென்ற தீராத அவாக் கொண்டிருந்தார். இவர் போல் சைவத் தமிழனாகிய சேர். பொன். இராமநாதன் அவர்களும் விள ங்கியதால் அவரின் விடாமுயற்சியால் அமெரிக்க மிசனறியிடம் இருந்து 1925.11.25 அன்று சைவ வித்தியாவிருத் திச் சங்கத்தின் கைக்கு மாறியது. இச் சங்கத்தின் தலைவராக சேர். பொன். இராமநாதன் அவர்களே விளங்கினார். இப்பாடசாலைக் கட்டடத்தை காசி நாதரின் உறவினர்களான ஆறுமுகம் இராமலிங்கம், ஆறுமுகம் மகள் பாறு வதிப்பிள்ளை, கந்தர், வல்லி புரம் என்பவர்கள் கையளித்தனர். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் கைக்கு நாயகனாகிய சந்திர மௌலீசரின் திருநாமத்துடன் இணைந்து இன்று சந் திர மௌலீச வித்தியாசாலை என்னும் பெயரில் இயங்குகிறது.

பண்டிதமணி அவர்கள் தன்னுடைய காலத்தில் வெள்ளி, சனி நாட்களில் இப்பாடசாலையில் காவிய வகுப்புகளை நடாத்தினார். அன்றைய காலத்தில் தமிழ்ப் பாடசாலைகளில் இருந்த உயர்தர வகுப்பாகிய வி. எஸ். எல். சி. வரை நடைபெற்றது. இவ்வாறு வளர்ச்சியடைந்த இப்பாடசாலையானது. படிப்படியாகக் குன்றி 1993-ம் ஆண்டளவில் 5-ம் வகுப்பு வரையுமே வகுப்புகளைக் கொண்ட பாடசாலையாக மாறியது. இந்நிலையானது 20 ஆண்டுகள் வரை நீடித்தது எனலாம். 1953-ம் ஆண்டின் பின் பாடசாலை வளரத் தொடங்கி 8-ம் வகுப்பு வரை நடைபெற்றது. இவ்வாறு வளர்ச்சியடைந்து வரும் காலத்தில் இலங்கையில் உள்ள பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற போது எமது பாடசாலையையும் பொறுப்பேற்றுக் கொண்டது.

சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் பெருந்தூணாய் அமைத்தவரும் சட்ட அறிஞர்களுக்கு சட்டம் கற்பிக்க வல்லவருமான திரு. நா. செல்லப்பா (லோச் செல்லப்பா) என்பவரும் மிசனறிமாரின் கையிலிருந்து இப்பாடசாலையை "சந்திர மௌலீச வித்தியாசாலை" ஆக்கியதோடு தென்மராட்சியில் காணப்பட்ட பல கிறிஸ்தவப் பாடசாலைகளைச் சைவப் பாடசாலையாக்கினார்.

அக்கால கட்டத்தில் இப்பாடசாலையின் அபிவிருத்திக்காக விசுவநாதர் குமாரசாமி என்பவர் மலேசியாவில் இருந்து நிதி சேகரித்து உதவினார். அந்த நிதியை சைவ வித்தியாவிருத்திச் சங்கம் இப்பாடசாலைக்குப் பயன்படுத்தாது தமது வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தியது. இதனால் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் காரணமாக திரு. நா. செல்லப்பா (லோச். செல்லப்பா) இப்பாடசாலைக்காக உழைப்பதை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது. பாடசாலையின் தரமும் குறைந்தது.

திண்ணைப் பள்ளிகளாக இருந்து கல்விச் சாலைகளாக வளரத் தொடங்கிய பாடசாலைகளை ஒரு நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் கொண்டு நடாத்துவதற்காகப் புனரமைக்கப் பட்டது. இந்த வகையில் 1972-ம் ஆண்டு எமது பாடசாலையும் புனரமைக்கப் பட்டு தே.பொ.க.த.ப. முள்ள (தேசிய கல்வி பொது தராதர பத்திர) வகுப்பு வரை வகுப்புக்களையும் வைக்கக் கூடிய ஒரு பாடசாலையாகத் தர முயர்த்தப்பட்டது. இப் பரீட்சைக்கு 1975-ல் முதன்முதலாக எமது பாடசாலையில் இருந்து மாணவர்கள் தோற்றினர். அதன்பின்பு க. பொ. த (சா/த) பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு 1978-ல் இப்பரீட்சைக்கு சொற்ப மாணவர் தோற்றி தேர்ச்சி பெற்றனர்.

1983-ன் பிற்பட்ட காலத்தில் பெரும் பின்னடைவுக்கு உட்பட்டது. 1990 வரை மீண்டும் 9 வகுப்பு வரை தரம் குறைக்கப்பட்டிருந்தது. பின் நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகளாலும் அதிபர், ஆசிரியர்களின்

அயராத உழைப்பினாலும் மீண்டும் இப் பாடசாலையில் தரம் 11 வரை வகுப்பு கள் ஆரம்பிக்கப்பட்டு இன்று பல்வேறு செயற்பாடுகளிலும் வளர்ச்சியடைந் துள்ளது.

1991-ம் ஆண்டின் பின் எமது பாடசாலை வளர்ச்சிப் பாதையிலே காலடி எடுத்து வைத்து வீறுநடை போட்டதென்றே குறிப்பிட வேண்டும். எமது பாடசாலையில் இருந்து 1979-ம் ஆண்டு காலத்தில் ஒருவர் 5-ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்தாலும் 1991-ம் ஆண்டிலிருந்தே புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக் கத் தொடங்கியது. ஆனால் 2000-ம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக சித்தி வீதம் வீழ்ச்சியடைந் தாலும் பின்னுள்ள இரு ஆண்டுகளும் சிறப்பாகவே காணப்பட்டது எனலாம்.

இதே போலவே க. பொ. த. (சா/த) பரீட்சையின் பெறுபேறுகள் 1991-ம் ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டு கள் மாணவர்களின் தேர்ச்சி மட்டம் கீழ நிலையில் இருந்தாலும் அதன்பின் ஆசிரியவள ஆளணியின் காரணமாக சிறப்பான பெறுபேறுகளைக் கொண்டு ள்ளது. இன்று பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 50% மாணவர்கள் சித் தியடைந்து உயர்தர வகுப்பிற்குச் செல்லும் தகுதியினைப் பெற்றுள்ளார் கள். இனிவரும் காலங்களில் இக் கல்விச் செயற்பாடுகளின் வளர்ச்சி போற்றுவதற்கு உரிய ஒன்றாகவே அமையும் என்பது திண்ணம்.

இதனை விட இணைபாடவிதா னச் செயற்பாடுகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் வலய மட்டங்களிலும் மாவட்ட மட்டங்களிலும் தெரிவு செய் யப்பட்டு பரிசில்களைப் பெற்றுள்ளனர். அதாவது விளையாட்டு பொதுஅறிவுப் போட்டிகள், சஞ்சிகையாக்கம், தமிழ்த் தினப்போட்டி கண்காட்சி, தையல் மனைப்பொருளியல் போன்றனவே இவர்கள் பங்குபற்றி தெரிவு செய்யப் பட்ட போட்டிகளாகும். இதுபோல அறநெறிப் போட்டி திருக்குறள் மனனப் போட்டி வேறும் பல செயற்பாடு களில் எமது பாடசாலை வெற்றி பெற்று மிளிர்ந்து கொண்டு இருக்கிறது என்று கூறிக் கொள்வதில் நாம் பெருமை யடைகிறோம்.

பௌதீக வளம்

இங்குள்ள பௌதீக வளத் தினைப் பார்க்கும் போது ஆரம்ப கால த்தில் 02 பரப்பில் ஒரு சிறிய கட்ட டத்தைக் கொண்டிருந்த இப்பாடசாலை இன்று பத்தரைப் பரப்பு நிலத்தையும் ஐந்து கட்டடங்களையும் கொண்டு ள்ளது. இக்கட்டடங்களில் 2000-ம் ஆம் ஆண்டின் இடப்பெயர்வின் பின் இரு கட்டடங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. "சுவிஸ் நிறுவனத்தின்" உதவியுடன் 110x25 சதுர அடி கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் ஒன்றும் நவீன வசதி

யுடன் கூடிய விஞ்ஞான ஆய்வு கூடம், அலுவலகம், பிரதான மண்டபத்துடன் கூடிய மேல் மாடிக் கட்டடத் தொகுதி ஒன்றும்,"உலக வங்கியின் உதவியுடன் 60x25 சதுர அடியில் நூல்நிலையம் ஒன்றும், அதன்மேல் சுவிஸ் நிறுவனத்தின் உதவியுடன் 3 வகுப்பறைத் தொகுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. 2000-ம் ஆண்டின் போர் அனர்த்தத்தினால் ஏற்பட்ட கட்டடச் சேதங்களை G.T.Z நிறுவனத்தினர் புனரமைத்துத் தந்தனர். அத்துடன் ஆண், பெண்களுக்கான தனியான மலசலகூடத் தொகுதிகள் இரண்டும் அமைத்துத் தந்துள்ளனர். யுனிசெவ் "நிறுவனத்தின் உதவியுடன் இங்கு குழாய் நீர் விநியோகமும் தண்ணீர்த் தாங்கியும் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போது "குடிநீர் வடிகால் அமைப்பு சபையினரின்" உதவியுடன் மழைநீரைச் சுத்திகரித்து குடிநீர் ஆக்கிப் பயன்படுத்துவதற்கான பத்தாயிரம் லீற்றர் கொள்ளளவுடன் கூடிய தண்ணீர் கூசா ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது.

இங்குள்ள தளபாட வசதிகளைப் பார்க்கும்போது ஆரம்ப காலத்தில் தின்ணைப் பள்ளியாக இருந்த இப்பாடசாலை இன்று "யுனிசெவ்" மற்றும் நிக்கொட் (Necord) நிறுவனங்களின் உதவியுடன் மாணவர்களுக்கான கதிரை, மேசைகளும் பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் உதவியுடன் அலுவலக மேசை, உருக்கு அலுமாரி, புத்தக றாக்கை என்பனவும் பெறப்பட்டன.

மனிதவளம்

ஒரு பாடசாலையின் மனித வளங்களாக அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் விளங்குவர்.

பாடசாலை ஆரம்பித்த போது இங்கு கல்வி கற்றவர்கள் சிறிதளவினராக இருந்தபோதும் இன்று 18 ஆசிரியர்களும் ஏறத்தாழ 350 வரையான மாணவர்களும் உள்ளனர். இப்பாடசாலை ஆரம்பித்த நாள் முதல் இன்று வரை கிட்டத்தட்ட 11 அதிபர்கள் சேவை புரிந்துள்ளனர்.

நூல் நிலையம்

உலகவங்கியின் உதவியுடன் நூல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் யாழ் பல்கலைக்கழக "இளைஞர் சமூக சேவை" யினரின் வருடாந்த செயற்பாட்டை முன்னிட்டு ரூபா 11,000/- பெறுமதியான புத்தகங்களை அன்பளிப்புச் செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இப்பாடசாலை ஆரம்ப காலத்தில் இருந்ததை விட இன்று பௌதீக வளம், மனித வளம் என்பவற்றிலும் கற்றல் கற்பித்தல் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த வகையில் இப்பிரதேசத்திலேயே குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவில் எமது பாடசாலை மிளிர்ந்து கொண்டிருக்கிறது. என்பதை இவ்விடத்தில் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்வதில் நாம் பெருமையடைகிறோம்.

குழந்தை உளவியலும் சமயக் கல்வியும்

திருமதி சு. யோகானந்தம்
B.A. (Hons) P.G.D.E, M.Ed.
ஆசிரியர்,
யா/டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி.

குழந்தை உளவியல் என்று மில்லாத எதிர்கால சமூகத்தின் வாழ்விலும் வளத்திலும் குழந்தை உளவியலின் முக்கியத்துவம் பரவலாக உணரப்படுகின்றது. குழந்தை உளவியல் பிரயோக நிலை உளவியலாகின்றது. குழந்தை வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் அது நேரடியாக பங்களிப்பு செலுத்துகின்றது.

1. உடல் மேம்பாடு
2. உள மேம்பாடு
3. மனவெழுச்சி மேம்பாடு
4. மொழித்திறன் மேம்பாடு
5. ஆக்கத்திறன் மேம்பாடு
6. அழகியல் மேம்பாடு
7. சமூகமேம்பாடு
8. அறவொழுக்க மேம்பாடு

இவற்றை அடிப்படையாகக் கொண்டு குழந்தை உளவியல் முன்னணி வகிக்கின்றது. என்றும் அவர்களுக்குரிய கல்வியானது சிறப்பார்ந்த முறையில் முன்வைக்கப்பட்ட வேண்டும் என்றும் மேலைத்தேய மரபில் ஜேஎன் லொக்கு முன்வைத்த கருத்து இன்று முக்கியம் பெறுகின்றது. இவரது கருத்தின் அடிப்படையில் பின் வந்த குழந்தை உளவியலாளர் தமது கருத்தினை கட்டி எழும்பியுள்ளனர். சிறுவர்களுக்கான கல்வியில் கைகளும் அறிவும் உணர்வும் என்ற முப்பொருள்களினதும் முக்கியத்துவத்தை விளக்கிய அவர் அவற்றிற்குரிய முறையில் பயிற்சிகள் வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். இவர் கல்வியின் உள்ளடக்கத்தை இரண்டு வகையாகப் பிரித்தார்.

1. பருப்பொருள் தொடர்பான கல்வி உள்ளடக்க இதில் பொருள் உற்பத்தி, விவசாயம், வணிகம், அறிவியல், பயன்தகு கலைகள் முதலியவை பற்றிய கற்கைகள் இடம் பெறும்.

2. அறவொழுக்கம் தொடர்பானகல்வி உள்ளடக்கம்.

இப்பிரிவில் ஒழுக்கவியல், சமயம், குடியியல், உரிமைகள் பிரசைகளுக்குரிய கடமை ஆகியவை பற்றிய கற்கைகள் உள்ளடக்கும் இவரது கருத்தின்படி குழந்தைகளுக்கான கல்வி கோட்பாட்டளவில் நின்று விடாது நடைமுறை சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதாகும்.

ஜோன் பிரட்ரிக்கேர் பார்ட் என்பவரின் கருத்துக்களில் ஒன்று ஒழுக்க மேம்பாட்டை கற்பித்தல் வாயிலாகவே முன்னெடுக்கமுடியும். ஒழுக்கம் என்பது அகத்தில் இருந்து முகிழ்த்தெழுவதால் அகத்தை செழுமை மிக விரிந்த அகல்விரி கற்பித்தல் துணை செய்யும் என்பதாகும்.

குழந்தைகளுக்கான உளவியல் மயப்பட்ட நவீன சிந்தனையாளர்களில் மரிய மொன்ரிசோரி அம்மையார் முக்கியம் பெறுகின்றார். இவர் குழந்தைகளின் தனித்துவம்

குழந்தைகளுக்குரிய புலன்பயிற்சி மற்றும் கற்பித்தல் சாதனங்கள் முதலியவற்றை முதன்மைப்படுத்தினார்.

கீழத்தேய கல்விச் சிந்தனை களிலும் அறப்பண்புகள் அடிப்படையில் கல்வி பற்றி சிந்தனைகள் கட்டி எழுப் பப்படுகின்றது. ஆரம்பத்தில் அற ஒழுக்கங்கள் நடத்தை சார்ந்த நிலை யில் இருந்தன. சூக்குமமான அல்லது அருவமான ஒழுக்கங்கள்

உ+ம்:- தீயவற்றை சிந்திக்காதே

கூட்டு சமூக அமைப்பின் வீழ்ச்சியின் பின் அறம் தொழிற்பாடு சார்ந்த உருவ வழியான அறமாக மாறியது. கல்விச் செயன்முறையின் வளர்ச்சி அருவமாக்கல் என்ற உள நடவடிக்கைகளுக்கு வலு ஊட்டுவதாக அமையும் அருவமாக்கல் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

1. பொதுமைப் படுத்தப்படும் அருவ மாக்கல்
2. சமர்பண அருவமாக்கல்

பொதுமைப்படுத்தப்படும் அருவ மாக்கல் என்பது அங்கிகரிக்கப்பட்ட தருக்க ஒழுக்கு அமைப்பையும் நன்கு வரையான செய்யப்பட்ட பண்புக் கூறுகளையும் கொண்டிருக்கும். அறம், பொருள், இன்பம் என்று திருவள்ளுவர் குறிப்பிடும். அருவமாக்கல் பொதுமைப் படுத்தப்படும் அருவமாக்கலுக்கு எடுத் துக்காட்டுகளாகும். சமர்ப்பண அருவ மாக்கல் என்பது கல்வியில் ஒரு புத்தாக்க நடவடிக்கையாகும். கூடிய அகவயப்பாங்கானதாயும் மனஎழுச்சி பூர்வமானதாகவும் இது அமையும் காரைக்கால் அம்மையாரின் பாடல் களில் இதன் வளர்ச்சியையும் நாயன்மார்கள் ஆழ்வர்களின் பாடல் களில் இதன் செறிவையும் காண முடியும்.

தெய்வீகம் சார்ந்த கல்வி யானது மேலும் அருவமாக்கலுக்கு இட்டுச் செல்லும் அதாவது புலனறி காட்சி வடிவில் அல்லது உருவ வடிவில் காட்டமுடியாத இடர்பாடு தெய்வீக அனுபவங்களில் தோன்றும். இதன் காரணமாக பக்தி பாடல்கள் மிகவும் கூடுதலான அருவமாக்கற் செறிவுடையதாக இருக்கும். எண்ணக் கருக்களின் குறியீடாகவே சொற்கள் விளங்குகின்றன. பக்தி இலக்கியங் களிலே சொற்களுக்குரிய பாரம்பரிய மான உணர்ச்சிப் பாய்ச்சலுக்கும் மேலான அனுபவம் தரும் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன. மனவெழுச்சிகளையும் உணர்ச்சிகளையும் மொழி வடிவில் ஆக்கும் மீளாக்கத்திறன் உயர்நிலை கல்வி நடவடிக்கையின் பாற்பட்ட தாகும். தெய்வீக உணர்ச்சிகள் மொழி என்ற கலோபினூடாக வெளிப்படுத்த படும் பொழுது புலக்காட்சி, புலன் கடந்த காட்சி உயர்நிலையான சிந்த னைத் தொழிற்பாடு என்பன மாத் திரமன்றி உயர்நிலையான மொழிக் கட்டுக் கோப்பினை வலியுறுத்தும் கல்வி நடவடிக்கைகளும் இன்றியமை யாது வேண்டப்படுகின்றன.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல்மறந்தறியேன்
என்று திருநாவுக்கரசர்

கூறுதல் வரன்முறையான கல்வி கட்டமைப்புகளை ஒரு வகையிற் சுட்டிக்காட்டப்படுவதாகவுள்ளது.

தனிமனிதர் ஒவ்வொருவரதும் தனித்துவமான ஆற்றல்களை வளர்ச்சி அடையச் செய்தல் கல்வியின் உயர்ந்த நோக்கக் கருதப்பட்டது. கல்வி வாயிலாக ஒவ்வொருவரும் தம் இயல்புகளை வெளிப்படுத்தப்படும். இதனை சுவாமி விவேகானந்தர் மனி தனிடம் மறைந்துள்ள பூரணத்துவத் தினை வெளிக்கொணர்வதே கல்வி என்று குறிப்பிட்டார். பொதுமக்களை வாழ்க்கைப் பேராட்டத்திற்கு தகுதி பெற்றதாக இருக்க உதவி செய்யாத கல்வி பிறருக்கு உதவும் ஊக்கத் திறனையும் உறுதியையும் வெளிப் படுத்த பயன்படாத கல்வி பூரண கல்வி ஆகாது என குறிப்பிடப்படுகிறது.

தனி மனிதருக்குரிய உடல், உள்ளம் மனஎழுச்சி ஆகியவற்றின் விருத்தியும் அவற்றின் வழியான தெய்வீக நோக்கமும் முன்னெடுக்கப் படுவதற்கு கல்வியின் உதவி வேண்டப் படுகின்றது. மானுட நேயத்தை வலி யுறுத்தும் தமிழர்களுடைய கல்விச் செயற்பாடுகள் தன்னை உணர்தலை யும் தன் வெளிப்பாடுகளையும் உணர்த்தின. மானிட நேயக்கல்வி யாகாது நல்மாணாக்கரை உருவாக்கு கின்றது. மனிதன் அறிவினால் வளமிக்கவானக்கப்படும்போது கல்வி வாயிலாக மனித விழுமியங்கள் மனிதனுள்ளே கட்டி எழுப்பப்படுகின் றது. இதன் வாயிலாக தற்கட்டுபாடு, மனஒருமைப்பாடு அடக்கம் முதலியன உருவாகின்றது.

சிந்தனை செயல் என்ற பரு மன்களைக் கல்வி கொண்டுள்ளது ஏடு கள் வாயிலாக அறிவை திரட்டுதல் எத்துணை முக்கியமானதோ அத் துணை சிறப்புடையது செயல் வழி வந்த பட்டறிவைத் திரட்டுதல். பட்டறிவை முன்னெடுக்கும் கல்வி யானது ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே கூடுதலான இடைவினை களைத் தூண்டியது. மாணவருக்கும் மாணவருக்கும் இடையே இடைவினை களை வலிதாக்கியது.

செயன் முறைகள் சிந்தனை யையும் நடைமுறைகளையும் ஒன்றி ணைத்தன. இவற்றின் வாயிலாக கல்வி யானது வாழ்க்கைக்கும் தயாரிப்பு நட வடிக்கையாக மாறுகிறது. வாழ்க் கையே கல்வியாக முகிழ்ந்தது. குடும்ப உறுப்பினருடையே நிலவிய உறவு முறைகளும், உரையாடல்களும், விழு மியங்களும் கல்வி நிலையங்களில் காணப்பட்டன. மாலை தொடுத்தல், பண்ணுடன் பாடல், கோலமிடுதல், ஓலை அலங்காரம், மாலை அலங் காரம், வேடம்புனைதல் போல் அழகி யல் சார்ந்த பட்டறிவும் கல்வியினுடாக வளர்க்கப்பட்டன. குருகுலக்கல்வி மூலம் மாணவர் ஆசிரியர் உறவுகள் ஒழுக்கங்கள் பலத்தப்பட்டன. வன் முறை அந்த தொடர்பாடல்களும் மனித விழிமியங்களும் என்பனவும் மதிக்கப்பட்டன.

இவ்வாறு சமயக்கல்வியானது அறிவு திறன் மனப்பாக்கினை வளர்ப் பதாக அமைந்தது. அறிவு, ஆராய்வு என்பதன் வளர்ச்சியில் சிகரமாக விளங்குவது சமயக் கல்வியும் சமய வாழ்வுமாகும். எனவே இத்தகைய சிறந்த பண்புகளை வெளிப்படுத்தும் சமயக் கல்வியை நாம் குழந்தை

களுக்கு கற்பிக்கும் போது மிகுந்த அவதானத்துடன் கற்பிக்க வேண்டும். இன்றைய சிறார்கள் மீத்திரன் உடைய வர்களாக விளங்குகின்றனர். எனவே அவர்களுக்கு சமயக் கல்வியை புகட் டும்போது அவரது ஆளுமையை மழுக்கிழக்காத வகையில் உள வியல் சார்ந்து கற்பிக்க வேண்டும். இன்று ஆராய்வுக்கள் மேலோங்கிக் காணப்படுகின்றது. குழந்தை எதனை யும் நோக்கும் போது ஏன்? எதற்கு என்ற வினாக்களை எழுப்புகின்றனர். இவ்வகையை சமயக் கல்வியில் சிறுவர்களுக்கு புராண இதிகாசக் கதைகள், அருவ வடிவாக இறைவன் பற்றிய கருத்துக்களை சிறந்தமுறை யில் புகட்டாவிடில் அவர்களுக்கு விளக்கமின்மை ஏற்படுவதோடு சமய நம்பிக்கையும் அற்றுப் போய்விடும். தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையும் என்பதற்கு இணைந்த சிறுபிராயத்தில் விதைக்கப்படும் இறை சிந்தனை பக்தி உணர்வு அன்பு இரக்கம் என்பன அவளது வாழ்வில் செல்வாக்கு செலுத்துகின்றன.

ஏனைய பாடங்களை விட சமய பாடம் மாணவர்களை மனிதர் களாக வாழ வழிவகுப்பது எனவே இப்பாடத்தினை புகட்டுவது மிகவும் கடினமானதும் நுட்பமானதுமாகும். ஆனால் நடைமுறையில் ஏட்டுக் கல்வியாக சமய பாடம் பாலர் கல்வி யில் இருந்து வளர்ந்த தெடுக்கப் படுகின்றது. இதனால் வன்முறை களும் மனமுரண்பாடுகளும், மன முறிவுகளும், வக்கிர குணமும் மாணவர்களிடம் மேலோங்கிக் காணப் படுகின்றது. சமயம் கற்பிக்கும் ஆசிரி யர் சமயப் புலமையும் உளவியல் அறிவும் உள்ளவராகவும் ஒழுக்க சீல ராகவும் விளக்க வேண்டும். ஆசிரியரே முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டிய தேவை சமயக்கல்வி முக்கியம் பெறுகின்றது. மேலும் பாலர் கல்வியில் சிறிய விடயங்கள் பல்வேறு விழுமியங்களை கொண்டு அமைய வேண்டும். இலகுவான மொழி நடையில் கதை போக்கில் அமைந்த கருப்பொருள் பல உயர் எண்ணக் கருக்களை மாணவரிடம் உருவாக்கும் சிறுவயதில் இருந்தே சிறுவர்களின் ஆளுமையை துலங்கச் செய்ய வேண்டும். புத்தாக்கதிறன்களை வளர்க்க வேண்டும். அவற்றினை அன்பு, கருணை, இரக்கம், கீழ்படிவு போன்ற அறப்பண்புகள் அடிப்படை யில் அமைய வளர்ப்பதற்கு சமயக் கல்வியே அடிப்படையாகும்.

உலகமயமாக்கல் அடிப்படை யில் இன்று உலகங்கள் கிராமமாகி விட்டன. மனிதநேயம் மறைந்து விட்டது. தனித்து வாழ்தல் என்ற பண்பு மேலோங்கியுள்ளது. இத்தகைய சூழலில் பிறந்து வளர்ந்து வரும் குழந் தைகளுக்கு மானிடநேயம், மனித விழுமியங்களை போதிக்க வேண்டிய கடப்பாடு முன்பள்ளி ஆசிரியருக்கும் பாடசாலை ஆசிரியருக்கும் உரிய மிக தலையாய கடமையாகும். சிறு வர்கள் வாழும் சூழல் அவர்கள் கையாளும் மொழிநடை, பழக்கவழக் கங்கள் அடிப்படையில் அவர்களின் மனஎழுச்சியை தூண்டி அவர்களுக்கு சரியான துலங்களை உருவாக்க

வேண்டும். ஆனால் இன்று சிறுவர் கல்வி உளவியல் மயப்பட்டதாக இருத்தல் வேண்டும். என்று பெரும்பா லானோர் ஏற்றுக்கொண்ட போதிலும் நடைமுறையில் உளவியல் நிரா கரிப்பு மிகுந்து காணப்படுகின்றது. போலி உளவியற்பாங்குகளும் இழை யோடிக் காணப்படுகின்றது. சிறுவர் களது பாட அடைவுகளுக்குக் கொடுக்கப்படும் முன்னுரிமை அவர் களது விழுமிய அடைவுகளுக்கு கொடுக்கப்படுவதில்லை. மாணவர்கள் தேர்வுகளுக்கு விடையளிக்கும் பொறிகளாக உருவாக்கப்படுகின் றனரே அன்றி மானிட நேயம் மிக்க வர்களாக உருவாக்கப்படுவதில்லை. விஞ்ஞான மயமாக்கப் பட்ட கல்வி யில் சமயம் புறக்கணிக்கப்பட்டு விட்டது. இதனால் இன்று மாணவ சமூகம் சமூக கட்டுக்கோப்புகளில் இருந்து திசைமாறி செல்லும் பறவை களாக அலைந்து திரிவதனைக் காண்கின்றோம். இன்று கட்டிளமை பருவ மாணவர்களிடையே கோஷ்டி மோதல் சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் பாவனை வக்கிர உணர்வு பகைமை போன்ற பல்வேறு நடத்தை கோலங் கள் மேலோங்கி யுள்ளன. அறிவுக்கு விஞ்ஞானம் எவ்வளவு முக்கியமோ அது போல் உள வளர்ச்சிக்கு சமயக் கல்வி மிகவும் முக்கியமானது.

கலாநிதி அல்பேட் ஜஸ்ரின் விஞ் ஞானம் கலவாத சமயம் நொண்டி என்றும், சமயம் இல்லாத விஞ்ஞானம் குருடு என்றும் குறிப் பிட்டார். இக்கருத்தினை ஈண்டு நோக்கு தல் சாலச் சிறந்தாகும். சமயம் என்பது கடவுளைக் காணல் என்ற நோக்கில் மட்டுமல்லாது அது வாழ்வியலோடு இணைந்தது மனிதனை மனிதனாக வாழ வைப்பது என்ற எண்ணக் கருவினை ஆசிரியர் உள்வாங்கி பாலர் கல்வியில் இருந்து பாடசாலை வரை கற்பிக்கும் போது மானிட நேயம் மலர்ந்த ஒரு சமூகத் தினை கட்டி எழுப்ப முடியும். இவ் வகையில் சரியான ஆற்றுப்படுத்தல் இன்றி தத்தளித்துக் கொண்டு வரும் மாணவர் சமூகத்தினை பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு இன்று ஆசிரிய சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பது கண்கூடு.

உசாத்துணை நூல்:

1. எஸ். பத்மநாதன் - **ஆறுமுகனுக் குரிய ஆறுபடை வீடுகள்**
2. இ. கலைவாணி - **வேதப்பாரம் பரியமும் சைவ சித்தார்த்தமும்**
3. ப. சந்திரசேகரம் - **கல்வித் தத்துவம்**
4. சபா. ஜெயராசா - **குழந்தைக் கல் வீச் சிந்தனைகள்**
5. சபா. ஜெயராசா - **உள நெறிக் கதைகள்**
6. சபா. ஜெயராசா - **குழந்தை உள வியலும் கல்வியும்**
7. சபா. ஜெயராசா - **தமிழர் உளவிய லும் கல்வியும்**
8. ச. முத்துலிங்கம் - **கல்வி உள வியல்**
9. பாஞ். இராமலிங்கம் - **குழந்தை உளவியல்**

முன் ஆரம்ப பிள்ளைப்பருவ பராமரிப்பும் கல்வியும்

கலாநிதி த. கலாமணி,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்

முன் ஆரம்பப் பிள்ளைப் பருவப் பராமரிப்பும் விருத்தியும் இன்று உலகளாவிய ரீதியிலே கவனத்திற் குள்ளாகியுள்ளன. இப்பருவ பிள்ளை களின் பராமரிப்புக்கும் விருத்திக்கு மென செய்யப்படுகின்ற முதலீடானது ஆரோக்கியமான தேசமொன்றை கட்டியெழுப்பி நாட்டின் தேசிய தலா வருமானத்தை உயர்த்துவதற்கான ஓர் உபாயமாகவே பல நாடுகளாலும் இன்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. உடல் ஆரோக்கியம் மிக்க, உளநலப் பாடு நிறைந்த குழந்தைகளை அறிவார்ந்த சமுதாயத்தின் உறுப் பினர்களாக விருத்தியுறச் செய்தல் எதிர்கால உலக சமுதாயத்தின் நிர்மா ணத்திற்கான ஒரு கட்டுமாணப்பணியாக கொள்ளப்பட வேண்டிய அவசியம் இன்று பலராலும் உணரப்படுகின்றது. இப் பின்னணியில் முன் ஆரம்ப பிள் ளைப் பருவ பராமரிப்பும் கல்வியும் எம் அனைவரதும் கவனத்தை வேண்டி நிற்கின்றது என்பதனை வலியுறுத் துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன் ஆரம்ப பிள்ளைப் பருவ மென்பது வெவ்வேறு வயதெல்லை களை கொண்டதாக வெவ்வேறு நாடு களால் கருதப்படுகின்ற போதிலும் முறைசார் நிறுவனமான பாடசாலைக் குள் பிரவேசிப்பதற்கு முன்னுள்ள பருவமெனக் கொள்ளுதல் பொருத்த முடையதாகும். இப்பருவப் பிள்ளைகள் வீட்டில் பெற்றோர்களினதும் ஏனைய உறவினர்களினதும் பராமரிப்பையும் கவனத்தையும் அன்பையும் தூண்டுத லையும் நாடி நிற்பவர்களாவர். வாழ் வின் ஆரம்ப படிநிலைகளில் அவசிய மான இவையாவும் பின்னைய பருவத் தின் அறிவாற்றல் விருத்திக்கும் மனவெ ழுச்சி சார் திறன் விருத்திக்கும் அவ சியமானவையாகும். முன்பள்ளிகளிலே பிள்ளைப் பருவத்தில் வழங்கப்படுகின்ற முறையான பராமரிப்பு சமூகமயமாக்கற் செயற்பாட்டின் விருத்தியை வளமுறச் செய்வதோடு ஆதாரமாகவும் அமை கின்றது.

இலங்கையில் முன்பள்ளிகளின் செயற்பாடுகள் நன்கு திட்டமிடப்பட்டு வளமாக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு இன்று அவ்வளமாக் கலுக்கு வேண்டிய முயற்சிகள் முன் னெடுக்கப்பட்டும் வருகின்றன. ஆயி னும், இம்முயற்சிகளிடையே பிர தேசத்திற்குப் பிரதேசம், பாடசாலைக் குப் பாடசாலை பல வேறுபாடுகள் நிலவிவருவதும் கண்கூடு. எனவே தான் இவ்வேறுபாடுகளை களைந்து ஆரோக் கியமானதொரு சமுதாயத்தை கட்டி யெழுப்பிக் கொள்வதற்கான அத்தி வாரமிடும் நடவடிக்கைகளை முன் ஆரம்ப பிள்ளைப்பருவத்திலேயே திட்ட மிட்டு செயலுருவம் கொடுக்க வேண்டி யது அவசியமாகின்றது.

மேலை நாடுகளில் பிள்ளைப் பராமரிப்பு நிலையங்களும் முன்பள்ளி களும் தனித்தனியான நிறுவனங்களாக காணப்படுகின்றன. எமது நாட்டைப் பொறுத்த வரை முன்பள்ளிகளிலேயே

பிள்ளைகளுக்கான பராமரிப்பிலும் அக்கறை காட்ட வேண்டியுள்ளது. பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக, கல்வி அறிவு ரீதியாக பிற்பட்ட நிலையில் காணப்படுகின்ற பல பெற்றோர்கள் பிள்ளைப் பராமரிப்பு குறித்தோ, அவர்களின் உடல்நலம், உளநலம் என்பன குறித்தோ போதிய அறிவைக் கொண்டிருக்கமாட்டார்கள். எனவே முன்பள்ளிச் சிறார்களின் உடல், உள நலப்பாடுகளில் அக்கறை காட்ட வேண்டிய நிலையில் அவர்களின் பெற்றோர்களுக்கும் அவை தொடர்பான பொது அறிவை வழங்குவதில் பொறுப்பேற்க வேண்டிய பங்கு முன்பள்ளிகளுக்கு உண்டு. இவ்வகையில் முன்பள்ளிகளின் செயற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டிய தேவையும் எழுகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்களின் தொழிற்திறன் குறித்த ஐயப்பாடுகள் பல்வேறு அமர்வுகளிலும் கருத்தரங்குகளிலும் தெரிவிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றன. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்பள அளவுத்திட்டம், பயிற்சி என்பன குறித்த ஒழுங்கு முறையான திட்டம் ஒன்று இல்லாதிருத்தலே முன்பள்ளிகளில் ஆசிரியர்கள் ஆழ்ந்த ஈடுபாடும் அக்கறையும் காட்டாமைக்கான காரணங்களாக சொல்லப்படுகின்றன. முன்பள்ளிச் சிறார்களைப் பொறுத்தவரை அவர்களின் பராமரிப்பும் விருத்தியும் முன்பள்ளி ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளன. பிள்ளைகளின் பல்வேறு விருத்திகள் குறித்து பல உளவியலாளர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இக்கருத்துக்களை கோட்பாடு ரீதியில் உள்வாங்கிக் கொள்ள வேண்டியது மட்டுமல்லாது அவற்றை பரிசீலித்துப் பார்க்க வேண்டிய தேவையும் ஆசிரியர்களுக்கு இருப்பதால் அவர்களின் இத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய பயிற்சித் திட்டங்கள் அவசியம்.

முன்பள்ளிகள் குழந்தைகளின் வாழ்க்கைக்கான மகிழ்ச்சிகரமான களங்களாகும். மகிழ்ச்சிக்குரிய சூழ் நிலை முன்பள்ளிகளில் நிலவவேண்டுமாயின் அப்பள்ளிகளில் பொருத்தமான சமூகக் கவிவு நிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். முன்பள்ளி வகுப்புக் கூடத்தையும் வளங்களையும் சுற்றுப் புறங்களையும் தகுந்தவாறு ஒழுங்கமைக்க வேண்டியதும் அவசியம். இந்நிலையில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வளமுகாமைத்துவப் பயிற்சி அவசியமாகின்றது. குழந்தைகளின் உளக் கவிவு நிலை, மன வெழுச்சி நிலை என்பவற்றைப் பொறுத்து வகுப்பறையில் சற்று நெகிழ்ச்சியான முகாமைத்துவத்தை மேற்கொள்ளவும் வேண்டும்.

அவ்வாறு முகாமைத்துவத்தை மேற்கொள்கின்ற போது பல்வேறு கற்பித்தல் உத்திகளிலும் ஆசிரியர்களுக்குப் பாண்டித்தியம் வேண்டும். பல்வேறு வகையான விளையாட்டுக்களில் குழந்தைகளோடு குழந்தையாக சேர்ந்து இயங்கும் மனப்பக்குவம் வேண்டும். முன்பள்ளி வரும் பிள்ளை வீட்டிலிருந்து புறப்படும் போது பெற்றுக் கொண்ட மனவெழுச்சி நிலையிலே தொடர்ந்தும் காணப்படக்கூடும் என்ற புரிந்துணர்வும் அவசியம். பெற்றோர்களுடனும் சுகாதார உத்தியோகத்தர்களுடனும் மருத்துவர்களுடனும் சிறந்த தொடர்புகளைப் பேணி தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திக்கின்ற மனப்பக்குவம் வேண்டும்.

ஏறத்தாள முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே, குழந்தைகளின் முதல் ஆறு வருட வாழ்க்கையில் அவர்களுக்கு கல்வி வழங்கும் பொறுப்பு பெற்றோரைச் சார்ந்தது என கொமேனியஸ் வலியுறுத்தியிருந்தார்.

அன்னையர் தமது குழந்தைகளுக்கு கதைகளைக் கூறி குழந்தைப் பாடல் களையும் பாடிக் காட்ட வேண்டும் எனவும் இவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இன்று, குழந்தைகளைக் கையாளும் போது கவனமாக கை யாள வேண்டும் என்ற வகையில் பெற்றோர்கள் போதிய அடிப்படை அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்பது அறிவுறுத்தப்படுகின்றது. ஆயினும் தமது குழந்தைகளில் நிகழும் மாற்றங்களை உடனுக்குடன் அறியும் வாய்ப்பு பெற்றோர்களுக்கே உள்ளது. எனவே தான் பெற்றோர்க ளையும் ஆரம்பபிள்ளைப் பருவ பரா மரிப்பினதும் கல்வி வழங்கலினதும் பங்காளர்களாகக் கொள்ள வேண்டி யது அத்தியாவசியமாகின்றது. பெற்றோர்களுடனான பங்காண்மை (Partnership) பற்றி சிந்திக்கும் போது பின்வரும் அம்சங்கள் கவனத்தைப் பெறுகின்றன.

- ❊ பிள்ளைகளின் முன்பள்ளிக் கல்வி யில் பெற்றோரின் வகி பங்குஅடிப் படையானது.
- ❊ முன்பள்ளிக்குள் பிரவேசிக்கும் முன்னர் அவர்களின் முன் ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்வியில் பெற் றோர் வகித்திருக்கக் கூடிய வகி பங்கு குறித்த தெரிநிலை முன் பள்ளி ஆசிரியர்களுக்கு அவ சியமானது.
- ❊ முன்பள்ளி மட்டத்தில் தொடரும் கல்வியிலும் அதன் வெற்றிக்கு பெற்றோரின் பங்கு இன்றியமையா தது என்ற விழிப்புணர்வையும் ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டும்.
- ❊ பெற்றோர்கள் முன்பள்ளிகளின் பிடிமானிகள் (Stakeholders) என்ற வகையில் பெற்றோர், ஆசிரியர், பிள்ளைகள் என்பவர்களுடைய கூட்டிணைவை வரவேற்பவர்களாக இருப்பர்.
- ❊ முன்பள்ளிச் சமூகத்தில் காணப் படும் நிபுணத்துவம் வாய்ந்த பெற் றோரை கற்றற் சந்தர்ப்பங்களின் போது பொருத்தமாக பயன்படுத் திக் கொள்ள முடியும்.
- ❊ முன்பள்ளி ஆசிரியர்களும் நிருவா கத்தினரும் முன் பள்ளிகளின் கலைத் திட்டம் குறித்து பெற் றோர்க்கு பல்வேறு வழிகளிலும் அறிவிக்க வேண்டியவர்களாவர்.
- ❊ முன்பள்ளிக்கான அனுமதி நடை முறைகள் குறித்தும் பிள்ளைகளின் முன்னேற்றம், அடைவுகள் என்பன குறித்தும் பெற்றோருக்கு அறிவிக் கப்பட வேண்டும்.
- ❊ முன்பள்ளியில் வழங்கப்படும் பல கற்றல் சந்தர்ப்பங்களுக்கான ஆரம் பம் வீடுகளிலும் இடம்பெற வேண்டும்.

பயிற்சிபெற்ற ஆசிரியர் களால் முன்னெடுக்கப்பட வேண்டிய கற்றல் நிகழ்வுகளை பெற்றோர்கள் முன்னெடுக் கலாமா என்ற ஐயமும் சிலரிடத்தே எழக்கூடும். அந்நிலையில் பெற்றோர் களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட் டங்களையும் விழிப்புணர்வுக் கருத் தரங்குகளையும் ஒழுங்கு செய்ய வேண் டிய பொறுப்பும் முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்போருக்கு உரியதாகின்றது. முன் ஆரம்பபருவ பிள்ளைகளின் பராமரிப்பும் கல்வியும் ஒன்றிலிருந்தொன்று வேறு படுத்திப் பார்க்க முடியாத ஒரு தனியான எண் ணக்கருவாக கொள்ளப்பட வேண்டும் என்ற சிந்தனை நம் எல்லோரிடத்தும் ஏற்படின் முன்பள்ளிக் கல்வி நிலை யங்களின் பங்கும்பணியும் சிறக்க அது வழிவகுக்கும்.

கிராமியத்தில் வாழ்ந்த காலம்.....

திரு. சி. சிவநேசன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
முறைசாராப் பிரிவு,
வலிகாமம் கல்வி வலயம்.

சூரியன் தனது கிரகணங் களால் மெருகூட்டிய பசுமை நிறைந்த கிழக்கு நாடு என் தந்தையின் பிறப் பிடம். அம்மாவின் மடியில் இருந்த காலங்களை நினைவிற் கொள் கின்றேன். அப்பாச்சி, அப்பையா அவர் களின் உடல்கள் மாத்திரமல்ல ஆத்மா வின் அத்தனை ராகங்களும் இசைக்கப்பட்ட களமே கிழக்கு நாடு. உவர் மண்ணும், ஊதற் காற்றும் கால்களை இதமாக்கும் மணற்திட்டி கள் அனைத்தும் பெருமை பெற் றவை. கனிவளம் இறந்து காய்த்துக் குலுங்கும் தென்னஞ் சோலைகள் இவற்றுள் என் ஐந்து வருடத்திற்கு முன்னான காலங்களை பின்னகர்த்தி உங்களுடன் இணை கின்றேன்.

திறந்த மனதுடன் மாத்திர மல்ல கட்டிளம் உடல்களை வியர்வை யூற்றி செழித்தோங்கும் பூமாதாவின் மேனியில் பிஞ்சுக் குழந்தைகளாக கூடியிருக்க பேரன் பேத்தி என்று ஒரு கூட்டத்தில் குழுமியிருந்த காலத்தை எவ்வாறு எழுத்தில் வடிக்க முடியும். கிராமியக் கதைகள் சொல்லும் பொக்கை வாய்கள் சிரித்து மகிழும் வயதுமுதிர்ந்த முகங்கள் அன்றைய குழந்தைகளுக்குக் கிடைத்த பெரும் பாக்கியம். மூதாதையர்களின் அனு பவக் குவியல்கள் பதமாக மடியில் இருத்தியும் முதுகில் சுமந்தும் பரிமாற்றப்பட்ட உறவின் பிணைப்புக் களை எண்ணுகின்றேன். மழலைச் சொற்களை மகிழ்ந்து ஏற்ற மனித உறவுகளை நினைவில் புரட்டிப் பார்க்கின்றேன்.

கொஞ்சித் தேங்காயில் கிலு கிலுப்பை. இன்றும் என் கண்ணிலும் காதிலும் நிலைத்துள்ள தென்னை மட்டையில் என்னை இருத்தி ஊஞ்சல் ஆட்டியதை மறக்க முடியவில்லை. குரும்பட்டியில் தேர் செய்து - மேள தாளம் - எல்லாமே நினைவின் பக் கங்களில் பசுமையாக இருக்கிறது. அம்மா அப்பா விளையாட்டு அடுப்பும் சமையலும் எல்லாமே தென்னந் தோட் டத்தில் இன்றும் நிறைந்து நைந்து கிடைக்கின்றன.

முட்க் கத்தரிக்காயில் மாமா செய்த குருவி என்ன யானைக் குட்டி என்ன கோழிக்குஞ்சு என்ன எல்லாம் இப்போதும் கண்காட்சியாகவே இருக்கிறது.

சோலை அம்மனின் ஆலமர விழுதுகள் குரங்குக் குட்டி போல் எங்களையும் மாற்றி நின்ற போது

மகிழ்ந்த மகிழ்வுகள் இன்னும் குறைய வில்லை. ஆனா, ஆவன்னா, இனா, ஈயன்னா எனறுகைபிடித்து பெரியப்பா மணலில் எழுதிய எழுத்துக்கள் இன்றும் என் கையில் இருக்கிறது. எவ் வளவு பெரிய வீட்டு முற்றம். மாமரங் களும் பலாமரங்களும் போட்டி போட்டுக் காய்த்து பழுத்தபோது பாடிவரும் கிளிகளைப் பார்த்து கை தட்டிக் கதைத்த கதைகள் உயரக் கொப்பில் கூவும் குயிலும் கூடுகட்டிக் குஞ்சு பொரித்த காகத்தையும் இன்றும் பார்க்கின்றேன். ஆனால் மனிதர்களைக் காணவில்லை.

தெருவோர நிழலில் தெம் மாங்கு பாடிச் சென்ற உழைத்து முறுக் கேறியவர்களும் வம்சங்களைத் தேடு கின்றேன். வீட்டில் இருந்து அனுபவங் களைப் பகிர்ந்த எங்கள் உறவுகள் உதிரிகளாக ஊர்விட்டு உழைப்பை விட்டு உடலை மாத்திரம் காவிச் சென்ற காலத்தின் பின் கூடி இன்று வாழும் வாழ்க்கை எல்லாம் செயற்கை யாக இருக்கிறது.

எங்கள் தோட்டத்து முத்துக் கள் எங்களை எப்படி வளர்த் தெடுத்தன. காலையில் காய்ச்சிய கஞ்சி, காற்கட்டை வருமுன் மூக்கைத் துளைக்கும் உழுந்து வாசம், வேலி யில் பசுங்கொடியில் எடுத்த இலை வகை, பயறு துவையல், பனங்கட்டி, கருபநீர் எல்லாம் கண்காட்சியில் போசாக்கு பாடத்தில் படம் போட்டுக் காட்டும் நிலையை எப்படி ஒப்பிட முடியும். ஒடியல் பிட்டும், கூழும், குரக்கன் மாவில் செய்த பணியாரம் எல்லாம் மறந்து வெளிநாட்டுக் காரன் கொடி குடை ஆலவட்டத்துடன் அட்டவணைப்படுத்திக் காட்ட வாய் பிளந்து பைக்கற்றா வாங்கி வாழும் நிலையில் பார்க்கின்றேன்.

ஓடுகிற வாய்க்காலில் ஒல்லித் தேங்காய் மிதக்கவிட்டு போட்டிக்கு ஏந்த வைச்ச நாங்கள். பிளாஸ்ரிக் பேசினில் பிளாஸ்ரிக் கப்பலை மிதக்கவிட்டு ஏங்குகிறோம். ஊமல் கொட்டை எறிந்து ஏந்திய நாங்கள், யார் முந்தி எறியிறது என்று எறிந்த நாங்கள் பந்து எறிய படிப்பிக்கின் றோம். வெட்டிப் போட்ட தென்னங் குத்தி, பனங்குத்தியில் சீசோ ஆடின நாங்கள் சரிந்த கொப்பில் ஏறி துள்ளிக் குதித்த நாங்கள் சீமேந்தால் கட்டி பழக்கி விளையாட வேண்டிய நிலை யில் இருக்கின்றோம். ஊஞ்சல் ஏணி எல்லாமே இரும்பில் என்று வந்து விட்டது. அப்பையா அப்பாச்சியின்ரை முதுகிலை உப்பு சுமக்க ஏறித் திரிந்த காலம். பெரியமாமாவின் காவடி நாங்கள் தான். பங்குனித் திங்கள் காலங்களில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் எங்கள் பள்ளிகூடம் தான். எத்தனை எத்தனை காட்சிகள். அந்த மாதம் முழுவதும் கோயில் காட்சிகள். வீடுகளில் எல்லாச் சிறுசுகளும் கூடி கூத்தாடி மகிழ்வோம்.

பட்டி மாடுகள் பெரிய கொம்பு வடக்கன் வண்டி மாடுகள் சவாரி வண்டில்கள் எங்கள் வாழ்வின் சுகங்களை எப்படி மறக்க முடியும். நாவல் தடியில் பொம்மை கட்டி விளையாடி பொம்மைக்கும் பொம்மைக்கும் கலியானம் செய்து வைச்சனாங்கள். தகரத்தில் மேளம், பூவரசம் இலையில் பீப்பீ எல்லாம் இப்ப பள்ளிக்கூடத்தில் தான் பாடம்படிப்பிக்க வேண்டி இருக்கு. பல்லக்குக் கட்டி ராசா ராணி தூக்கிப் போன காலம் எல்லாம் நினைவின் சுவடுகள்.

எங்களிடம் கூட்டுக் குடும்பங்களில் இருந்த நல்ல பொக்கிசங்கள் தனிக் குடித்தனங்களில் தேடும் பொருளாக மாறத் தொடங்கிவிட்டன. சுயமாக எங்கள் மண்ணில் எங்கள் வீட்டில் இருந்த நாங்கள் அகதியாக புறப்பட்ட காலங்களில் தொலைத்த உறவுகள் சீர்களை சீர்செய்ய முடியாது சிதறிக் கிடக்கின்றோம். வீட்டில் படித்து மகிழ்ந்த நாங்கள் வீட்டைப் பூட்டி படிக்கச் செல்கின்றோம். ஓடி ஆடி உண்டு உறங்கும் வயதில் ஒடுக்கத்துள் ஒன்றாக அடுக்கப்பட்டு அடைக்கப்பட்டு இருக்கின்றோம். அன்புள்ள பெற்றோர்களே உங்கள் மனச்சாட்சியை எங்கள் மனச்சாட்சியை உங்கள் முன் நிறுத்துங்கள். உங்கள் காலங்களை உங்கள் பெற்றோரின் காலங்களுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். ஒருதுண்டு பாண் ஒரு கப் யூஸ். இதுதான் என் பிள்ளையின் சொத்து. இடித்த உரல்கள் கோடியில் குப்புறக் கிடக்கிறது. ஆட்டுக் கல்லு அரைவாசி மண்ணுக்குள் புதைபொருளாக விடைபெற்றுச் செல்கிறது. பொரி மாவும் போச்சுது எள்ளுப்பாகும் போட்டுது. உறியைக் கீறிக் காட்டினாலும் புரியாது. மக்றம் என்றால் மலர்ச் சாடி தூக்கும் அழகுப் பொருளாகி விட்டது.

முன்னே, பாலகர்கள் எப்படி புதிய உலகத்தை நோக்கி நகர்த்த முடியும். நாம் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும். நவீன உலகத்தை நோக்கி உண்மையில் நாம் பிள்ளைகளை முன்னெடுக்கும் பொறுப்பு ஒவ்வொரு தனி மனிதனிடம் உண்டு. இதனை உணர்ந்து எம் எதிர்காலச் சிப்பிகளின் உயர்வுக்கு எம்மாலான பணியை செய்ய நினைப்போமாக.

பிஞ்சு மனம்

செல்வி சைந்தவி பரமேஸ்வரன்
முதலாம் வருடம் கலைப்பீடம்
யாழ். பல்கலைக் கழகம்.

வைகறைப் பொழுதின் வனப்புமிகு காட்சிகள் வண்ணக் குழையலாய் வரவேற்றுக் களுயூட்ட வயல் வரம்புகளினூடே வண்ணத்துப் பூச்சியாக வதனம் அதில் ஒளி மின்ன வாகாக வருகின்ற அந்தச் சின்னஞ் சிறுமி, குளத்தடியில் குந்தியிருந்து குவலயத்தின் குறை தீர்க்கும் குமரக் கடவுளின் சோதரன் விக்கின விநாயகனின் அருட்சந்நிதி அருகே சற்று நிதானித்தாள். பக்தியொடு இரு கரங்களையும் கூப்பியவாறு,

"அப்பனே! பிள்ளையாரப்பா, இன்றைக்கும் உனக்கு ஒரு தேவாரமும் புராணமும் பாடுவன். அதற்குப் பதிலாக என்னை நீ பாது காக்க வேண்டும். பாடசாலையில் கெட்டிக்காரி என்று பெயரெடுக்க வேண்டும்; கவனமாகப் படிக்க வேண்டும். எனக்கு உங்களில் நல்ல நம்பிக்கை சாமி தயவு செய்து காப்பாற்றுங்கோ, என்ன?"

என்று அவசர அவசரமாகவும் அன்பாகவும் இறைஞ்சியவாறு பள்ளி நோக்கிப் புறப்படுகின்ற அந்தப் பிஞ்சுக் குழந்தைதான் **தாரணி**. அந்தக் கிராமத்துப் பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி பயிலும் மாணவி அவள்.

வெள்ளைச் சீருடையில் வெண்புறாவாய்ச் சிறகடித்துச் செல்லும் அந்தச் சின்னஞ் சிறுமியின் உள்ளம் கூடக் கள்ளமில்லா வெள்ளை உள்ளம் தான். ஆனால் அவளது குடும்பப் பின்னணியோ இருள் சூழ்ந்த பாலைவனம். கோர யுத்தத்தின் கொடூரமான அனர்த்தத்தில் தந்தை யைப் பறிகொடுத்த தாரணி அப்போது தான் 'குறுகுறு நடை நடந்து குதலை மொழி பேசி மனதை மயங்க வைக்கும் மழலைப் பருவத்தில் தடம் பதித் திருந்தாள். பெயர் பெற்ற வியாபாரி யாக நிறைவான செல்வச் செழிப்பில் தன் குடும்பத்தை வண்ணமுறக் காத்துநின்ற அன்புக் கணவனின் பேரி ழப்பினைத் தாங்கமுடியாது நடைப் பிணமாகிய தாரணியின் தாயார் இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பது தன் அருமை மகளுக்காக மட்டுமே.

வளம் மிகுந்திருக்கும்போது ஏற்றிப் போற்றும் இவ்வுலகம், அதை இழந்து ஏதிலிகளாகிவிட்டாலோ ஓடி ஒளிந்து விடுகின்ற பண்பு இயல்பானதே. இந்த மாபெரும் உண்மை தாரணியின் வாழ்விலும் பொய்த்து விடவில்லை. உறவுகளை இழந்து உழைக்கும் வழி புரியாமல் தடுமாறிய அன்னை நாள டைவில் மானத்தோடு வாழ்வதற்கு

நேர்மை ஒன்றே போதும் என எண்ணிய வராய் உறுதியான உள்ளத்துடன், 'செய்யும் தொழிலே தெய்வம்' எனும் வாக்கினை நினைவு கூர்ந்து, கூலிக்கு வேலை செய்து தமது வாழ்க்கையை நடாத்தும் வழியைத் தெரிவு செய்தார்.

நாளாந்தம் மெய் வருத்தி உழைத்து, கிடைக்கின்ற சொற்ப பணத்திலே இரு ஜீவன்கள் மானத்தோடு உயிர் வாழ்ந்தன. பெண் களாகிய எங்களுக்குக் கல்வி ஒன்றே எங்கும் எப்போதும் கைகொடுக்கும் தோழன் என்ற உண்மையைத் தன் மகளுக்கு ஊட்டி வளர்த்து உரிய பருவத்தில் அருகிலிருந்த பாடசாலை யில் தாரணியின் கல்விப் பயணத்தைத் தொடக்கி வைத்தார் அவளது அன்னை.

ஏழை, எளியவர்கள் என்றாலே எள்ளி நகையாடும் பண்பு எம்மில் பலருக்கு சுயமாகவே உண்டு என்பது மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயம். அதிலும் படித்த, பட்டங்கள் பல பெற்ற 'பெரிய மனிதர்கள்' கூட இத்தகைய பண்பினைக் கொண்டிருக்கும் போது சிறியவர்கள் எம்மாத்திரம்? ஆம்! தாரணியின் கல்விப் பாதையிலும் சிற்சில தடங்கல்கள் நெருஞ்சிகளாய் ஏற்படத்தான் செய்தன.

துள்ளித் திரிகின்ற பள்ளிப் பருவத்துச் சின்னஞ் சிறுமியான தாரணி படிப்பிலும் விளையாட்டிலும் மட்டுமன்றி இதர துணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் கூட மிகுந்த ஆர்வ முடையவள். பாடசாலையிலே தாரணி யின் வகுப்பாசிரியை மிகவும் கனி வானவர். ஏழ்மையிலும் திறமையான, கீழ்ப்படிவான மாணவியாகிய தாரணி யிடம் அவருக்கு ஒரு தனிப்பட்ட பிரியம் அவளுக்குப் புரியாத எந்தப் பகுதிகளையும் இலகு வழியில் புரியும் விதத்தில் கற்பிப்பார். நன்றாகப் படித்து பரீட்சையில் அதிக மதிப்பெண்கள் பெற்று சிறப்பாகச் சித்தியெய்த வேண்டும் என்று அவளுக்கு அன்பாக அறிவுரை கூறுவார்.

பாடசாலையிலே தாரணிக்கு வேதனையையும் அச்சத்தையும் அளித்த ஒரே ஒரு விடயம் அவளது ஆங்கில பாட ஆசிரியையினதும் அவ ரது மகனதும் நடவடிக்கைகளே. பள்ளியிலே அனைத்து ஆசிரியர் களுமே பிரியமாகக் கவனித்த தாரணியை ஆங்கில ஆசிரியையோ மிகவும் அலட்சியமாக நடாத்தியமை அந்தப் பிஞ்சு உள்ளத்திற்குப் புரியாத புதிராகவே இருந்தது.

அந்த ஆங்கில ஆசிரியையின் மகன் டிலுக்ஷன் தாரணியின் வகுப் பிலேயே கல்வி கற்பவன். ஓர் ஆசிரி யையின் மகனான தன்னைவிடத் தாரணி திறமையானவளாக இருந் தமை, அதிலும் மிகவும் ஏழ்மை நிலையிலே இருக்கின்றமை அந்த மாணவனுக்குத் தாரணி மீது கோபத் தையும் பொறாமையையும் தோற்று வித்தது போலும் அதனால் அவன் தாரணியைப் பல்வேறு வழிகளிலும் ஏளனம் செய்து துன்பத்திற்குள் ளாக்கினான்.

அதுமட்டுமன்றி 'ஆசிரியையின் மகன்' என்ற ஒரே காரணத்துக்காக அவனது நண்பர்களான சக வகுப்பு

மாணவர் சிலரும் அவனுடன் சேர்ந்து தாரணியை எப்போதும் எள்ளி நகையாடுவது வழக்கமாயிற்று. எங்கு கண்டாலும் அவளை 'கூலிக்காரி! கூலிக்காரி!' என்று கூவி அழைப்பதும் அதற்குப் பின்னணி போல் நண்பர்கள் கை கொட்டிச் சிரிப்பதும் தாரணியின் பூமனதில் அம்பெனப் பாய்ந்து குருதியைப் பீறிடச் செய்தன முகம் சிவந்து போவாள் தாரணி. எரிமலையாக நெஞ்சுவரை குமுறிவரும் கோபத்தைப் பெரும் சிரமப்பட்டு விழுங்கிக் கொள்வாள்.

'இல்லை, நான் இப்போது நிதானத்தை இழக்கக் கூடாது. பொறுமையாக இருக்க வேண்டும். இவர்களுக்கெல்லாம் ஒரு பாடம் கற்பிக்கத்தான் வேண்டும். நன்றாகப் படித்து புலமைப் பரிசிற் பரீட்சையிலே அகில இலங்கை ரீதியில் சிறந்த மாணவியாக வரவேண்டும். முடியுமா என்னால்? ஏன் முடியாது நிச்சயமாக முடியம் முயன்றால் முடியாதது எதுவுமில்லை'

இவ்வாறு தன்னுள்ளே திட சங்கற்பம் பூண்டு கோபத்தையெல்லாம் கல்வியிலேயே தீவிரப்படுத்திக் கொள்வாள் தாரணி.

மாணவர்களின் கேலி, கிண்டல், ஒரு புறமிருக்க, டிலுக்ஷன் தாரணியைப்பற்றி வேண்டாத அவதூறுகளைத் தனது தாயிடம் கூறி அவளைப் பற்றித் தப்பான அபிப் பிராயத்தை உருவாக்கினான். இதன் பெறுபேறாக, வகுப்பில் ஆங்கில பாடவேளையில் அநேகமாக உருள்வது தாரணியின் தலைதான். ஆசிரியையின் கோபத்துக்கு ஆளாகும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இதயத்தை அமுக்கி அவளது கண்களைக் கலங்கச் செய்கின்ற துன்ப உணர்வைத் தாளமுடியாமல் அவள் குனிந்த தலை நிமிராது மௌனமாகக் கண்ணீர் வடிப்பாள். இவ்வாறான செயற்பாடுகள் அந்தப் பிஞ்சு உள்ளத்தில் அழியாத வடுக்களாக இடம்பிடிப்பதை யாரறிவார்??

அன்றும் வழமை போன்றே பாடசாலையில் பாடங்கள் யாவும் ஒழுங்காக நடை பெற்றன. ஏனோ தெரியவில்லை, டிலுக்ஷன் பாட சாலைக்கு வரவில்லை. இறுதிப் பாடவேளை ஆங்கிலம். அதற்கான மணி ஒலித்ததும் தாரணியின் மனமோ பயத்தில் பந்தயக் குதிரையின் வேகத்தை எட்டியது. ஆனால் வழமைக்கு மாறாக அன்றைய தினம் அமைதியாகவே கழிந்தது. ஆசிரியையின் கனிவாக பார்வைகள் கூட ஓரிரு முறைகள் அவளைத் தழுவியமை அதைவிடப் பெரும் அதிசயமாக இருந்தது. பாடசாலை இறுதி மணி ஒலித்ததும் ஆசிரியை, 'தாரணி! ஸ்கூல் விட்ட பிறகு என்னைச் சந்தித்து விட்டுப் போங்கோ' என்று கூறியதும் அவளது மனதில் மீண்டும் பயத்தின் ரேகைகள் படிந்து கொண்டன. 'இது தான் புயலுக்கு முன் நிலவும் அமைதியோ?' என்றவாறெல்லாம் எண்ண அலைகள் தோன்றின.

'கடவுளே! ஒரு பிரச்சனையும் இருக்கக் கூடாது' என்று வேண்டி இறைவனைத் துணைக்கு அழைத்தவாறு இதயம் படபடக்க ஆசிரியர் அறையினுள் நுழைந்த தாரணியிடம், 'உம்மட அம்மா என்ன வேலை செய்கிறா?' என்று வினவிய

ஆசிரியைக்கு,

'கூலி வேலைதான் ரீச்சர்' என்று விடை பகன்றாள் அவள் தொடர்ந்தும் ஆசிரியை,

'கூலி வேலையென்றால் கூலி குறைவாய்த்தானே இருக்கும்? எப்படிச் சமாளிக்கிறீங்கள்?' என வினவ,

இன்றைக்கு என்ன, ரீச்சர் சம்பந்த மில்லாத கேள்விகள் எல்லாம் கேட் கிறா என்று தன்னுள்ளே அதிசயித் தவாறு,

'ஓம் ரீச்சர் கஷ்ரம்தான் ஒவ் வொரு நாளும் வேலையும் கிடைக்காது. என்னுடைய அம்மா பாவம். எனக்காகத்தான் இவ்வளவு கஷ்ரப்பட்டு வேலை செய்கிறா. மிகவும் சிக்கனமாகத் தான் இருக்கிறம்'

'அப்ப உமக்கு உம்மட அம் மாவை வடிவாக வச்சுப் பார்க்க வேணும் என்று ஆசை இல்லையோ?'

'ஏன் இல்லை ரீச்சர்? என்னுடைய மிகப் பெரிய ஆசையே அதுதானே. அம்மா பாவம் முந்தி அப்பா இருக்கேக்க நல்ல சந்தோஷ மாக இருந்தவவாம். இப்ப எந்த நேரமும் அவவின்ர முகத்தில ஏதோ ஒரு ஏக்கம் இருக்கும். அதெல்லாம் மாறி, நான் என்னுடைய அம்மாவை நல்ல சந்தோஷமான முகத்தோடை பார்க்க வேணும். அம்மாவின்ரை ஒரே ஆசை, நான் நல்லாப் படிச்சு பெரிய ஆளாக வரவேணும் என்றதுதான். அதுக்காகத்தான் அம்மா தன்னுடைய உடல் நலத்தைக் கூடப் பார்க்காமல் கஷ்ரப்பட்டு உழைக்கிறா. அம்மா வுடைய ஆசையை நிறைவேற்றிறது தானே ரீச்சர் என்னுடைய கடமை? இதை நான் நல்லா உணர்ந்திட்டன். எங்களுக்குக் கல்விதான் முக்கியம். அதற்காக நாங்கள் எவ்வளவு கஷ்ரப்படவும் தயாராகி விட்டோம்.

.....நாங்கள் ஒரு நாளில் ஒரு நேரச் சாப்பாடு மட்டுமே சாப்பிட்ட நாட்கள் எத்தனையோ. இரவிலும் குப்பி விளக்கின்ர மங்கல் வெளிச் சத்தில் நீண்ட நேரம் படிக்க ஏலாது என்றதற்காக பள்ளிக்கூடம் முடிஞ்சு வீட்டுக்குக் போனவுடன் பகல் நேரத்தி லேயே முடிந்தவரை பாடங்களைப் படித்து விடுவேன். பிறகு காலை வெளிச்சத்திலயும் கொஞ்ச நேரம் படிப்பேன். என்னுடைய ஆசை அம்மாவின்ர கனவை நான் எப்படி யாவது நனவாக்கவேணும். அது மட்டுமே என்ர ஒரே இலட்சியம் ரீச்சர்'

ஏதோ ஒரு வேகம் உள் ளத்தை உந்தித்தள்ள, விழித்திரை யில் நீர் கோர்த்து கண்கள் வழியே கண்ணீர் கோடிட, தன் பிஞ்சு நெஞ் சத்தின் துன்பச் சுமையினை அந்தச் சின்னஞ்சிறுமி தளுதளுக்கும் குரலில் உறுதியாகக் கூறக் கூற, ஆசிரியை யின் கண்களிலும் கண்ணீர்!

'ரீச்சர்! ஏன் ரீச்சர் நீங்கள் அழுறீங்கள்?' என்று அவள் இழுக்க

'இல்லையம்மா..... தாரணி! முதலில் என்னை நீ மன்னிக்க வேணும்' என்று தயவான குரலில் ஆசிரியை வேண்டுகோள் விடுத்ததும் அதிர்ந்து விட்டாள் தாரணி.

'இல்லை.....ரீச்சர்.....நீங்கள் என்னட்டை மன்னிப்பா? அச்சச்சோ.....! அதெல்லாம் கூடாது ரீச்சர். நான் எவ்வளவு சின்னப்பிள்ளை. நீங்கள் என்ர ரீச்சர்.....? என்று கூறிச் சென்ற தாரணியை ஆசிரியை இடைமறித்தார்.

'தாரணி! பொறு நான் சொல்லப் போறதைக் கொஞ்சம் அமைதியாகக் கேளம்மா? என்று கூறிய

அவர் மேலும் கூறத் தொடங்கினார். "இந்தப் பாடசாலையிலே அதிபர், ஆசிரியர்கள், ஏன்? மாணவர்கள் எல்லோருமே பிரியமாகக் கவனிக்கின்ற உன்னை நான் தப்பாகக் கணித்து விட்டேன். எனது தவறான அபிப்பிராயத்துக்குக் காரணம் உன் வகுப்பிலேயே ஒன்றாகப் படிக்கின்ற எனது மகன் டிலுக்ஷன் உன்னைப் பற்றிக் கூறிய சில தேவையற்ற முறைப்பாடுகளே. அடிக்கடி உன் மீது கோபம் வரக்கூடிய பல கதைகள் கூறுவான். ஆரம்பத்தில் நான் அவற்றை நம்பவில்லை. ஏனெனில் என் வகுப்பில் நீ ஒழுங்காக, அமைதியான மாணவியாகவே இருந்தாய் இதைக் கூறியபோது அவனோ,

'அவளுக்கு உங்களைக் கண்டாலே சரியான பயம் அதுதான் நல்ல பிள்ளை மாதிரி இருக்கிறாள்' என்று காரணம் கூறினான். இப்படியே காலம் செல்ல, தவணைப் பரீட்சை வந்தது. ஆங்கில பாடத்தில் மட்டும் நீயும் டிலுக்ஷனும் ஒரே புள்ளிகள் பெற்றிருந்தீர்கள். ஏனைய பாடங்கள் யாவும் அதிகூடிய புள்ளிகள் உனக்குத்தான் உடனே நான் என் மகனிடம்,

'பார்த்தாயா, தாரணியைப் பற்றி இல்லாத கதைகள் எல்லாம் கூறுவாயே. இப்போது பார், உன்னை விட அவள் தானே கெட்டிக்காரி?' என்று கேட்டேன். அப்போதுஅவன் சொன்ன விடயம் தான் உன்மீது எனக்கு அளவு கடந்த கோபத்தை உண்டு பண்ணியது.

'அம்மா, உங்களுக்கு ஒன்றும் தெரியாது தாரணி எனக்குப் பக்கத்திலதான் சோதினைக்கு இருப்பா. தான் படிச்சதையும் எழுதி மிச்சத்துக்கு என்ர பேப்பரைப் பார்த்தும் எழுதுவா. வேணுமெண்டால் ரெண்டு பேரின்ரயும் ஆங்கிலப் பேப்பரை எடுத்துப் பாருங்கோ' என்று விட்டேற்றியாகக் கூறினான்.

நானும் பரபரப்புடன் இருவரது விடைத்தாள்களையும் எடுத்துப் பார்த்தால் அவன் சொன்னது போலவே ஒரே மாதிரியான விடைகளும் பிழைகளும் இருந்தன. அதன் பின்புதான் நான் உன்னிடம் கடுமையாக இருக்க ஆரம்பித்தேன்.

இதில் என் தவறு அதிகம் என்றே கூறவேண்டும். எனது மகன் கூறியதை தாயுள்ளமான என் மனம் சிறிதும் சந்தேகிக்காது ஏற்றுக் கொண்டுவிட்டது. உண்மையில் நான் இவ்விடயத்தைப் பற்றி உனது வகுப் பாசிரியையுடன் கலந்து ஆலோசித் திருந்தால் உண்மை தெளிவாகப் புலப்பட்டிருக்கும். உன் பேப்பரைப் பார்த்து அவன் தான் கொப்பியடித் தான் என்று அறிந்திருப்பேன். ஆனால் அதைச் செய்யத் தவறிவிட்டேன்.

அடுத்து, இந்தச் சிறிய வயதில் என் மகனுக்கு இவ்வளவு கெட்டகுணம் ஏற்படுவதற்கும் பெரும்பாலும் நானே காரணமாகி விட்டேன். ஏனெனில், எப்போதும் அவனிடம்,

'தாரணியைப் பார் அவ்வளவு கஷ்ரத்தின் மத்தியிலும் எவ்வளவு கெட்டிக்காரியாகப் படிக்கிறாள். நல்ல பிள்ளை எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசும் எடுக்கிறாள்.

உனக்கு இங்கை என்ன வசதிக் குறைவு? கேட்டதெல்லாம் உடனுக் குடன் வாங்கித் தந்து எவ்வளவு செல்லமாக உன்னை வளர்க்கிறம். உனக்கு வேற என்ன வேலை? படிக்கிறது மட்டும் தானே? ஒரு முறையாவது உன்னால் முதலாம் பிள்ளையாக வரேலாமல் தானே இருக்கு?' என்றவாறெல்லாம் கூறுவேன்

அவன் நன்றாகப் படிக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில் நான் கூறிய இவ்வார்த்தைகள் அவனது கள்ளமற்ற உள்ளத்தில் சிறிது சிறிதாகக் கறையினை ஏற்படுத்தி விட்டது. உன் மீது பொறாமை கொள்ளக் காரணமாயிற்று.

இப்போது கூட இந்த உண்மை எனக்குத் தெரிந்திருக்காது. நேற்றுப் பின்னேரம் வீட்டுக்கு வந்த திருந்த நண்பனுடன் டிலுக்ஷன் கதைத்த சில கதைகளைத் தற்செயலாக நான் கேட்க நேர்ந்துவிட்டது. பின்னர் அவனை மிரட்டி எல்லா விபரங் களையும் அறிந்து மிகவும் வேதனைப் பட்டேன். அவனுக்கு நல்ல தண்டனை யும் கொடுத்துவிட்டேன். தன் பிழையை உணர்ந்து விட்டான். உன்னைப் பார்க்கவே தனக்கு வெட்கமாக இருக் கிறது என்று சொல்லி இன்றைக்கு ஸ்கூலுக்கு வர மறுத்துவிட்டான். ஆனால் இப்போது உன்னிடம் மன்னிப்புக் கேட்க வருவான். நான்தான் சொன்னேன், ஸ்கூல் விட்ட பிறகு உன்னைக் கூப்பிட்டுக் கதைக்கப் போகிறேன் என்று....." "அதோ! அவனே வந்துவிட்டானே!"

என்ற ஆசிரியையின் உற்சாகக் குரலைத் தொடர்ந்து திரும்பிய தாரணிக்கோ ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. நீண்டதொரு கனவிலிருந்து திடுமென விழித்துக் கொண்ட உணர்வு! நான் காண்பது கனவல்லவே? நிஜம் தானே? எனத் தனக்குள் எண்ணியவாறு சுற்றுமுற்றும் அவசரமாகப் பார்வையைச் சுழல விட்டாள்.

கண்களில் நீர் மல்கப் பரி தாபமாக அவளைப் பார்த்த அந்தச் சிறுவனைக் காண்கையில் தாரணிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை அவளது கண்களிலும் கண்ணீர்! மெல்ல அவளை நெருங்கிய,

'தாரணி! நான் செய்த தப்பெல்லாம் உணர்ந்து திருந்தி விட்டன். இனிமேல் இப்பிடியெல்லாம் யாரையுமே வேதனைப்படுத்த மாட்டன். தயவு செய்து என்னை மன்னிப் பீங்களா?'

திக்கித் திணறி டிலுக்ஷன் கேட்பதற்குள் தாரணி,

'இல்லை டிலுக்ஷன் இப்பிடியெல்லாம் மன்னிப்புக் கேட்கத் தேவையில்லை. நாங்கள் சின்னப் பிள்ளைகள் தானே? தவறு செய்யிறது வழக்கம் தானே. அதை உணர்ந்து திருந்திவிட்டால் பிறகென்ன? நான் அதையெல்லாம் மறந்திட்டன். எல்லாரும் நல்ல பிள்ளைகள் தான் என்ன? அழாதேங்கோ. இனிமேல் நாங்கள் கவனமாகப் படித்து நன்றாகப் பரீட்சை எழுதி எங்கட ஸ்கூலுக்குப் பெருமை சேர்த்துக் குடுக்க வேணும் என்ன? அதுதானே எங்கட அம்மா, அப்பா வைக்கும் சந்தோஷம் செய்வீங்களா?"

என வினவ, அவனும்

'ஓம் தாரணி நிச்சயமாக நாங்கள் எல்லாரும் ஒற்றுமையாக இருந்து பெரிய சாதனை எல்லாம் செய்யவேணும்'

என்று மகிழ்ச்சியுடன் ஆமோதித்தான்.

'தாரணி! இவ்வளவு சின்னப் பிள்ளையாக இருந்து கொண்டு எவ்வளவு புத்திசாலித்தனமாய்க் கதைக்கிறாயம்மா. கெட்டிக்காரி இனிமேல் என்ன கஷ்ரம் வந்தாலும் நான் பிள்ளைக்கு உதவி செய்வன். எனக்கு டிலுக்ஷன் மாதிரி நீயும் ஒரு பிள்ளைதான். பயப்பிடாமல் வெட்கப் படாமல் என்னோட கதைக்கோணும். சரியா? பழசெல்லாம் மறந்திடவேணும். என்னோட கோபமா தாரணி?'

என்ற ஆசிரியையிடம்

'ரீச்சர்! என்ன ரீச்சர் இப்பிடிக் கேக்கிறீங்கள்? நான் ஆரோடையும் கோபமில்லை. இப்பிடியெல்லாம் இனி நீங்கள் என்னோடை கதைக்கக் கூடாது'

என்றாள் உரிமையும் சலுகையுமாக.

ஆசிரியையின் மனதிலோ இன்ப நெகிழ்ச்சி இந்தக் காலத்துச் சின்னப் பிள்ளைகளுக்குப் புத்திக் கூர்மை மிக அதிகம்தான் என்று மனதினுள் எண்ணியவாறு,

'சரியம்மா தாரணி நன்றாக நேரம் போய்விட்டது. உங்கட அம்மா தேடப் போறா போட்டு வாங்கோ நாளைக்கு சந்திப்பம்'

என்ற ஆசிரியையிடமும் டிலுக்ஷனிடமும் மகிழ்வுடனும் மன நிறைவுடனும் விடைபெற்ற தாரணி ஆனந்தமாகத் துள்ளிக் குதித்தவாறு வீடு நோக்கி விரைந்தாள்.

ஆம்! அவள் இனி முழுமூச்சுடன் கல்வி கற்பதற்குத் துணைபுரிய அனைவருமே திரண்டு விட்டனரே! அவளது வெற்றி நிச்சயம் தான். தாரணியின் மனதிலே என்றுமில்லாத சந்தோஷச் சாரல் குளிர்மையாகப் பரவியது. யாவரது உள்ளங்களையும் கொள்ளை கொண்ட இந்தச் சின்னஞ் சிறுமியின் கண்முன்னே அவளது எதிர்காலம் பசுமையாக விரிகிறதோ....?!!

மரங்கொத்தியும் பச்சைக்கிளியும்

திருமதி மா. மாசிலாமணி
மு/ சிலாவத்தை றோ.க.பா
முல்லைத்தீவு.

அது ஒரு மாமரத்தோப்பு. தோப்பிலுள்ள மரத்தில் மரங்கொத்தி ஒன்று தனது நீண்ட அலகினால் கொத்திக் கொண்டிருந்தது. அந்த மாமரத்தின் பழங்களை உண்பதற்காக எங்கிருந்தோ வந்த ஒரு பச்சைக்கிளி மரங்கொத்திக்கு எதிரேயிருந்த ஒரு கிளையில் அமர்ந்தது.

பச்சைக்கிளி வந்திருந்ததைக் கவனியாத அந்த மரங்கொத்தி மரத்தில் கொத்திக் கொண்டிருந்தது. பச்சைக்கிளி கீ... கீ... என்று கத்தியது. அப்போது மரங்கொத்தி கிளியைப் பார்த்துவிட்டுத் திரும்பவும் மரத்தைக் கொத்தியது. கிளி மரங்கொத்தியின் செயலைப் பார்த்துவிட்டு ஏளனமாகச் சிரித்தது.

மரங்கொத்தி கிளியைப் பார்த்தது. கிளி திரும்பவும் சிரித்தது. "என்ன கிளியாரே ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றீர்?" என்றது மரங்கொத்தி. "மரங்கொத்தியாரே நீர் உமது நீண்ட அலகை மரத்திலே கொத்தி வீணாக உடைப்பதைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பு வந்தது. அதுதான் சிரித்தேன்" என்று கிளி கூறியது.

கிளி தன்னை ஏளனஞ் செய்கின்றது என்று எண்ணிய மரங்கொத்தி "கிளியாரே நான் இப்படி மரங்களில் பொந்தை உருவாக்குவதற்காகவே இப்படியான நீண்ட சொண்டை இயற்கை எனக்குத் தந்துள்ளது" என்றது.

கிளி திரும்பவும் சிரித்துவிட்டு "மரங்கொத்தியாரே நீர் உம்முடைய சொண்டை இந்த மரத்திலே போட்டு உடைக்கிறதைப் பார்த்ததும் உமக்கு மூளையில் ஏதோ குறைபாடு இருக்கின்றது" என்று எனக்குத் தோன்றுகின்றது என்றது ஏளனமாக.

மரங்கொத்திக்குக் கோபம் வந்தது. ஆயினும் தன் கோபத்தை அடக்கியபடி "கிளியாரே எனக்கு மூளைக்குறைபாடு எதுவுமில்லை. ஆனால் நீர் கொஞ்சம் சிந்தித்துக் கதைத்தால் உமக்கு இது விளங்கும்" என்று மரங்கொத்தி கூறியது. மரங்கொத்தியின் இந்தப் பதிலைக்

கேட்ட கிளி "எனக்கு எல்லாம் விளங்கும். ஆனால் உம்மைப் போல ஒரு முட்டாள் இந்த உலகத்தில் யாருமே இருக்கமாட்டார்கள். தன்னுடைய சொண்டை யாராவது உடைப்பார்களா?" என்று மீண்டும் ஏளனஞ் செய்தது.

கிளியின் இந்த வார்த்தையைக் கேட்ட மரங்கொத்தி சற்றுக் கோபமாகக் கிளியைப் பார்த்தது. கிளியின் முகத்தில் பயத்தின் அறிகுறி தென்டபட்டது. ஆயினும் தனது பயத்தை வெளிக்காட்டாத கிளி மீண்டும் மரங்கொத்தியை ஏளனஞ் செய்தது.

"ஏய் மரங்கொத்தியரே ஏன் கோபிக்கின்றீர்? நான் சொல்வது உண்மைதானே. சும்மா இருக்கமுடியாமல் சொண்டை உடைப்பது விசர் வேலைதானே? பாரும் எனது சொண்டுஎவ்வளவு அழகாக இருக்கின்றது" என்று கிளி தனது சொண்டின் அழகைப் பற்றிபெருமை பேசிக் கொண்டிருந்த போது மரங்கொத்தி ஒன்றுமே பேசாது தனது வேலையைச் சரிவரச் செய்து விட்டு அங்கிருந்து பறந்து சென்றது.

கொஞ்ச நாட்களின் பின்பு மரங்கொத்தி உருவாக்கிய அந்த மாமரப் பொந்துக்குள் அந்தப் பச்சைக்கிளி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்துத் தனது குஞ்சுகளோடு வாழ்ந்து வந்தது.

ஒரு நாள் கிளி தனது குஞ்சுகளுக்கு இரை கொடுத்துக் கொண்டிருந்த போது அதே மரங்கொத்தி அந்த இடத்திற்கு வந்தது. அதைப் பார்த்த பச்சைக்கிளி பயப்படத் தொடங்கியது.

"மரங்கொத்தியாரே இது உம்முடைய இடம் என்று தெரிந்ததும் நான் இதற்குள் எனது கூட்டை அமைத்துவிட்டேன். என்னையும் என் பிள்ளைகளையும் ஒன்றும் செய்துபோடாதீர்" என்று நடுங்கியவாறு கூறியது.

பச்சைக்கிளியின் நிலையைப் புரிந்து, மனதுக்குள் சிரித்த மரங்கொத்தி, கிளி மீது இரக்கம் கொண்டது. "கிளியாரே வருத்தப் படாதீர். அன்று இந்தப் பொந்தினை நான் உருவாக்கியபோது என்னை ஏளனஞ் செய்தீர் இப்போது பார்த்தீரா? நான் உருவாக்கிய பொந்தினை இப்பொழுது நீர் உமக்கும் உமது பிள்ளை களுக்குமான வசிப்பிட மாக்கிவிட்டீர். இதற்காக உம்மை நான் கோபிக்க மாட்டேன். நான் இப்படி மரங்களில் பொந்துகளை உருவாக் குவது எனக்காக அல்ல. உங்களைப் போல் பொந்தை உருவாக்கத் தெரியாத எங்களின் இனத்திற்காகத் தான் என்பதை நீர் உணர்ந்து கொண்டால் நல்லது" என்று விளக்க மளித்தது மரங்கொத்தி.

கிளியின் குஞ்சுகள் தாயின் முகத்தை நோக்கின. தாய்க்கிளி வெட்கத்தால் தலையைத் தொங்கப் போட்டபடி "என்னை மன்னித்துக் கொள்ளும் மரங்கொத்தியாரே. நாங்கள் அழகையும் சொகுசையும் விரும்புவதனால் எந்தப் பயனும் இல்லை. எங்களுக்கு ஒரு இருப்பிடத்தை எம்மால் அமைக்க முடியாத இந்த அழகும் சொகுசும் எங்களுக்கு வெறும் கவர்ச்சி மட்டுந்தான். எங்களுக்கென்று ஒரு வாழ்விடத்தைஉருவாக்க முடியாத நான் உம்மை ஏளனஞ் செய்ததற்காக மீண்டும் உம்மிடம் மன்னிப்புக் கேட்கின்றேன்" என்று பச்சைக்கிளி தனது அறியாமைக்காக வருத்தப்பட்டது.

கிளியின் மனக்குமுறலையும் வேதனையையும் புரிந்தோ என்னவோ கிளியின் குஞ்சுகள் பொந்துக்குள் இருந்து கீக்கீ... கீக்கீ... என்று குரல் எழுப்பின. தாய்க்கிளியினதும் குஞ்சுகளினதும் பரிதாபநிலையைப் புரிந்த மரங்கொத்தி அவற்றை மன்னித்துவிட்டதற்கு அடையாளமாக அங்கிருந்து பறந்து சென்று வேறொரு மரத்தில் இருந்து புதியதொரு பொந்தை உருவாக்கத் தொடங்கியது. அது தனக்காக அல்ல. தனது இனத்திற்காக.....

Kavi Photo & Video.

Kalee Kovilady
Maddwil east
Chavakachcheri.
T.P 0779228801.
T.P 0776166870.

கமரா போட்டோ

அல்பம்

வீடியோ